

‘பப்ளிசிட்டி’யும் பரமசிவன் கழுத்துப் பாம்பும்

இந்தியாவின் நயவஞ்சக இராஜதந்திரம்




செப்ரெம்பர் 25- ஒக்டோபர் 01, 2011 September 25 - October 01, 2011 பக்கங்கள் -28 25.00

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சுடர் ஒளி

THE SUDAROLI

வாரமலர்






# போரா அமைதியா?

கொக்கிளாய் ஒரு பிள்ளையார் சுழி

பணிய மறுத்த குருத்து

# பணிய மறுத்த குருத்து



அன்புடைய சுடர் ஒளி ஆசியருக்கு

கால வேகம் நம் வழமையான காரியங்களைக்கூட செய்வதற்கான அவகாசத்தைத் தராமல் போகின்றது. இடை வெளியில்லா அவசியங்களும், அவசரங்களும் சமூகம் பற்றிய கரிசனையற்ற நம்மிடையே உற்பத்தி செய்ய விளைகின்றன. இவ் அசுர வேக வாழ்க்கைப் பயணிப்பு வாராந்தம் ஒரு கட்டுரை எழுதுவதற்கான தேடலைக்கூட கட்டுப்படுத்தி விடுகின்றது. பொதுவெளியில் எழுதுவதற்கும், பேசுவதற்கும் எவ்வளவோ விடயங்கள் இருப்பினும், மூச்சற்ற மனிதர்களாக்குவதற்கான திட்டமிடப்பட்ட கல்வி முறை, நம்மை எதையும் செய்வதற்கான நேரத்தை தாரை வார்த்துக் கொள்கின்றது.

இந்நிலையில் வாராந்தக் கட்டுரைக்கான தேடலை நடுச் சாமம் நேரத்தில் தேடத் தொடங்கியிருந்தேன். எப்போதும் போல முதல் விரல் அழுத்தத்தில் கைகளுக்குள் வரும் தமிழ் இணையத்தளங்கள் ஒரு பரபரப்புச் செய்தியை மினுமினுத் துக் கொண்டிருந்தன. அத்தோடு அச்செய்தியுடன் தொடர்புபட்ட வீடியோ துண்டொன்றும் இணைக்கப்பட்டிருந்தது.

'சிங்கள அமைச்சர் காலில் விழ மறுத்த தமிழ்ச் சிறுவன்'.

'மறுபிறப்பென்பது இது தானோ? தமிழினத்துக்கு இவன்தான் தலைவணங்காத் தமிழன்'.

'அமைச்சரின் காலில் விழ மறுத்த முல்லை மாணவன் சேதுராகவன்'.

'சிங்கள அமைச்சரின் காலில் விழுந்து வணங்க மறுத்த முல்லை மாணவன்'.

எனத் தத்தம் அரசியல் பின்னணிகளுக்கு அமைவாகச் செய்தியை வெளியிட்டு புகழடைந்து கொண்டிருந்தன.

இதைத் தான் இவ்வாரக் கட்டுரைக்கான கருவாக்க வேண்டும் என்பதைத் தெரிந்தெடுத்துக் கொண்டேன். தமிழ் மக்களின் சுயநிர்ணயம் பற்றிப் பேசும் கட்சிக்காரரின் அண்மைக்கால திடீர் புரட்சிகள் பற்றிய தேடல் அவசியமற்றதாய்ப் போனது. ஏனெனில் அடுத்த வாரத்தில் பெரும்பாலான பத்திரிகைகள் இக்கட்சியைப் பற்றியும், அதன் அண்மைக் கால அரசியல் நகர்வில் ஏற்பட்டு வரும் மர்மங்கள் பற்றியுமே துப்பு துலக்கல்களைச் செய்யப்போகின்றன. இந்தப் பத்து வயது இளங்கன்றின் பயமறியாத்தனத்தை எந்த எழுத்துமே கண்டு கொள்ளப் போவதில்லை. நானாவது இவனுக்காக எழுதவேண்டும்.

கிடைத்த வீடியோவை பெறுமதியோடு பார்க்கத் தொடங்கினேன். சேதுராகவன். நீண்டதொரு அடக்கு முறைக்கெதிரான கல்லெறியை பொதுவெளியில் வழங்கியவன் என்பதைப் பரபரப்பாய் வெளியாகிக்கொண்டிருந்த வீடியோக் காட்சி சொல்லிப் போனது. பத்து வயதாகும் மூளையொன்றுக்கு வழங்கப்படும் மிக மோசமான கசக்குதலில் வென்றவனுக்காகக் கிடைத்த அமைச்சர்களின் பாராட்டு விழா. அவை வெள்ளை வேட்டிகளாலும், பட்டி கட்டிய கழுத்துக்களாலும் கலகலக்கின்றது. வழமையான கௌரவிப்பு விழா போலல்லாமல் சற்றுக் கோலாகலம்தான் அது. கைதட்டல்கள் ஆரவாரிக்கின்றன. நடந்து முடிந்த புலமைப் பரிசில் பரீட்சையில் 194 புள்ளிகளைப் பெற்ற சேதுராகவன் நாடளாவிய ரீதியில் நான்காம் இடத்தைப் பெற்றானாம். அவனது பெற்றோரும் ஆசிரியர்களும் வழங்கிய வலுமிக்க பயிற்சிகள் இவனில் பலித்திருக்கிறது. மேடையில் கல்வியமைச்சர் மற்றும் வடக்கின் மற்றைய அமைச்சரும் பிற அதிகாரிகளும் பெரியதொரு படலைப் பரிசோடு இவனை அழைக்கின்றனர். தயங்கித் தயங்கி மேடையில் ஏறும் சேது பரிசை வாங்க நிர்ப்பந்திக்கப் படுகிறான். பரிசைக் கொடுக்கும்போது சேதுவும் கையை நீட்டுகிறான். அப்போது அதைத் திருப்பி எடுத்துக்கொள்ளும் அதிகாரி அமைச்சரின் காலில் விழுந்து விட்டு பரிசைப் பெற்றுக்கொள்ளுமாறு கூறவே அந்தக் குருத்தின் முகம் சிவந்து போகிறது. பக்கத்தில் இருக்கும் பெண்மணி (தாய் அல்லது ஆசிரியர்) தனது கைகளால் இவனை அமைச்சரின் காலில் விழுவதற்கான முயற்சிகளை மேற்கொள்கின்றார். திமிரும் சேதுராக வனைச் சுற்றி அதிர்ச்சிகள் எழுகின்றன. மேடையில் நிற்கும் அமைச் சர் வெட்கத்தால் தலைகுனிந்தாலும் அதைக் காட்டிக்கொள்ளாமல் அவனை மன்னித்து விடுவதைப் போல் பாசாங்கு காட்டுகிறார். மற்றைய அமைச்சர் தன் வேட்டி அவிழ்ந்ததாக நினைத்து அதனை இறுக்கிக் கட்டிக் கொள்கிறார். பரிசை வாங்கியவன் அதனை மேடையிலேயே வைத்து தன்னை அழைத்துப் போகும் அந்த வயதான அம்மாவிடம் கொடுக்க, அவர் அதனை கைகளால் தட்டி விட்டு முகத்தை தரையின் பக்கம் திருப்பிக்கொள்கிறார். சேதுராகவன் ஏமாற்றத்தை தன் முகத்தால் உணர்த்துகிறான். அவையே அதிர்ச்சியில் மூழ்குகிறது.

இச்சம்பவம் அவனைச் சுற்றிய ஒருவித விம்பத்தை ஏற்படுத்தியுள்ளது. பெரும் படிப்பு படித்தவர்கள் (அந்த மேடையில் வீற்றிருந்த பெரும்பாலானவர்கள்) எல்லாம் அரச அதிகாரிகளின் காலில் விழுந்து சுகபோக வாழ்க்கையை அனுபவிக்கையில், இந்தப் பத்து வயதுப் பாலகன் மட்டும் எப்படி மாறினான்.

அந்தப் பெறும் மேடையில் திமிரி எழுந்து திருப்பியடிக்க அவனை எது உந்தியது? என்ற எண்ணங்கள் மெய்சிலிர்ப்பை ஏற்படுத்தியதோடு கொஞ்சம் யோசிக்கவும் வைத்தது. யுத்தக்கஷ்டம் அவனை மோசமாய் மேய்ந்த போதும், தனது எதிர்ப்பைக் காட்ட அவன் தவறவில்லை. கிடைத்த சந்தர்ப்பத்தை நன்றாகவே பயன்படுத்திக் கொண்டான்.

இதை விடுத்து என்னால் இவ்வாரம் வேறு எதுவும் எழுத மனம் இடம் கொடுக்கவில்லை. நம் மீது திணிக்கப்படும் அதிகாரத்தை எதிர்த்துப் பேசும் குரல்களுக்கு கொஞ்சமாவது இடம் கொடுக்க வேண்டும். அதற்கு வயது வேறுபாடு இல்லை என்பதையே சேதுவும் உணர்த்தியிருக்கிறான். தயவு செய்து முடிந்தால் இச்சிறு பத்தியை அச்சிடுங்கள். நன்றி.


— தம்பி





MICRO RHINO

A Real Saving



- 2.0L Turbo Diesel Intercooler (CRDi)
- Comfortable 8 Seats
- Dual Air Conditioner
- 5 Speed Manual Transmission
- Power Steering
- Power Windows
- AM / FM Radio with CD / MP3 player
- 15" Alloy Wheel

* Conditions Apply


Rs. 3,250,000/=*
Inclusive VAT

Micro Holdings (Pte,) Limited

Borella Showroom [T] 011 2695056/8 [F] 011 2692786
Kandy Showroom & Service Centre [T] 081 5747013 [F] 081 5747013
Matara Showroom [T] 041 2235551 [F] 041 2235552
E-mail : sales@microholdings.lk
Web site : www.microcars.lk

Hotlines
0773963261 0773667658 0777715259 0773140248 0777715122
0773523308 0773667698 0773667678 0773667686 0777385232
0773523307 0777426823 0772366107 0777480677 0777226732

MICRO HOLDINGS



# விழிப்பாயிருங்கள் !

**பொதுமக்களிடமிருந்து வைப்புக்களை ஏற்றுக் கொள்வதற்கு இலங்கை மத்திய வங்கியினால் அனுமதியளிக்கப்பட்ட நிறுவனங்கள்**
(31.08.2011 இல் உள்ளவாறு, அகரவரிசைப்படி)

## உரிமம் பெற்ற வர்த்தக வங்கிகள்

1. அமானா பாங்க் லிமிடெட்
2. அட்டன் நசனல் பாங்க் பிஎல்சி
3. இந்தியன் ஓவசீஸ் பாங்க்
4. இந்தியன் பாங்க்
5. இலங்கை வங்கி
6. எம்சிபி பாங்க் லிமிடெட்
7. ஐசிஐசிஐ பாங்க் லிமிடெட்
8. கபிப் பாங்க் லிமிடெட்
9. கொமர்சல் பாங்க் ஒவ் சிலோன் பிஎல்சி
10. சம்பத் பாங்க் பிஎல்சி
11. சிற்றி பாங்க் என்ஏ
12. செலான் பாங்க் பிஎல்சி
13. எஎவ்சீசீ வர்தன பாங்க் லிமிடெட்
14. டொயிச் பாங்க் ஏஜி
15. நெசனல் டிவலொப்மன்ட் பாங்க் பிஎல்சி
16. நேசன்ஸ் ரஸ்ட் பாங்க் பிஎல்சி
17. கொங்கொங் அன்ட் சங்காய் பாங்கிங் கோப்பிரேசன் லிமிடெட்
18. பப்ளிக் பாங்க் பெர்காட்
19. பான் ஏசியா பாங்கிங் கோப்பிரேசன் பிஎல்சி
20. மக்கள் வங்கி
21. யூனியன் பாங்க் ஒவ் கொழும்பு பிஎல்சி
22. ஸ்ரேற் பாங்க் ஒவ் இந்தியா
23. ஸ்ரான்டட் சார்ட்டட் பாங்க்

## உரிமம் பெற்ற சிறப்பியல்பு வாய்ந்த வங்கிகள்

1. அரச ஈட்டு முதலீட்டு வங்கி
2. இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி
3. எம்பிஎஸ்எல் சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
4. சணச டிவலொப்மன்ட் பாங்க் லிமிடெட்
5. சிறிலங்கா சேவிங்ஸ் பாங்க் லிமிடெட்
6. டிஎவ்சீசீ பாங்க்
7. தேசிய சேமிப்பு வங்கி
8. பிரதேசிய சன்வர்த்தன பாங்க்
9. லங்காபுத்திர டிவலொப்மன்ட் பாங்க் லிமிடெட்

## பதிவு செய்யப்பட்ட நிதிக் கம்பனிகள்

1. அபான்ஸ் பினான்ஸ் லிமிடெட்
2. அலயன்ஸ் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
3. அசோசியேட்டட் மோட்டார் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
4. ஆர்பிகோ பினான்ஸ் கம்பனி பிஎல்சி
5. இன்டஸ்றியல் பினான்ஸ் லிமிடெட் (*)
6. எதிரிசிங்க ரஸ்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடெட்
7. எல்பீ பினான்ஸ் பிஎல்சி
8. ஏசியன் பினான்ஸ் லிமிடெட்
9. ஏசியா கொமர்ஸ் லிமிடெட்
10. ஏஎம்டபிள்யூ கபிட்டல் லீசிங் லிமிடெட்
11. ஏசியா அசெற் பினான்ஸ் லிமிடெட்
12. கன்றிச் பினான்ஸ் லிமிடெட்
13. கிராமின் மைக்ரோ கிறடிற் கம்பனி லிமிடெட்
14. கொமர்சல் கிறடிட் பிஎல்சி
15. சிங்கர் பினான்ஸ் (லங்கா) பிஎல்சி
16. சிலோவ் பினான்ஸ் லிமிடெட்
17. சிங்கபுத்ர பினான்ஸ் பிஎல்சி
18. சிற்றிசன்ஸ் டிவலொப்மன்ட் பிசினஸ் பினான்ஸ் பிஎல்சி
19. சென்றல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் அன்ட் பினான்ஸ் லிமிடெட்
20. சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
21. செங்கடகல பினான்ஸ் கம்பனி பிஎல்சி
22. சொவ்ற்லொயிக் பினான்ஸ் பிஎல்சி
23. ட்ரேட் பினான்ஸ் அன்ட் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடெட்
24. த பினான்ஸ் அன்ட் கரண்டி கம்பனி லிமிடெட் (*)
25. த பினான்ஸ் கம்பனி பிஎல்சி
26. த மல்டி பினான்ஸ் கம்பனி லிமிடெட்
27. த ஸ்ரான்டட் கிறடிற் லங்கா லிமிடெட் (*)
28. நந்தா இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடெட்
29. பார்ட்லீட் பினான்ஸ் லிமிடெட்
30. பிம்புத் லங்கா இன்வெஸ்மன்ட் லிமிடெட்
31. பீப்பிள்ஸ் லீசிங் பினான்ஸ் பிஎல்சி
32. பீப்பிள்ஸ் மேச்சன்ட் பினான்ஸ் லிமிட்டெட்
33. மர்க்கன்டைல் இன்வெஸ்ட்மன்ட்ஸ் லிமிடெட்
34. மர்ச்சன்ட் கிறடிற் ஒப் சிறிலங்கா லிமிடெட்
35. ரிகேஎஸ் பினான்ஸ் லிமிடெட்
36. லங்கா ஒறிக்ஸ் பினான்ஸ் பிஎல்சி
37. வெலிபல் பினான்ஸ் பிஎல்சி
38. ஸ்வர்ணமகால் பினான்சஷியல் ஸர்விஸஸ் லிமிடெட்


(*) இலங்கை மத்திய வங்கியினால் நியமிக்கப்பட்ட முகாமைத்துவ முகவர்களால் முகாமைத்துவம் செய்யப்படுகின்றன.

## நினைவில் வைத்துக்கொள்ள வேண்டிய விடயங்கள்

- மேற் கூறப்பட்ட நிறுவனங்கள் அவற்றின் வர்த்தக நடவடிக்கைகளை மதிநுட்பமாக நடாத்துவதை ஊக்குவிப்பதன் மூலம் பொதுமக்களின் வைப்புக்களைப் பாதுகாப்பதற்காக மத்திய வங்கிக்கு அவற்றை ஒழுங்குபடுத்தி மேற்பார்வை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனினும், வைப்புக்களுக்கு உத்தரவாதம் அளிக்கவோ அல்லது இதில் ஏதாவதொரு நிறுவனம் ஒருபோதும் முறிவடையாது என்று உறுதிப்படுத்தவோ சட்டரீதியான அதிகாரம் மத்திய வங்கியிடம் கிடையாது. மத்திய வங்கி, அதனால் மேற்பார்வை செய்யப்படும் ஒரு வங்கி அல்லது ஒரு நிதிக் கம்பனி முறிவடையுமிடத்து வைப்பாளர் ஒருவருக்கு அவரின் மொத்த வைப்புக்களின் தொகையில் உயர்ந்த பட்சம் ரூபா 200,000 கொண்ட தொகையினை 2012 சனவரி 01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வரும்வகையில் மீள்கொடுப்பனவு செய்யப்படுவதற்கு உத்தரவாதம் அளிப்பதற்காக வைப்புக் காப்புறுதி திட்டமொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது.
- ஏதாவதொரு நிறுவனமொன்றில் பணத்தை வைப்பிலிடும்போது தயவுசெய்து உங்கள் வைப்புக்களின் பாதுகாப்பு தொடர்பாக அதிக கவனம் செலுத்தல் வேண்டும்.
- ஒழுங்குபடுத்தப்படாத மற்றும்/ அல்லது மேற்பார்வை செய்யப்படாத நிறுவனங்களில் வைப்புக்களை மேற்கொள்வதன்மூலம் அவற்றிற்கு இரையாகாமல் உங்களுடைய கடின உழைப்பால் பெற்ற பணத்தை பாதுகாக்கும்படி பொதுமக்கள் வலிமையாக அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**இலங்கை மத்திய வங்கி**
தொ.பேசி.: 2477100, 2477105, 2477120, 2477129 தொ.நகல்: 2477711, மின்னஞ்சல்: banksup@cbsl.lk
தொ.பேசி.: 2477500, 2477504 தொ.நகல்: 2477738, மின்னஞ்சல்: secdnbf@cbsl.lk
CENTRAL BANK OF SRI LANKA 60 growth& stability


# எதையும் சாதிச்சிட்டதா நினைக்கலை



**அஜீத்தை, கோலிவுட்டின் அடுத்த சூப்பர் ஸ்டார் ஆக்கியிருக்கிறது, மங்காத்தா ஓபனிங். சன் பிக்சர்ஸின் எந்திரன் படத்துக்குப் பிறகு தமிழ் சினிமா வரலாற்றில் இரண்டாவது பெரிய ஓபனிங், சன் பிக்சர்ஸின் மங்காத்தாவுக்குத்தான். இதை எதிர்பார்த்தாரா அஜீத்?**

நம்பிக்கை இருந்தது. ஆனா, இவ்வளவு பெரிய ஹிட், நான் எதிர்பார்க்காதது. இந்த வெற்றியை, ரஜினி சாருக்கு சமர்ப்பிக்கிறேன். இதைவிட என்ன சொல்லணும்னு தோணலை. சினிமாவுல அவர் துரோணாச்சாரியார்னா, நான் ஏகலைவனா இருந்து அவரைப் பார்த்து வளர்ந்தவன். அவர் வழிகாட்டி இல்லாம வளர்ந்த வழிகாட்டி. எனக்கும் சினிமாவுல வழிகாட்டிகள் யாருமில்ல. என் பயணமும் கிட்டத்தட்ட அவரைப் போலத் தான். அதனால் தான் சொல்றேன். இந்த வெற்றியை அவருக்கு சமர்ப்பிக்கிறேன்னு. படத்தோட வெற்றிக்கு உழைச்ச அனைவருக்கும் நன்றி

**சினிமாங்கறதே கிளாமர்தான். ஆனா, அதை உடைக்கிற மாதிரி, மற்ற ஹீரோக்கள் செய்யத் துணியாத கேரக்டரை பண்ணியிருக்கீங்களே..?**

ஒரு நிமிஷம். தயவு செய்து மற்றவங்களை கம்பேர் பண்ணி கேட்காதீங்க. யாரையும் மட்டம் தட்டறதுக்காகவோ, அவங்களோட திறமையைக் குறைச்சு மதிப்பிடறதுக்காகவோ நான் அப்படி நடிக்கலை. நான் விரும்பினேன். எவ்வளவு நாள்தான் நல்லவனாவே நடிக்கிறதுன்னு நான் நினைச்சேன். வெங்கட்பிரபுகிட்ட இப்படியொரு கதை கேட்டதும், அவர் சொன்னார். பிடிச்சிருந்தது. பண்ணினோம். ரசிகர்கள் ஏத்துக்கிட்டாங்க. அவ்வளவுதான். இதனால, நான் ஏதோ சாதிச்சிட்டதாகவும் நினைக்கலை. என் பாலிசி, வாழு, வாழ விடுங்கறதுதான்.

**கடந்த சில வருடங்களா, போலீஸ், டான் கேரக்டர்கள்லயே நடிக்கிறீங்களே..?**

உண்மைதான். எனக்கு 40 வயசாயிடுச்சு. என் வயசுக்கான கேரக்டரை பண்ணலாம்னு நினைக்கிறேன். ஏன்னா, இன்னைக்கு ஆடியன்ஸோட ரசனை மாறியிருக்கு. சினிமா பற்றிய எக்ஸ்போஷர் அதிகமாயிருக்கு. ஹாலிவுட்ல இருந்து மூன்றாம் உலக நாடுகளின் படங்கள் வரை நிறையப் பார்க்கிறாங்க. அதுபற்றிய விவாதங்கள் நடக்குது. இந்தக் காலகட்டத்துல, அதுக்குத் தகுந்தாப்ல நானும் மாறணும்னு நினைக்கிறேன். ரொமான்டிக் படங்களும் வயசுக்கேத்த மாதிரி பண்ண முடியுமே. அப்படியான படங்கள் வந்தா கண்டிப்பா பண்ணுவேன்.

**வருஷத்துக்கு ரெண்டு, மூணு படம் பண்ற ஹீரோக்கள் மத்தியில, வருஷத்துக்கு ஒரு படம் பாலிசி... ஏன்?**

எட்டு மாசத்துக்கு ஒரு ரிலீஸ் இருக்கிற மாதிரி பண்ணலாம்னு நினைக்கிறேன். அதிகபடங்கள் பண்ணனுங்கற ஆசையெல்லாம் எனக்கில்லை. எத்தனை படங்கள் நடிக்கிறோம்ங்கறதும் முக்கியமில்லை. ஹீரோக்களுக்கும் கோல் கீப்பருக்கும் பெரிய வித்தியாசம் கிடையாது. எத்தனை கோல் பிடிச்சாலும், ஏதாவது ஒரு கோலை பிடிக்காமவிட்டிருந்தா, அதைப் பற்றித்தான் சொல்லிட்டிருப்பாங்க. அதனால நல்ல கேரக்டர்களை செலக்ட் பண்ணி நடிக்கப் போறேன்.

**கிட்டத்தட்ட இளம் ஹீரோக்கள் எல்லாருமேஉங்க ரசிகர்களா இருக்காங்களே... எப்படி?**

அவங்க எல்லாருக்கும் நன்றின்னு சொன்னா, அது வெறும் வார்த்தையாதான் தெரியும். அதுக்கும் மேல என்ன சொல்றதுன்னு தெரியலை.

**கண்டிப்பா நீங்க அரசியலுக்கு வருவீங்கன்னு உங்க நண்பர்கள் சொல்றாங்களே..?**

எல்லாரும் அவங்கவங்க வேலையை சரியா பார்த்தா போதும்னு நினைக்கிறேன். நான் நடிக்கிறேன். சம்பாதிக்கிறேன். வரி கட்டுறேன். ஓட்டுப் போடுறேன். முடிஞ்ச சில உதவிகளைப் பண்றேன். குறிப்பா சட்டம் ஒழுங்கை மதிக்கிறேன். என் குடும்பத்தை கவனிச்சுக்கிறேன். ரசிகர்கள் கிட்டயும் அதையேதான் எதிர்பார்க்கிறேன். பாலிடிக்சை அரசாங்கத்துக்கிட்ட விட்டுடுங்க. அவங்கப் பார்த்துப்பாங்க. எல்லாருமே அரசியலுக்கு வந்தா, நாடு தாங்காது. லஞ்சம், ஊழல்னு பேசுறோம். இந்தியாவுல இருக்கிற 120 கோடி பேருக்கும், இதுல பங்கு இருக்குன்னு சொல்வேன் நான். நாமஒழுங்கா இருக்கோமா? நம்ம வீட்டுலயும் குப்பை இருக்கு. முதல்ல அதைக் கிளீன் பண்ணுவோம். இன்னைக்கு எத்தனை பேர் ஒழுங்கா டிராபிக் சிக்னலை பாலோ பண்றாங்க, சொல்லுங்க? அது ஊழல் இல்லையா? ஒரு குடிமகனா நம்ம கடமையைச் செஞ்சா போதும். அதுவும் அரசியல்தான். ★




# பாத்திரமறிந்து பிச்சையிடு

**■கிழக்கூர் மகான்**

**தொலையா நினைவுகள்**

**கொ**ழும்பு மாநகரத்தின் புறக்கோட்டை பேருந்து நிலையத்தில் இறங்கி எனது மனைவி பிள்ளைகளுடன் கோட்டைப் புகையிரத நிலையத்தை நோக்கி நடந்தேன். அன்று மாலையில் புறப்படும் இரவு புகையிரதத்தில் பயணம் செய்தாக வேண்டும். ஒரு கையில் சிறியதோர் பையும், மறுகையில் ஐந்தே வயது நிரம்பியிருந்த எனது மகன் பிரபுவுமாக நான் நடந்துகொண்டிருந்தேன். என்னைப் பின் தொடர்ந்து எனது மனைவியும் மூத்த மகன் பாபுவும் வந்து கொண்டிருந்தனர். புறக்கோட்டை ஐந்தாம் குறுக்குத் தெரு அரசடிச் சந்தி வளைவில் திரும்பினேன். சனநெருக்கம் மிகுந்த பாதை. மக்களின் போக்குவரத்தால் நிரம்பியிருந்தது. பாதையோர வியாபாரிகளின் விற்பனை ஆரவாரமும் வாகனங்களின் இரைச்சலும் அதிகமிருந்தது. வளைவில் திரும்பி நடந்தேன். எனது காலடியில் மோதி நின்ற ஓர் ஐம்பது ரூபாய் நாணயத்தாள் மடித்தபடியே கிடப்பதைக் கண்டேன். இடது கையிலிருந்த அந்தச் சிறிய பையை நிலத்திலே வைத்தபின், அந்தப் பணத்தைக் கையில் எடுத்தேன். அந்த ஐம்பது ரூபாய் தாளுடன் மேலும் நோட்டுக்கள் இருப்பதாக எனக்குத் தோன்றியது. உடனேயே நான் அதனை விரித்துப் பார்க்கவில்லை. எடுத்த காசைக் கையில் பொத்தியபடி மீண்டும் பையைத் தூக்கிக் கொண்டு மகனுடன் நடந்தேன். சிறிது தூரம் சென்றிருப்பேன். என்னைப் பின்தொடர்ந்த ஒருவர் என்னை நோக்கி 'எத்தன சல்லி கத்தத மாத்தையா' என்று சிங்களத்தில் கேட்டார். அந்தச் சிங்களத்தை நான் உடனேயே புரிந்த கொண்டேன். சிறிது அச்சம் ஏற்பட்டது. எனினும் துணிவை வரவழைத்துக் கொண்டே "மகே சல்லி வெட்டுனா மங் அறங் ஆவா"என்றேன்எந்தப்பதட்டமுமின்றி. தொடர்ந்து நான் அவரின் பதிலை எதிர்பார்க்காமலேயே நடந்தேன்.

மக்கள் நடமாட்டமுள்ள இடங்களில் தம்மிடமுள்ள பெறுமதி குறைவான நாணயத் தாள்களைப் போடுவதும், அதனை எடுப்பவர்களைப் பின் தொடர்ந்து சென்று, பயம்காட்டி, வாதிட்டு அவர்கள் வைத்திருக்கும் பெருந்தொகையான பணத்தையும் ஒருத்துச் சுருட்டிக் கொள்ளும் தந்திரம் அவர்களிடமிருந்தது.

கொழும்பு மாநகரில் பாதசாரிகளை ஏமாற்றி இவ்வாறாகப் பணம் பறிக்கும் வழக்கமும் தில்லு முல்லுகளும், தகிடுதத்தங்களும் தமிழர் விடயத்தில் நிறையவே நடந்து வருவது பற்றியும் அறிந்துள்ளேன். அவர்களின் மொழியைப் பேசத் தினறும் அப்பாவிகள் பலரும் அதற்குள் சிக்குண்டு உடமைகளையும் பணத்தையும் இழந்திருக்கிறார்கள். அதே போன்ற ஓர் ஏமாற்று வேலையாக இது இருந்திருக்கலாம் என எண்ணினேன். இருப்பினும் எனக்குத் தெரிந்த சிங்களம் அவர்களுடன் வாதிடப் போதுமானதென நம்பினேன். அதற்கான துணிவும் என்னிடம் இருந்தது. "ஐயா அதிலே காசைக் கண்டெடுத்தீர்களா? என்ற அவனது கேள்விக்கு என்னிடமிருந்த காசு தவறி விழுந்தது அதனை நான் எடுத்து வந்தேன் என்ற பதிலால் அவன் தடுமாறிப் போனான். அவனால் எதிர்த்துரைக்க முடியவில்லை. எனது பதிலிலிருந்த உறுதியும், நான் அணிந்திருந்த காக்கி லோங்ஸும், சப்பாத்தும் எனது உயரமும் மேலும் அவன் என்னுடன் வாதிடுவதற்குத் தயங்கியதற்கான காரணமாக இருக்கலாம் என எண்ணினேன்.

அவன் கேள்வி கேட்கவோ என்னைத் தொடரவோ துணியவில்லை. நானும் மனைவி பிள்ளைகளும் அருகில் இருந்த லக்ஸ்மி பவன் தேநீர்ச் சாலையை அடைந்தோம். அங்கே தேநீர் அருந்திக் கொண்டிருந்தபோதுதான் உங்களுடன் சிங்களத்தில் கதைத்தவன் யார்? என்ற கேள்வியை மனைவி என்னிடம் கேட்டார். நான் நடந்தவற்றைச் சொன்னதுடன், கையிலே கசக்கியபடி வைத்திருந்த ஐம்பது ரூபாய்த் தாளைப் பிரித்தேன் அதற்குள் மேலும் மூன்று பத்து ரூபாய்த் தாள்களுமாக மொத்தம் எண்பது ரூபாய் இருந்தது. யாரோ தவறவிட்ட பணந்தான் அது என்பதை ஊகித்துக் கொண்டேன். அந்த வேளையில் எனக்குச் சிங்களம் கொஞ்சமேனும் தெரியாதிருந்திருப்பின் என்னிடமிருந்த பணத்தையும் சேர்த்தே அவன் பறித்துக் கொண்டு சென்றிருப்பான்.

இன்றும் தொடரும் இது போன்ற ஏமாற்றுப் பேர்வழிகளின் பல்வேறு வகையான தந்திரங்களால் தமது உடமைகளையும் பணத்தையும் இழக்கும் நம்மவர்களைப் பற்றி அறியும் தோறும் வேதனையே எஞ்சுகிறது. இனமுரண்பாடுகளுக்கு மத்தியில் தம்மை ஒடுக்கி அச்சம் தொடர வாழும் நிலை கொழும்பில் தொடரவே செய்கிறது. பயங்கரவாதம் என்ற வலைக்குள்ளே வீணே சிக்காமல் இருப்பதற்காக அச்சத்தால் ஏமாற்றுப் பேர்வழிகளைக் கண்டு பயந்து, எம்மைப் பாதுகாக்க வேறு வகை தெரியாது மோதிரம், சங்கிலி, கைகடிகாரம், பணம் எனப் பலதையும் இழந்து விடுகிறோம். ஏனெனில் நீதியைப் புறந்தள்ளி அர்த்தமற்ற தடுப்புக்களிலும் காவல்களிலும் பத்து வருடங்களுக்கும் மேலாக இருக்கிறார்கள் என்ற செய்திகள் எம்மைப் பயம் கொள்ள வைத்து விடுகிறது. இந்த வகை ஏமாற்றங்களிலும் இழப்புக்களிலும் இருந்து தப்பித்துக் கொள்ள நம்மைத் தயார்ப் படுத்திக் கொள்ள வேண்டியது அவசியமாகும். இன்று யாழ்ப்பாணம், வன்னி, மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற தமிழ்ப் பிரதேசங்களிலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவுவதாகக் கூறித் தமிழர்களே தமிழர்களை ஏமாற்றும் நிலை தோன்றியுள்ளது. எனவே எதற்கும் ஒவ்வொருவரும் 'பாத்திரமறிந்து பிச்சையிடு' என்ற முன்னோர் மொழியின் கருத்திலும் கவனம் செலுத்துவோம்.

# பேய்களைப் பார்த்த மேமன் கவி


**■மைதிலி தேவராஜா**

**பே**ய்களைப் பற்றிப் பலரும் பலவாறு கதைகள் புனைந்தும் கண்டறிந்தோர் சொன்னதாகவும் பேசித் திகைக்க வைப்பதைக் கேட்டிருப்பீர்கள். ஆனால் பேயின் நடமாட்டம் இங்கே நிச்சயமாக உண்டெனவும் அவற்றைக் கண்டேனெனவும் உரத்துச் சொல்லும் கவிஞர் ஒருவரை இங்கே பாருங்கள்

**பேய்களைப் பார்த்ததில்லை**
**என்றுதான் இத்தனை நாட்களாய்ச்**
**சொல்லி வந்திருக்கிறேன்**
**பேய்களுக்கு முன்னாலும் பின்**
**னாலும் சில பட்டதாரிப் பேய்கள் தம்**
**மாணவத் தளிர்களை நசுக்கிக் கொன்றன**
**பேரில் ஆசிரியர்களான வடிவங்களில்**

ஆசிரியரெனத் தம்மை மறைத்துக் கொண்டு லவும் பேய்களை கண்டதாகக் கூறும்போது அவை பட்டதாரிப் பேய்கள் என்கின்ற பயங்கரத்தை எமக்குள் புகுத்தி விடுகிறார்.

**வயிற்றுப் பிழைப்புக்கு**
**அந்நிய தேசத்துக்குப் போன**
**ஏழைக் குமரிகள் மீது வன்முறை செய்தன**



**சில திரு - திருமதிப் பேய்கள்**
**எஜமான் - எஜமானிகளான அதிகார மமதையில்**

அந்நிய தேசத்துக்குப் போன ஏழைக் குமரிகள் மீது வன்முறையில் ஈடுபடும் அதிகார மமதை கொண்ட எஜமானர்களைப் பேய்களாய்க் காணுகிறார்.

**தேர்தல் காலங்களில்**
**பாதையோர் மதிற்சுவர்களில்**
**வண்ண வண்ணப் பேய்கள் அரசியல் பேசின**
**போஸ்ரர் அவதாரங்களில்**

அரசியல் வாதிகள் சிலரையும் இங்கே அவர் பேய்களாய்க் காணுகிறார்.

**படுக்கை அறைகளைப்**
**பலிபீடங்களாக்கி**
**சில பதி பேய்கள் கற்பைச் சோதித்தன**
**ஆணாதிக்கக் கோர முகங்களாய்**
**இல்லறத்தில் சில பத்தினிப் பேய்கள்**
**சண்டிராணிகளாய் அமைதி தின்றன**
**பெண்மையின் மென்மைகளைத் துறந்து**

ஆண், பெண் இருபாலாரிலும் பேய்கள் உலவுகின்றன என்கிறார் கவிஞர்.

**புனித வீடுகளில்**
**பல்வேறு கொள்கை ஈட்டிகளால் போர் புரிந்தன**
**மதம் பிடித்த சில பேய்கள்**
**மதத்திற்கான புனித நூல்களை மறந்து**

சமய நன்னெறிகளைப் போதிக்கும் மதகுருமாருக்குள்ளேயும் பேய்கள் பேய்கள் பேய்கள் என்கிறார்.

**உலகை ஆள்வதாய் எண்ணி**
**உலக சபைகளில்**
**சர்வதேச கேடிகளின் வாரிசுகளாய் அமர்ந்திருந்தன**
**சில வெள்ளைப் பேய்கள்**
**வளரும் நாடுகளின் பிரஜைகளின் பிணங்களின் மீது**

உலகை ஆளும் சர்வதேச கேடிகளைப் பேய்களாய்க் காணுகிறார்.

**பாலியல் வல்லுறவு புரிவதற்கென்றே**
**பிறந்த சில பேய்கள்**
**பெண்கள் வர்க்கத்தின்மீது வக்கிரம் புரிந்தன**
**பெற்ற மகளையும் விட்டு வைக்காமல்**

பெண்கள் வர்க்கத்தின்மீது வக்கிரம் புரிவோரைப் பேய்களாய்க் காணுகிறார்.

**பணத்தின் பசியில்**
**தர்மம் பேசிய சில பேய்கள்**
**சொந்தங்களைக் கூடக் கொல்லத் தயங்காமல்**
**வியாபாரம் பேசின**

பணத்திற்காகச் சொந்தங்களைக் கூடத் தயங்காமல் கொல்லத் துணியும் பேய்களைக் கண்டு அச்சமுறுகின்றார்.

**எத்தனை பேய்கள்**
**எத்தனை வண்ணங்களில்**
**எத்தனை வடிவங்களில்**
**அத்தனை பேய்களும் உலாவி வருகையில்**
**பிணம் தின்னும் சாஸ்திரங்கள்**
**சட்டங்களாகிப் போயின**
**ஒரு மயானத்தின் பிரஜையாய்**
**நான் என்னை உணர்ந்தேன் இப்பொழுதெல்லாம்**
**பேய்களை நான்பார்த்ததில்லை என்று**
**சொல்வதே இல்லை**

எத்தனை எத்தனையோ பேய்கள் இங்கே உலாவி வருகையில் சட்டங்கள் எல்லாம் மௌனித்து விட்டன. நானும் மயானத்தில் அந்தப் பேய்களோடேயே உலவுகிறேன் என்கிறார் அவர்.

ஆகையால் நான் அத்தனை பேய்களையும் கண்டு கொண்டே பேய்களுடனேயே வாழ்வதனால், பேய்கள் இல்லையென்று சொல்ல என்னால் முடிய வில்லையே என ஆதங்கப்படுகிறார் கவிஞர் மேமன் கவி.

# போரா அமைதியா?

## கொக்கிளாய் ஒரு பிள்ளையார் சுழி

விடுதலை வேண்டிப் போராடும் மக்களின் மீது திணிக்கப்படும் மறைமுக ஆக்கிரமிப்பு முறைகள் பல்வேறு வடிவங்களில் முளைத்துவருகின்றன. அண்மைய வாரங்களில் தமிழர்களின் பூர்வீக நிலங்களைப் பறித்து சிங்களவர் வசமாக்குவதற்கான வேலைகள் மிகத் தீவிரம் பெற்றிருக்கின்றன. அதனடிப்படையில் கடந்த பல தசாப்தங்களாக நிலம் கேட்டுப் போராடிய தமிழர்களை நிலமற்றவர்களாக்குவதற்கான திரை மறைவுப் பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன.

தமிழரின் பூர்வீக நிலங்களில் சிங்களவர்களைத் திட்டமிட்ட வகையில் கள்ளக் குடியேற்றம் (Encroachments) செய்யும் முறையை டீ.எஸ் சேனநாயக்கா, ஜே.ஆர்.ஜெயவர்த்தனா, சிறில் மத்தியூஸ், காமினி திசநாயக்க என்.ஜீ.பி. பண்டித ரத்தின போன்றோர் தொடக்கி முன்னெடுத்தவர்களாவார். இவ் அத்துமீறல் நடவடிக்கைகள் புலிகளின் எழுச்சியோடு கட்டுப்படுத்தப்படிருந்தாலும் அவர்களின் வீழ்ச்சியோடு மீண்டும் தொடங்கப்பட்டிருக்கின்றது. வழமைபோலவே இம்முறையும் இந் நில அரிப்பு கிழக்கில் இருந்து வடக்குப் பக்கமாகத் தொடங்கப்பட்டிருக்கின்றது. யாரும் உசாராகாத பகுதியை முதலில் அரிக்கத் தொடங்கியிருக்கின்றனர். அதன்படி தமிழரின் பூர்வீக நிலபபரப்புக்கள் அடங்கிய வடக்கையும், கிழக்கையும் இணைக்கும் சந்தியைத் தேர்வு செய்திருக்கின்றனர். அதாவது கிழக்குப்பிராந்தியத்தின் கேந்திர மையங்களை கைப்பற்றிக் கொண்ட பின்னர் வடக்கு நோக்கிய கள்ளக்குடியேற்றத் திட்டம் நகர்த்தப்படுகின்றது. அதுவும் உத்தியோக பூர்வ அறிவிப்புக்களை வெளியிட்ட பின்னரே களத்தில் காரியமாற்றப்படுகின்றது. வெலிஓயா என்ற புதிய பிரதேச செயலகப்பிரிவை உருவாக்கி அதனை சிங்கள மக்களுக்குரிதாக்கப் போகின்றனர். அப்புதிய பிரிவில் இதுவரையில் கரைதுறைப்பற்று நிர்வாகப் பிரிவோடு இருந்த குமுளமுனை, தண்ணிமுறிப்பு, அளம்பில், கருநாட்டுக்கேணி, மற்றும் நெடுங்கேணியின் ஒரு பகுதி போன்ற கிராமங்களையடக்கிய எட்டுத் தமிழ்க் கிராம சேவையாளர் பிரிவுகள் வெலி ஓயா பிரதேச செயலகப்பிரிவுக்குள் வருகின்றது. இத்திட்டம் சேருவில நிலப்பறிப்புக் காலத்தோடு தொடங்கப்பட்டிருந்தாலும், இவ்வளவு காலமும் யுத்தம் அதனைத் தள்ளிப்போட்டுவிட்டது.

1988 ஆம் ஆண்டு காமினி திஸ்ஸநாயக்கவின் பரிந்துரையின் பேரில் வெளியான வர்த்தமானி அறிவித்தலில் 26 ஆவது மாவட்டமாக வெலிஓயா விதந்துரைக்கப்பட்டிருந்தாலும், அதனை உடனடியாக நிறைவேற்றிக்கொள்ள முடியவில்லை. அக்காலத்து அரசியல் நிலமைகள் நில அபகரிப்புக்கான சந்தர்ப்பங்களை வழங்கவில்லை. இப்போது மறுபடியும் அந்தக் காற்று வீசத் தொடங்கியிருக்கின்றது. அது ஒரே நேரத்தில் இரு வழிகளில் முன்னெடுக்கப்படுகின்றது. உத்தியோக பூர்வ அறிவிப்போடு நிலத்தை தமிழர்களின் ஆதிக்கத்திலிருந்து தனிமைப்படுத்தல், அப்பகுதியில் பரவலான சிங்கள குடியிருப்புக்களை விதைத்தல் என்ற இருவழிமுறைகளுமே இப்போது வட இலங்கையின் கீழ்க் கரைப் பகுதியில் சாத்தியமாகியிருக்கின்றன.

புதிதாக உருவாக்கப்படப்போவதாக அறிவிக்கப்பட்டுள்ள வெலி ஓயா பிரதேச செயலகப் பிரிவில் வரும் கொக்கிளாயின் வளம் மிக்க முகத்துவாரப் பகுதியில் இரு கட்டங்களாக 70க்கும் மேற்பட்ட புதிய சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளன.இவர்களுக்கான சொந்தக் காணிகளும் வழங்ப்பட்டுள்ளன. இதுவே தொடர்ந்தால் என்ன நடக்கப் போகின்றது. தமிழ் மக்கள் எவ்வாறான ஆதிக்கத்திற்கெதிராகவெல்லாம் ஆயுதம் தூக்கினார்களோ அவ்வாறான ஆதிக்கமே மறுபடியும் சூழ் கொள்கின்றது. இது நீடித்த அமைதிக்கு வழிசமைக்கப் போவதில்லை.

### ஏன் இதைக் கைப்பற்றிக்கொள்ளத் துடிக்கின்றனர்.

சிங்கப்பூர் மலேசிய அனுபவங்கள் இலங்கையிலும் பல்லினக் குடிப்பரம்பல் முறையினை எதிர்பார்க்கின்றது. அதற்காகவே திட்டமிடப்பட்ட வகையில் காலம் காலமாக தமிழர்கள் வாழ்ந்து வந்த நிலங்களில் சிங்கள மக்கள் குடியேற்றப்படுகின்றனர். இதனூடாக பண்பாட்டு ரீதியான ஒரு கலப்பை ஏற்படுத்த முடிவதோடு பெரும்பான்மை இனத்தோடு இரத்தக் கலப்பை ஏற்படுத்தி சிறுபான்மை இனத்தின் அடையாளத்தை முற்றாக அழிக்க முடியும்.

வளமிகுந்த இக் கடற்கரைப் பகுதியில் கொட்டிக் கிடக்கும் திரவியங்களை கைப்பற்றிக்கொள்ள காலத்திற்கு காலம் சிங்களவர்களால் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதன் முன்னேற்றகரமான படிநிலை தான் கொக்குளாயில் குடியேற்றப்பட்டிருக்கும் சிங்களக் கள்ளக் குடியேறிகள்.

கொக்கிளாய், தமிழர்களின் பாரம்பரிய நிலங்களான வடக்கையும் கிழக்கையும் இணைக்கின்ற மையத்தில் அமைந்த கிராமம். இந்த மையத்தில் சிங்களவர்களை குடியேற்றுவதனூடாக வடக்கு கிழக்கு இணைப்பைத் துண்டிப்பதோடு கரையோரமாக நீளும் பழந்தெருவை முறித்து விடலாம் என்பதும் இதன் திட்டம். வடக்குக்கும் கிழக்குக்கும் நில ரீதியான தமிழ் பண்பாட்டுத் தொடர்பில் இடையில் எழும் புதிய சிங்களக் கிராமங்களால் அறுத்து விடப்படப் போகிறது. எப்படி கிழக்கு மாகாணத்தில் சேருவில, மூதூர், கந்தளாய், திகாமடுல்ல, வெலிகந்த போன்ற தமிழரின் இடங்களில் சிங்களவர்களைக் குடியேற்றி தமிழ் நிலத்தை பறித்தார்களோ, அதே போன்று வடக்கிலும் நிலப்பறிப்புக்கான பிள்ளையார் சுழிதான் இது.

பொலிகண்டி தொடக்கம் வாகரை வரைக்குமான தமிழர்களின் கடற்கரைப் பகுதிகள் இப்போது முற்றிலும் சிங்கள ராணுவம் வசமே உள்ளது. அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் அக்கடற்கரையின் முக்கியத்தளங்களின் அதாவது இலகுவாக கடலுக்குள் போகக் கூடிய வகையிலான வற்றுக் கடல்களைக் கொண்ட பகுதிகளை சிங்கள மக்களால் நிரப்பிக் கொள்கின்றனர். இதனூடாக தப்பித்தவறி புலிகள் கடலூடாக உள்நுழைந்தால் அதனைத் தவிர்த்துக் கொள்ளலாம் எனவும் எண்ணுகின்றனர்.

1965ஆம் ஆண்டு அமைச்சராய் இருந்தவர் பெஸ்டஸ் பெரேரா. இவரின் பெரிய தகப்பன் நீர்கொழும்பு, காலி பக்கங்களில் இருந்து மூன்று சம்மாட்டிமார்களுடன் முதன் முதலாக கொக்கிளாய்க்கு கரைவலைத் தொழிலுக்காக வந்தனர்.

அவ்வாண்டிலிருந்து ஒவ்வொரு சீசனுக்கும் சிங்கள மீனவர்கள் வந்து மீன் பிடித்துப் போவர். காலப்போக்கில் சிங்கள சம்மாட்டிமார்களின் கைக்கூலிகளாக வந்தவர்கள் கொட்டில்களைப் போட்டுக் கொண்டு இங்கேயே தங்கிவிட்டனர். பின்னர் பதவியாவில் இருந்த ரௌடீச சிங்களவர்களுடன் இந்த புதிதாய் வந்தவர்களும் சேர்ந்து கொக்கிளாயில் ஒரு சாம்ராஜ்யம் அமைத்தனர். இந்த ரௌடிகள் தமிழரின் மாடுகளைக் கடத்தி இறைச்சியாக் குவதை ஒரு தொழிலாகவே கொள்ளத் தொடங்கினர். இதனால் ஏற்பட்ட முறுகல் வெட்டுக்கொத்து வரை சென்று சேர்த்தது. முல்லைத்தீவில் இருந்த பொலீசார் சிங்களவரைக் காக்க கொக்கிளாயில் தளமிட்டனர். காலத்துக்குக் காலம் வன்முறை நிலமைகள் கட்டு மீறவே இராணுவத்தினரின் வருகையும் தடுக்க முடியாததாயிற்று. 1984 ஆம் ஆண்டு அப் பகுதியை முற்றாகச் சிங்களவர் கைப்பற்றிக் கொண்டனர். 24 மணிநேரத்தில் தமிழர்கள் துரத்தப்பட்டனர். அப்போது அங்கு சிங்களக் குடும்பங்கள் தான் அங்கு இருந்தனர். 2011 ஆம் ஆண்டு வரை தமிழ் வாடையற்ற அத் தமிழ் கிராமம் சிங்களவர்களால் திட்டமிட்டு உருமாற்றம் செய்யப்பட்டது. இடப்பெயர்கள் மாறின. கிராமம் அடையாளம் தொலைத்தது. யுத்த ஓய்வின் பின்னர் எஞ்சிய தமிழர்கள் அங்கே உள்நுழைய அனுமதிக்கப்பட்டனர். அப்போது 300 சிங்கள குடும்பங்களைச் சேர்ந்த 1726 சிங்களவர்கள் உற்பத்தியாகி இருந்தனர். இவையெல்லாம் எப்படி நடந்தது என்று போனவர்களுக்கு தெரியவில்லை. தமிழர்களின் சொந்த காணிகளின் உறுதிகள் மட்டும் தான் அவர்களிடம் இருந்தது. அதன் உரிமை இருப்பு எல்லாமே சிங்களவரிடம் இருந்ததைக் கண்டு வாய்களுக்குள் முணுமுணுத்துக் கொண்டனர். தட்டிக் கேட்க முடியவில்லை. இப்போது மறுபடியும் அந்தக் கிராமம் தொகையளவிலான சிங்களக் குடும்பங்களை தன்னுள் திணித்து கொண்டுள்ளது. தமிழர்கள் அருகி வருகின்றனர்.


இந்தக் கிராமத்தைச்சூழக்கிடக்கும் கடற்கரை தான் இதற்கான முழுவளத்தையும் தருவதாகும். இங்கு வாழ்ந்த தமிழர்கள் விவசாயத்தைத் தம் மரபு ரீதியான தொழிலாகக் கொண்டிருந்தபோதிலும் முல்லைத்தீவு சம்மாட்டிமார்களுக்குரிய பல கரைவலை மீன் பிடிப்பாடுகள் இங்குண்டு. கரைவலை சீசன்களின் போது கொக்கிளாய்க் கடல் அள்ளிக் கொடுக்கும். அதனால் தான் இந்நில்த்தை தமிழர்கள் இழக்க முடியாதிருக்கின்றனர். சிங்களவர்கள் காலத்துக்கு காலம் நீர்கொழும்பிலிருந்தும் காலியிலிருந்தும் படையெடுத்து வருகின்றனர். இந்த அழகிய கிராமத்துள் நுழைந்து கிடக்கும் ஏரிக் கடலும் எக்காலத்திலும் வளங்கொழிக்கும். சிறு மீன்பிடித் தொழிலுக்கு மிகவும் வாய்ப்பான காரணிகளை இது வழங்குகின்றது.

ஆழமற்ற கடலும், அழகிய கடற்கரையும், பறவைகள் சரணாலயமும் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கக்கூடியன.

இவை எல்லாவற்றையும் விட விவசாயமும், மந்தை வளர்ப்பும் தான் இக்கிராமத்தின் பொருளாதார மூச்சு. இதைச்சுற்றித்தான் இங்கு வாழ்ந்த, வாழுகின்ற தமிழர்களின் எல்லாமுமே இயங்குகின்றன.

இனி வரப்போகும் காலங்களில் இக்கிராமம் இது வரை போர்த்தியிருந்த எல்லாத் தொழில்க் கருவூலங்களும் முதல்களும் வேறுவடிவங்கள் பெறப்போகின்றன. பாரியளவிலான கைத்தொழில் முயற்சிகள் இங்கு சிங்களவர்களால் மேற்கொள்ளப்படலாம். அது முழுத் தமிழர்களினதும் பொருளாதார ஈட்டங்களை நிர்மூலமாக்குவதோடு அவர்களை வாழக் கதியற்ற வர்களாக மாற்றப்போகிறது. இதையும் அப் பழந் தமிழ் மண் பார்த்துக்கொண்டுதான் இருக்கும்.

**■ ஜெரா**




நம்மீது படர்ந்து வரும் இந்த ஆபத்தைக் கண்டுக்கொள்ளாமல் இருக்கின்றோம். தெற்கில் காணியற்ற சிங்களவர்களுக்குத் தான் வடக்கில் காணி வழங்குகிறோம் எனக் கூறும் அரசுக்குப் பாடம் கற்பிக்கக் கூடிய வகையிலான காரியங்களில் நாம் இறங்க வேண்டும். எத்தனையோ தமிழர்கள் இருக்க நிலமற்றவர்களாக அலைகின்றனர். அவர்களெல்லாம் காணிக்கு விண்ணப்பித்தால் வடக்கில் எஞ்சியிருக்கும் நிலத்தை நமக்குள்ளேயே பங்கிட்டுக்கொள்ள முடியும் அதற்கு அரசு மறுத்தால் நாம் போராடத் துணியலாம்.

சுடர் ஒளி

25, செப்ரெம்பர் - 01, ஒக்ரோபர், 2011

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு-14. டெலிபோன்: 0115738005

பக்ஸ்: 0115517944 - 5

E-mail: editorial@sudaroli.com


## வழிகாட்டல் வரைபடத்தை முதலில் உருவாக்குங்கள்

அரசு - கூட்டமைப்புப் பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பமாகி உள்ளன. சுமார் 7 மாதங்களில் 10 சுற்றுப் பேசியும் எந்த அடைவையும் இரு தரப்பாலும் காணமுடியாமல் போனதை அடுத்து தடைப்பட்டிருந்த பேச்சு ஜனாதிபதி - சம்பந்தன் இரகசியச் சந்திப்பை அடுத்து மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஒகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் பேச்சைத் தொடர முடியாது என்று கூட்டமைப்பு தெரிவித்ததும், முறுக்கிக் கொண்ட அரசு "புலிகள் பாணியில் கூட்டமைப்பு நடக்கிறது'' என்று சீறியது. கூட்டமைப்புக்குப் "படிப்பிக்கிறேன்பார் பாடம்'' என்கிற வகையில், உடனடியாகவே தெரிவுக் குழுவுக்கான வரைவையும் முன்வைத்தது. பதிலுக்குக் கூட்டமைப்போ, இனி எந்த விடயமானாலும் அரசு "எழுத்து மூலம் தந்ததன் பின்னரே பேச்சு'' என்றது.

இப்போது இரண்டு தரப்புகளுமே தாங்கள் சொன்னவற்றுக்கு மாறாக மீண்டும் பேச்சுக்களை ஆரம்பித்துள்ளன. இதோ அமைக்கிறேன் அதோ அமைக்கிறேன் என்று சொல்னாலும் அரசு இன்னும் தெரிவுக் குழுவை அமைக்கவில்லை. அதே போன்று எழுத்து மூலமான பதில் அரசிடம் இருந்து கிடைக்காவிட்டாலும் இப்போது அரசுடன் நம்பிப் பேசக்கூடிய சூழல் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் அம்பாறையில் கூறியிருக்கிறார்.

இந்த விடயங்கள் ஒன்றைத் தெளிவுபடுத்துகின்றன. இரு தரப்புக்களுமே தாம் நினைத்த வழியில் பேச்சைக் கொண்டு செல்லவில்லை. அவர்களை ஆட்டுவிக்கும் கயிறு இந்த நாட்டுக்கு வெளியே செல்கிறது. அதுதான் சர்வதேச சமூகம்.

சர்வதேச சமூகம் ஆட்டுவிப்பதற்கு மாறாக எதையும் செய்யும் திராணி அரசுக்கும் இல்லை கூட்டமைப்புக்கும் இல்லை என்பதையே பேச்சுக்கள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ள சூழ்நிலை பட்டவர்த்தனமாக வெளிப்படுத்துகிறது.

"சூழலுக்கு ஏற்ப நிலைமையைக் கையாள்வது'' என்பதே அரசும் சரி கூட்டமைப்பும் சரி தற்போது கையாளும் ராஜதந்திரமாக இருக்கின்றது. இது நீண்ட காலத்துக்குப் பயனளிக்கத்தக்கதல்ல. அதே வேளை தீர்வு ஒன்றை அடைவதற்கான மார்க்கமும் அல்ல. மாறி மாறி ஒருவரை ஒருவர் ஏமாற்றவும் கிளித்தட்டு மறிக்கவுமே இது உதவக்கூடும்.

பேச்சில் அரசு இப்போது காட்டிவரும் அக்கறையை, ஜெனிவாவில் தற்போது நடை பெற்று வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக் கூட்டத் தொடரின் பின்னரும் காட்டும் என்று சொல்வதற்கில்லை. அதனைச் சுமந்திரனும் ஏற்றுக் கொண்டிருக்கிறார். "அரசின் பேக்கில் மாற்றம் ஒன்று தெரிகின்ற போதும். தமிழர்களுக்குத் தீர்வு ஒன்றைத் தருவதற்கு அரசு இன்னும் விரும்பவில்லை'' என்று அவர் கூறியிருக்கிறார்.

எனவே மனித உரிமைகள் சபையின் தற்போதைய கூட்டத் தொடர் எதிர்வரும் 30ஆம் திகதி முடிவடைந்ததும் பேச்சில் அரசு இப்போது காட்டும் அக்கறை குறைவடையக்கூடும். ஒரு வேளை அடுத்த ஆண்டு மார்ச் மாத்துக்கு கிட்டவாக அரசு மீண்டும் பேச்சில் அக்கறை காட்டக் கூடும். ஏனெனில் ஐ.நா. மனித உரிமைகள் சபையின் அடுத்த கூட்டத் தொடர் அப்போது தான் நடக்கும்.


இத்தகைய நிலைமையை மாற்றி உண்மையில் தீர்வு ஒன்றை எட்டுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டியது மிக அவசியம். அதற்கு பேச்சுக்கான வழிகாட்டல் வரைபடம் ஒன்றும் அவசியம். தற்போதைய பேச்சுக்களுக்கு அப்படிப்பட்ட ஒன்று கிடையாது.

எப்போது பேசுவது, எதைப் பற்றிப் பேசுவது, எந்தக் கால வரையறைக்குள் எவை பற்றிய இணக்கப்பாட்டுக்கு வருவது, இணக்கம் காணப்படாத பிரச்சினைகளை எப்படி விவாதிப்பது, இணக்கம் காணப்பட்டவற்றுக்கான மக்கள் அங்கீகாரத்தைப் எப்படிப் பெறுவது என்பன தொடர்பில் ஒரு வழிகாட்டல் வரைபடம் அமைதிப் பேச்சுக்களுக்கு அவசியம். அரசும் கூட்டமைப்பும் முதலில் அந்த வரைபடத்தை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். அப்போதுதான் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட பேச்சுக்களாவது பயனுள்ளவையாக அமையும்.

ஒரேயடியாக அமர்ந்து, ஒரு மாத காலத்துக்குள் பேசி இனப்பிரச்சினைக்கு ஒரு தீர்வைக் கண்டுவிடுவோம் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முன்வைத்த யோசனையை அரசு நிராகரித்து விட்டது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ்பிரேமச்சந்திரன் கூறியிருக்கும் நிலையில், பேச்சின் அடுத்த கட்ட நகர்வுகளுக்கு முன்னர் வழிகாட்டல் வரைபடத்தை இரு தரப்புமாக இணைந்து தயாரித்துக்கொள்வது காலத்தின் தேவையும், கட்டாயமுமாகும்.

# மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தம் சாத்தியமா?

அரசாங்கமும், தமிழ்தேசியக்கூட்டமைப்பும் மேற்கொண்டு வரும் பேச்சுவார்த்தைகளுக்கு மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தம் தேவையென கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் கூறியிருக்கின்றார். கடந்த புதன்கிழமை இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் வன்னிக்கு விஜயம் செய்த போது அவரிடம் இக்கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது. தற்போது கூட்டமைப்பிற்கும் அரசாங்கத்துக்குமிடையில் நடைபெற்று வரும் பேச்சுவார்த்தைகள் மூலம் தீர்வு ஒன்று சாத்தியமில்லை எனவும் அவர் குறிப்பிட்டிருக்கின்றார்.



இக்கட்டத்தில் அரசங்கத்திற்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் நோர்வேயின் மத்தியஸ்தம் அல்லது, அனுசரணையுடன் நடைபெற்ற பேச்சுவார்த்தைகள் குறித்து நாம் நினைவு கொள்ள வேண்டிய தேவையுள்ளது. விடுதலைப்புலிகள் மேற்கொண்ட கடுமையான ஆயுதப்போராட்டத்தின் விளைவாகவே சர்வதேச அனுசரணையுடனான ஒரு பேச்சுவார்த்தைக்கு அரசாங்கம் முன்வந்தது. வெளிநாட்டிலும், உள்நாட்டிலும் கட்டம் கட்டமாக நடைபெற்று வந்த இப்பேச்சுவார்த்தைகளின் போது தமிழ் மக்களுக்கான தீர்வுத்திட்டம் ஒன்று ஏற்படுத்தப்படுவதற்கு பல முட்டுக்கட்டைகள் ஏற்பட்டபோதும் தமிழர் தரப்பிற்கு சாதகமான சில வாய்ப்புகள் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். குறிப்பாகச் சொல்வதானால் அரசாங்கத்திற்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் சில சாதகமான விடயங்கள் இருந்தன. அவ்வாறான ஒரு ஒப்பந்தத்திற்கு அரசாங்கம் இணங்க வேண்டிய கட்டாயம். ஆயுதப்போராட்டத்தின் வலிமை காரணமாகவே ஏற்பட்டது என்பதை யாராலும் மறுக்க முடியாது. ஆனால், விடுலைப்புலிகள் தோற்கடிக்கப்பட்டதன் பின் தமிழ் மக்களின் அரசியலில்பேரம்பேசுகின்றவலிமைஇழக்கப்பட்டுவிட்டது.

விடுதலைப்புலிகள் கேட்டவற்றை தரமுடியாது எனவும், விடுதலைப்புலிகள் அழிக்கப்பட்ட பின் இனிமேல் பேச்சுவார்த்தைகளே அவசியமில்லை எனவும் அரசதரப்பிலிருந்து கருத்துக்கள் வெளியாவதற்கும் இதுவே காரணம். ஆனால் இன்று அர்சாங்கத்திற்கு சர்வதேச ரீதியாக ஏற்பட்டுள்ள போர் குற்றச்சாட்டுக்கள் தொடர்பான அழுத்தமே தமிழ்த் தேசியக் கூட்டமைப்போடு பேச்சுவார்த்தை நடத்துவதற்கான ஒரு நிலையை ஏற்படுத்தியுள்ளது.

கூட்டமைப்பிற்கும் அரசாங்கத்திற்குமிடையே நடைபெற்று வந்த பேச்சுக்கள் பத்தாவது சுற்றுடன் முறிவடைந்த பிறகு தற்போது மீண்டும் பேச்சுக்கள் தொடர்வதற்கான நிர்ப்பந்தமும் சர்வதேச அழுத்தங்களாலேயே ஏற்பட்டுள்ளது. இலங்கைக்கு வந்து சென்ற அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான துணைச்செயலர் ரோபட் ஓ பிளெக் அரசாங்கத்துடனும், தமிழ் தேசியக்கூட்டமைப்புடனும் கலந்துரையாடல்களை நடத்தி முறிந்து போன பேச்சுவார்த்தைகளைத் தொடர் வழி சமைத்துள்ளார். இதனை 'அழுத்தம்' என்று கூட குறிப்பிடலாம்.

நடைபெற்ற பத்து சுற்றுப் பேச்சுவார்த்தைகளும் வெறும் காலம் கடத்தும் பேச்சுக்களாகிய நிலையில் மூன்று அம்சக் கோரிக்கைகளையும், அவற்றிற்கு இருவாரங்களில் அரசாங்கம் பதில் தரவேண்டும் என்ற காலக்கெடுவையும் கூட்டமைப்பு முன்வைத்தது. இவ்வாறெல்லாம் காலக்கெடுக்களை விதிக்க முடியாது எனவும், நாடாளுமன்றத் தெரிவுக் குழுவின் மூலமாகவே பேச்சுவார்த்தைகள் இனிமேல் நடத்தப்படும் எனவும் அரசாங்கம் கூறியது. இரு தரப்பிற்குமிடையிலான இம்முரண்பாடுகள் ரொபட் ஓ பிளெக்கினால் தளர்வடையச் செய்யப்பட்டது. இருதரப்பும் மீண்டும் பேச்சுவார்த்தைகளைத் தொடர்வது என்று இணக்கம் காணப்பட்டது.

ஆனாலும், இப்பேச்சுவார்த்தைகள் ஒரு காலவரையறைக்குட்பட்டு ஒரு தீர்வினை எட்டும் என்கிற நம்பிக்கை தமிழர் தரப்பிற்கு இப்போதும் இல்லை. தமிழ் மக்களுக்கான தீர்வு ஒன்றை முன்வைப்பதற்கான சர்வதேச நிர்ப்பந்தத்திற்கு அரசாங்கம் உட்பட்டுள்ளதெனினும், மேலும் காலத்தை இழுத்தடிக்காமல் தீர்வு ஒன்றை வழங்குவதற்கு அர்சாங்கம் மனமின்றியே இருக்கின்றது என இப்போது கூட்டமைப்பினர் தெரிவித்திருப்பதும் இங்கு கவனத்தில் கொள்ளத்தக்கதாகும்.

இந்நிலையில், தொடர்ந்தும் இனப்பிரச்சினைக்கான பேச்சுவார்த்தை என காலத்தைக் கடத்தினால் அது தமிழ் மக்களை ஏமாற்றுவதாகவே அமையும் என தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு கருதுவதாகத் தெரிகின்றது. எனவே, நேரடிப் பேச்சுவார்த்தைகளில் பலன் ஏதும் கிட்டாது என்கிற நிலையில் முன்றாம் தரப்பின் மத்தியஸ்தம் ஒன்றை தமிழர் தரப்பு கோருவதில் தவறில்லை என்றே எண்ணத் தோன்றுகின்றது. ஆனால், இவ்வாறு முன்றாம் தரப்பு ஒன்றை ஏற்றுக் கொள்ள அரசாங்கம் நிச்சயமாக விரும்பாது. அக் கோரிக்கையை அது கடுமையாக எதிர்க்கும். எனினும், பேச்சுவார்த்தைகள் தொடர்ந்தும் எவ்விதப் பயனுமின்றித் தொடர்வதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இடமளிக்கக் கூடாது. நடைபெற்ற பேச்சவார்த்தைகள் தொடர்பான விபரங்கள், அரச தரப்பினால் இணக்கம் காணப்பட்டு நடைமுறைப்படுத்தப்படாமல் போன விடயங்கள் என யாவற்றையும் பட்டியலிட்டு தமிழ் மக்களுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் வெளிப்படுத்தி, அடுத்த கட்டமாக பேச்சுக்கள் தொடரவேண்டுமானால் ஒரு சர்வதேச மூன்றாம் தரப்பின் மத்தியஸ்தத்தைக் கோருவது தான் சரியெனத் தோன்றுகின்றது. ★

■ விகிர்தன்

# 'பப்ளிசிட்டி'யும் பரமசிவன் கழுத்துப் பாம்பும்



■ பிரமன்

தனக்குத்தானே பப்ளிசிட்டி தேடிக் கொள்வதில் அமைச்சர் மேர்வின் சில்வாவை அடித்துக் கொள்வதற்கு இந்த உலகத்தில் இப்போதைக்கு யாருமில்லை. அந்தளவுக்கு அழிச்சாட்டியங்களினூடாக தன் பெயரை எல்லோரையும் பரபரப்பாக உச்சரிக்க வைப்பதில் கெட்டிக்காரர். பப்ளிசிட்டி தேடுவதற்காக ரூம் போட்டு யோசிப்பாரோ? என்று மற்றவர்கள் தலையைப் பிய்த்துக்கொள்ளுமளவுக்கு ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு விதமாக மேர்வினின் அவதாரங்கள் இருக்கும். ஊடகங்களையும், ஊடகவியலாளர்களையும் தாக்குவதில் மேர்வினுக்கு நிகர் மேர்வினேதான். மேர்வினின் புகழை(?) உச்சாணிக் கொப்புக்கு கொண்டுசென்ற சம்பவம் சமூர்த்தி உத்தியோகத்தரை மரத்தில் கட்டிவைத்த சம்பவம்தான். டெங்கு ஒழிப்பு நடவடிக்கை தொடர்பான கூட்டத்துக்கு ஒரு சமூர்த்தி அதிகாரி சமூகமளிக்கவில்லை. குறித்த சமூர்த்திஉத்தியோகத்தரின் மகனின் உடல்நிலை சரியில்லாத காரணத்தாலேயே மகனை வைத்திய சாலைக்குக் கொண்டு சென்றதாலேயே அவர் அந்தக் கலந்துரையாடலில் கலந்துகொள்ளவில்லை. ஆனாலும் இதனை வைத்து தன்னுடைய பெயரைப் பிரபலப்படுத்துவதற்காக அந்த உத்தியோக்த்தரை மரத்துடன் கட்டி வைத்து பூகம்பத்டைக் கிளப்பினார் மேர்வின். இந்த விடயம் ஊடங்களினூடாக பரவலாகி, அதுவே மேர்வினுக்கு எதிரான உணர்வையும் பலரிடம் உண்டுபண்ணியது. தன்னுடைய மவுசை அதிகரிப்பதற்காக மேர்வின் போட்ட திட்டம் அவரது பிரதி அமைச்சர் பதவியையே பறிக்குமளவுக்கு எதிர்ம்றையாக மாறியது.

என்றாலும் அவர் கலங்கவில்லை. மனம் திருந்தவில்லை. பதவியில்லாத போதும் மேர்வினின் ஆட்டத்துக்கு குறைவில்லை. அதன் பிறகு என்ன மாயம் நடந்ததோ தெரியவில்லை. சில மாதங்களிலேயே மேர்வின் வீட் டுக்கதவை பொதுமக்கள் உறவுகள் மற்றும் பொது மக்கள் விவகார அமைச்சுப் பதவி தட்டியது. அதன் பிறகு தனது அடுத்த இன்னிங்ஸைத் தொடர்ந்த மேர்வின் பழைய பாணியிலேயே ஆட்டத்தைத் தொடர்ந்தார். அவரது எல்லா ஆட்டங்களும் விநோதமானவையாகவும் அடாவடித்தனம் கொண்டவையாகவும் எப்படியாவது பிரபலத்தை உண்டுபண்ணுபவையாகவும் இருப்பது வழமை. மேர்வினின் ஆட்டம் எல்லை மீறிச்சென்றது இயற்கைக்கு பொறுக்கவில்லை போலும். அமைச்சராக இருந்து பெற்ற பிரபலம் போதாதென்று எண் ணிய மேர்வின், அடுத்து என்ன செய்யலாம் என்று யோசித்தார்.

. பேசாமல் சினிமா நடிக ராகிவிடுங்கள். இன்னும் பிரபலமாகிவிடலாம் என அவரது வால்கள் ஆலோசனை வழங்கியிருக்க வேண்டும். மேர்வினுக்கும் அது நல்லயோசனையாகப்பட்ட காரணத்தால் துட்டகைமுனு என்ற திரைப்படத்தில் நாயகனாக நடிக்கத்தொடங்கினார். ஆரவாரமான விளம்பரப்படுத்தல்களுடன் தொடங்கிய படப் பிடிப்பில் துட்டகைமுனு வேடத்தில் யானை மீதேறிய மேர்வினின் படங்கள் பத்திரிகைகளை நிறைத்தன. அந்தப்படங்கள் மேர்வினுக்கு கண்ணுறை ஏற்படுத்தியிருக்கவேண்டும். பாவம்! அடுத்தநாள் படப்பிடிப்பில் யானை மீதிருந்த மேர்வின் அப்படியே கீழே விழுந்துவிட்டார். யானைதான் மேர்வினைத் தூக்கி வீசியதாகச் சொல்லப்படுகின்றது. அதன் பிறகு கொஞ்சநாள்களாக மேர்னினின் சத்தத்தையே காணோம். யானையிடம் வாங்கிய வலி ஆறும்வரைக்கும் ஐயா கப்சிப்.

இப்போது லேட்டஸ்ட்டாக மேர்வினின் ஒப்பிரேஷன் பப்ளிசிட்டி தாக்குதல் நடந்த இடம் முன்னேஸ்வரம் காளிகோயில். இந்த ஆலயத்தில் வருடாவருடம் திருவிழாவின் போது விலங்குகள் பலியிடப்படுவது மரபு. ஆகம மரபுகளுக்குள் மூழ்காமல் பாரம்பரிய வழிபாட்டுமுறைகளைப் பின்பற்றிவரும் இந்த ஆலயத்தில் வேள்வி என்பது மிகமுக்கியமான வழிபாட்டுமுறை. தமது குறைகள், பிணிகள் என்பவற்றைத் தீர்க்கக்கோரி, பக்தர்கள் நேர்த்திக்கடன்களை வைப்பார்கள். பின்னர் அந்த நேர்த்திக்கடன்களுக்காக ஆடு, கோழி என்பவற்றை வேள்வியின் போது காளிக்குப் பலியிடுவார்கள். மிருகவதைச்சட்டத்துக்கும் மனிதாபிமானத்துக்கும் இது எதிரான செயலாக இருந்த போதும் மக்களின் மரபு சார்ந்த , மதரீதியிலான நிகழ்வின் தொடர்ச்சி என்பதாலும், மக்களின் நம்பிக்கையுடன் ஊறிப் போன ஒரு சடங்காக மாறிவிட்டதாலும் வேள்வியைப் பற்றி எவரும் பாரதூரமாக எடுத்துக் கொள்வதில்லை. சிலாபத்தில் வசிக்கும் சிங்கள மக்கள் கூட இந்த வேள்வியில் மிருகங்களைப் பலியிட்டு தம் நேர்த்திக் கடன்களை நிறைவேற்றிக்கொள்வதுண்டு.

இம்முறையும் வெகுவிமரிசையாக காளிகோயிலில் வேள்வி நடைபெற ஏற்பாடாகியிருந்தது. இந்த விஷயம் மேர்வினின் காதுக்கும் எட்டியது. சென்டிமென்டான இந்த விஷயத்தில் கைவைத்தால் பரபரப்புத் தீ தன்பாட்டிலேயே பற்றிக்கொண்டு எரியும் என்று அவர் மனது கணக்குப் போட்டது. பப்ளிசிட்டி கிடைக்கும் ஒரு விடயம் கிடைத்துவிட்டால் சும்மாயிருப்பாரா மேர்வின்? தன் படை பட்டாளங்களோடு சிலாபத்துக்கு கிளம்பியே விட்டார். வேள்விக்கென்று ஆலயத்துக்கு கொண்டு வரப்பட்ட நூற்றுக்கணக்கான ஆடுகள், கோழிகள் என்பவற்றைத் தான் கொண்டு சென்ற வாகங்களில் அள்ளியெடுத்துக்கொண்டு வந்துவிட்டார் மேர்வின். மிருகங்களைப் பலியிடும் காட்டுவாசித்தனமான மடமையை இல்லாமல் செய்வதே தன் செயலுக்கான நோக்கம் என கொள்கை விளக்கத்தையும் அவர் வெளியிட்டார். சாத்தான் வேதம் ஓதுவதை யார்தான் நம்புவார்கள். அடாவடிக்கும் ,வன்முறைக்கும் பெயர்போன மேர்வின் திடீரென ஒரேநாளில் அகிம்சாவாதியாக மாறி, மிருகங்களின் மீது அன்பைப் பொழிந்து அவற்றைக் காக்கும் ரட்சகராக உருவெடுத்ததை எவருமே நம்பத் தயாராகவில்லை. மனித உயிர்களைப் பற்றியே கிஞ்சித்தும் அக்கறை கொள்ளாத ஒரு அமைச்சர் விலங்குகளின் மீது அக்கறை கொள்வதை சிறுபிள்ளை கூட நம்பத்தயங்கும் தானே? ஆலயத்தின் மரபார்ந்த வழிபாட்டைக் குழப்பியடித்து அந்த நெருப்பில் குளிர்காய்ந்து தன் பிரபலத்தை உயர்த்திக் கொள்ளும் உத்தியே இது என்பது எல்லோருக்கும் தெரியும். ஆனாலும் இத்தனை நாளும் தனிமனிதர்களோடு முரண்பட்டுக்கொண்டிருந்த மேர்வின் இப்போது காளி கோயில் வேள்வியைத் தடுத்ததன் மூலம் இந்து மதத்தினரின் ஒட்டுமொத்த எதிரியாக மாறியிருக்கிறார். அவரின் இந்தச் செயலுக்கு பல்வேறு தரப்புகளிடமிருந்தும் எதிர்ப்புகள் கிளம்பத்தொடங்கிவிட்டன. வேள் விக்கும் மேர்வினின் அமைச்சுக்கு என்ன சம்பந்தம்? தேவையில்லாத விடயங்களில் மேர்வின் ஏன் மூக்கை நுழைக்கவேண்டும்? மேர்வின் ஆலயத்தில் அள்ளிச் சென்ற நூற்றுக் கணக்கான ஆடுகளும் கோழிகளும் எங்கே? மேர்வின் தன் படை பரி வாரங்களுக்கு அந்த விலங்குகளைக் கொன்று விருந்து வைத்து விட்டாரா? அல்லது விற்றுவிட்டாரா? என்றெல்லாம் கேள்விகள் பறக் கத்தொடங்கிவிட்டன.

ஆனாலும் இவ்வாறு எதிர்ப்புகள் கிளம்பத் தொடங்கியிருப்பது மேர் வினுக்கு கலக்கத்தை ஏற்படுத்தப் போவதில்லை. மாறாகத் தன் பெயர் இப்படியாவது பிரபலமாவதை எண்ணி மகிழவே செய்வார். எதிர்ப் புகள் எப்படி வந்தாலும் அவருக்குப் பிரச்சினை இல்லை. ஏனெனில் அவர் பரம சிவன் கழுத்திலிருக்கும் பாம்பு. எப்படி வேண்டுமானலும் ஆட்டம் போட்டுகொண்டேயிருக்கலாம். ★

## பறந்துகொண்டிருந்த விமானத்திலிருந்து மாயமாகிய 74 பேர்!

அண்மையில் கொங்கோவில் நடைபெற்ற விமான விபத்தில் கொல்லப் பட்டவர்கள் நிஜமாக எத்தனை பேர் என்பதில் மிகப்பெரிய குழப்பம் ஏற்பட்டுள்ளது. காரணம் விமானத்துக்குள் பயணம் செய்த பயணிகளின் நிஜ எண்ணிக்கை யாருக்குமே தெரியவில்லை.


சிவில் ஏவியேஷன் வரலாற்றில் இப்படி நடப்பது இதுவே முதல் தடவை. விமானத்தில் பயணம் செய்த மொத்தப் பயணிகளின் எண்ணிக்கை 110. அதில், 53 பேர் கொல்லப்பட்டனர். 57 பேர் உயிர் தப்பியுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டது.

ஆனால், சூடானின் போக்குவரத்து அமைச்சு, விமான நிறுவனத்தின் கூற்றை மறுத்திருக்கிறது. விபத்தில் உயிர் தப்பியவர்கள் 57 பேர் என்பது உண்மைதான். ஆனால், கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை 127.



விபத்தில் கொல்லப்பட்டவர்கள் வெளிநாட்டுப் பிரஜைகளாக இருந்து, அவர்கள் இறந்தது மறைக்கப் பட்டால்தான் இதில் சர்வதேச விசாரணை இடம்பெறும். கொல்லப் பட்டவர்களில், மாயமாக மறைந்த அனைவரும் கொங்கோ பிரஜைகளாக இருந்தால், உள்நாட்டு விசாரணைதான்!

கதை வெளியே வந்துவிட்டதால், சில வேளைகளில் உண்மையான பயணிகளின் எண்ணிக்கை விமான நிறுவனத்தால் ஒப்புக்கொள்ளப்படலாம்!







**தமக்கு ஏற்பட்ட பயங்கர அனுபவம், வேண்டுமென்றே 'நெக்' கடவுளால் மேற்கொள்ளப்பட்ட பரீட்சார்த்த முயற்சி என்பதைத் தெரிந்து கொண்டதால் செதிலும் சது யாவும் மனஆறுதலடை கின்றனர்.**

★ ★ ★

சுதாவின் பிஸ்ரலில் இருந்து புறப்பட்ட குண்டு தனது இலக்கைத் தாக்கியதும் காடே அதி ரும்படியாக எழுந்த அவலச் சத்தத்தைத் தொட ர்ந்து...

"மாயாசின் கதைகாலி..." எனப் பெருமிதத் துடன் கூறிய சுதா, நிகிதாவையும் இழுத்துக் கொண்டு அந்த இடத்திற்கு செல்ல, அங்கே காட்டுப்பன்றியொன்று காலில் குண்டடிபட்டுத் துடித்துக் கொண்டிருந்தது.

நிகிதாவிற்கு அதைப் பார்த்ததுமே சிரிப்புப் பொத்துக் கொண்டு வந்துவிட்டது.

"...ஐயோம்மா...ஹா... ஹா... வேற்றுக்கிரக வாசியை இவர் சுட்டு வீழ்த்தி விட்டாராம். நல்ல கதைதான்... ஹ்ஹஹ்...ஹ..."

வயிற்றைப் பிடித்தபடி குலுங்கிக் குலுங்கிச் சிரிக்கும் நிகிதாவைப் பார்த்து சுதா, நிறையவே அசடு வழிந்தவனாக..

'இல்லை நிகி. நான் இதை அவதானித்த போது வித்தியாசமாகத்தான் இருந்தது...'

இதை அவன் கூறிவிட்டுப் பன்றியைத் திரும்பிப் பார்த்த போது அங்கே அடிபட்டுக் கிடந்த பன்றி காணாமல் போயிருக்க பதட்டமடைந்தவனாக...

"இங்கே பார் நிகி" என்று நிகியை அழைக்க, அவளும் ஏதோ வித்தியாசத்தை உணர்ந்தவளாக பாதியிலேயே தனது சிரிப்பை நிறுத்தி விட்டு நாலாதிசைகளிலும் பன்றியைத் தேடத் தொடங் கினாள். ஆனால்....

இருவருமாக எவ்வளவுதான் தேடிய பொழு திலும் பன்றி மறைந்ததற்கான அறிகுறி எதுவுமே புலப்படாமற் போனதினால், சூழ்நிலையின் இறுக் கம் அவர்களை ஆட்கொள்ள, மெல்ல மெல்ல அவர்கள் மிரள ஆரம்பித்தனர்.

★ ★ ★

'கணட'வுக்கு வெளியே பார்த்துக் கொண்டிருந்த சதுயா திடீரென செதிலை அழைத்து வெளியில் தெரிந்த ஏதோவொன்றைச் சுட்டிக் காட்டினாள்.

அவள் சுட்டிக் காட்டியதைப் பார்த்து செதில் கூறினான். "கறினா (Carina) நெபுலாவையே நீ பார்த்துக் கொண்டிருக்கிறாய். எமக்கு அருகா மையிலுள்ளவற்றில் இதுதான் மிகவும் பிரகா சமானதாகும்"

அவள் கேட்டாள் "அப்படியென்றால் சூரி யனை விடவும் பிரகாசமானதா?" செதில் புன்ன கைத்தான்.

"சூரியனை விட 200 மடங்கு பெரியதும் 6500000 மடங்கு பிரகாசமாகவும் அது உள்ளது" என்றான் செதில்.

"அடேயப்பா... அவ்வளவு பெரிசா இது? எப்படி இவ்வாறு ஒளிர்கிறது?" ஆச்சரியத்துடன் கேட்டாள் சதுயா.

"தூசுகளையும் வாயுக்களையும் கொண்ட பெருமுகில் திரளாகக் குவிந்து காணப்படுவ தையே நெபுலா என்கிறோம். இது பல்வகையான வாயுப்பொருட்களைக் கொண்டிருப்பதால் தாமா கவே ஒளி வீசுகின்றன. அப்படிப்பட்டதொன்று தான் இந்த க்றினாநெபுலா" என்றான் செதில் விளக் கமாக.

"ஒளி வீசாத நெபுலாக்களும் இருக்கின்றதா" சந்தேகத்துடன் சதுயா கேட்டாள்.

"இம்..ம்.. இளம் உடுக்களைக் கொண்டு அமைந்திருக்கும் கரிய நிறநெபுலாக்கள் ஒளி வீசுவதில்லை"

இவர்கள் இவ்வாறு உரையாடிக் கொண்டிருக் கக் கணட இவர்கள் உரையாடலின் இடையில் புகுந்தது.

"மன்னிக்க வேண்டும் தோழர்களே, நாம் இன்னொரு ஆபத்தையும் சந்திக்க வேண்டியுள்ளது. அதற்காக உங்களை நீங்கள் தயார்படுத்திக் கொள்ளுங்கள்"

இதைக் கேட்ட செதிலும் சதுயாவும் அச் சமடைய ஆரம்பித்தார்கள்.

அச்சத்தின் வசப்பட்ட அவர்களிருவரில் செதில் மௌனத்தைக் கலைத்தவாறு கேட்டான்.

"எங்கள் அருமைக் கணடவே. நீ என்ன சொல்கிறாய்?" என்ன விதமான ஆபத்து நமக்காகக் காத்திருக்கிறது?"

"நண்பரே. வெலிவியாத் (கொம்பியூட்டர்) திரையை ஆழமாகக் கவனியுங்கள். உங்களுக்கே அந்த ஆபத்துப் புரியும்"

செதில் புலன்களனைத்தையும் கூர்மையாக்கிக் கொண்டு வெலவியாவில் பார்வையைப் பதித்தவன் மறுவினாடி அதிர்ந்தான்.

"மைகோட்! பிளாக்கோள்...!!" என்று சத்தம் போட்டான் அவன்.

சத்தம் போடும் அவனையே மருண்ட விழிக ளோடு பார்த்த சதுயா, செதிலின் தோள் தொட்டு.

"பிளாக் கோளா?" அப்படியென்றால் என்ன? என்றாள்.

அதிர்ச்சி நீங்காதவனாகக் கூறினான் செதில்.

பிளாக் கோள்களைத் தமிழில் கரும் பள் ளங்களென்றோ, அல்லது கருந்துளைகளென்றோ கூறலாம். வெலவியத் திரையை அவதானமாகப் பார்த்தால் நீயே புரிந்து கொள்வாய் சதுயா" என்றான் அவன்.

அவள் வெலவியாத் திரையை பார்வையிட் டாள். எனினும் வான்வெளியில் தத்தமது பாதை யில் வலம் வந்து கொண்டிருக்கும் வான் பொருட் களை மட்டுமே அவதானித்தாளே தவிர வேறு எதையுமே அவள் அவதானிக்கவில்லை.

'என்ன செதில். வித்தியாசமாக எதுவும் தெரி யவில்லையே?"

"இதை நாம் உடனடியாகக் கண்டுபிடிக்க முடியாது. ஆழமாக கூர்மையாகப் பார்த்தால் மட்டுமே ஆபத்தைப் புரிந்து கொள்ள முடியும்" எனக்கூறிய செதில் மீண்டும் தொடர்ந்தான்.

"இங்கே பார் சதுயா,

இப்பொழுது நாம் வெலிவியாத் திரையில் பார்வையிட்டுக் கொண்டிருக்கும் காட்சி, நமக்கு முன்னால் விரிந்துள்ள பல லட்சம் கிலோ மீற்றர் தூரத்திற்கப்பால் உள்ள வான்வெள்ளியை நுணுகி ஆராய்ந்து 'கணட' எடுத்த எக்ஸ் கதிர்ப் படங்களாகும். நாம் இதை உற்றுக் கவனித்தால்... இங்கே பார்" சுட்டிக் காட்டினாள் அவள்.

எந்த ஒரு வான் பொருளும் எம் கண்ணுக்குப் புலப்படாமலேயே இந்த இடத்தில் பல வகையான கதிர்வீச்சு அலைகள் உற்பத்தியாகிக் கொண்டி ருக்கின்றன. செதில் வெலிவியத்திரையில் சுட்டிக் காட்டிய இடத்தையே பார்த்துக் கொண்டிருந்த சதுயா வியந்தவாறு கேட்டாள்.

"செதில், நீ சுட்டிக் காட்டுமிடத்தில் எந்த ஒரு வான்பொருளையும் அவதானிக்க முடியவில் லையே. அப்படியென்றால் எப்படி இந்த இடத் திலிருந்து தானாக கதிர்வீச்சலைகள் உற்பத்தியாக முடியும்?"

***(ஆபத்து தொடரும்)***

# வாயாடியாக இருப்பது...



எல்லா நேரங்களிலும் அடக்கமாக, அமைதியாக, ஜென்டில்மேன் போல் நடந்து கொள்வது நல்லதல்ல!

என்கிறது ஒரு ஆய்வு. குறிப்பாக சம்பளம் பேசி முடிப்பதில் ஜென்டில்மேனைவிட வாயாடிகள் அள்ளி விடுவதாக அது கூறுகிறது. ஆஸ்திரேலியாவின் "யுனிவர்சிட்டி ஆப் நோட்ரெ டேம்ஸ்" ஆராய்ச்சியாளர் திமோதி ஜட்ஜ் தலைமையிலான குழுவினர் வேலைக்கு செல்பவர்களின் ஆளுமை மற்றும் சமூக பழக்க வழக்கம் பற்றி ஆய்வு நடத்தினர். அமெரிக்காவின் 3 வெவ்வேறு ஆய்வுகளில் பங்கேற்ற 3,500 பேரின் விவரங்களை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டனர்.

இந்த ஆய்வில், அடக்கமான குணம் உள்ள ஜென்டில்மேனைவிட அதிக அளவில் பேசுபவர்கள் வாழ்க்கையில் வேகமாக முன்னேறுவது தெரிய வந்துள்ளது. அதாவது, சம்பளம் பேசி முடிப்பது மற்றும் பதவி உயர்வு ஆகியவற்றில் வாயாடிகள் சிறந்து விளங்குகின்றனர். குறிப்பாக எதைச் சொன்னாலும் தலையாட்டும் ஆண்களைவிட, எதிர்த்து பேசக் கூடியவர்கள் 18 சதவீதம் கூடுதலாக சம்பாதிப்பது தெரிய வந்துள்ளது. இதுபோல சராசரி பெண்களைவிட வாயாடி பெண்கள் 5.47 சதவீதம் கூடுதலாக சம்பாதிக்கின்றனர்.

# சிரியுங்கள்...

"உன் பிறந்த நாளுக்கான பரிசாக நான் நெக்லஸ் வாங்கி வந்திருக்கிறேன்..."

"இதைவிட, கார் வாங்கிக் கொண்டு வந்திருக்கலாமெல்லோ...."

வாங்கலாம் தான்.... காரெல்லாம் 'கவரிங்ல' கிடைக் காதே..."



# இந்தியாவின் நயவஞ்சக இராஜதந்திரம்!

■ சந்திரசேகர ஆசாத்

இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே இடம்பெற்ற இறுதிப் போரின்போது ஆயுத உதவி, படைப்பயிற்சி. தொழில்நுட்ப உதவி, உளவுத் தகவல்கள் எனப் பலவிதமான முக்கிய உதவிகளை வழங்கி இப்போரை இலங்கை அரசு வெற்றி கொள்வதில் முக்கிய பங்காளியாக விளங்கியது இந்தியா. போரின் கடைசி நாட்களில் மேற்கு நாடுகள் ஒருபோர் நிறுத்தத்தைக் கொண்டு வர முயற்சித்த போது அதை நிராகரித்து விடுதலைப் புலிகளை முற்றாக அழிக்கும் வரை போரைத் தொடர இலங்கை அரசுக்கு பூரண ஆதரவு வழங்கியதும் இந்தியாதான்.

அமெரிக்கா, பிரிட்டன், ஐரோப்பிய ஒன்றியம் போன்ற மேற்குலகம் இப்போரில் இலங்கை அரசுக்கு காத்திரமான உதவிகளை வழங்கிய போதும் அவை விடுதலைப் புலிகளை முற்றாக அழிக்க விரும்பவில்லை. அவைகள் விடுதலைப் புலிகள் அரசுக்குத்தொடர்ந்துதொல்லை கொடுக்குமளவுக்கு மட்டும் மட்டுப்படுத்தப்பட்ட சக்தியுடையவர்களாக விளங்கினால் மட்டுமே இலங்கை அரசு சீனா பக்கம் சாய்வதைக் கட்டுப்படுத்த முடியும் எனத் திடமாக நம்பின. ஆனால் இந்தியாவோ சீனாவை விட கூடுதலான உதவிகளை வழங்குவதன் முலம் இலங்கை அரசைத் தனது கட்டுப்பாட்டு வலயத்துக்குள் வைக்க முடியும் எனத் திடமாக நம்பியது. அந்த முயற்சியின் ஒரு பகுதி தான் தற்சமயம் திருகோணமலைக் கடற்பரப்பில் இடம்பெறும் இலங்கை இந்தியக் கடற்படையினரின் கூட்டுப் பயிற்சியாகும். எப்படியிருப்பினும் தமிழ் மக்களின் பேரம் பேசும் வலிமையை அதிகரிக்க வைக்கும் தமிழ் மக்களின் ஆயுத பலம் அழிக்கப்பட்டதில் இந்தியாவே பிரதான நாயகனாக விளங்கியது.




தென்னாசியப் பிராந்தியத்தில் சீனாவின் ஆதிக்க விஸ்தரிப்புக்கு எதிரான விவகாரங்களை அமெரிக்கா உட்பட மேற்கு நாடுகள் இந்தியா முலமே கையாளுகின்றன. இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் சீனா தனது கடலாதிக்கத்தை நிலைநிறுத்த மேற்கொள்ளும் முத்து மாலைத் திட்டத்திற்கு எதிரான இந்திய நகர்வுகளுக்கு மேற்குலகம் ஆதரவு வழங்கி வருகிறது.

அவ்வகையில் இலங்கை விவகாரங்களையும் இந்தியா முலமாகவே மேற்கு நாடுகள் கையாள விரும்புகின்றன.

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்குமிடையேயான சமாதானப் பேச்சுகளில் இந்தியா பங்கு கொள்ளாத போதும் ஒவ்வொரு சுற்றுப் பேச்சு முடிந்த பின்பும், அதன் அனுசரணையாளராக விளங்கிய நோர்வே அமைச்சர் எரிக் சொல் ஹெய்ம் இந்தியா சென்று கலந்துரையாடல்களை மேற்கொண்டு வந்ததை நாம் மறந்துவிட முடியாது. போரின் இறுதி நாட்களில் மேற்கு நாடுகள் முன் வைத்த போர் நிறுத்தக் கோரிக்கை இந்தியாவின் நிலைப்பாடு காரணமாகவே கை விடப்பட்டது.

இதிலிருந்து நாம் இலங்கையின் இனப்பிரச்சனை உட்பட தென்னாசியாவின் எந்த ஒரு பிரச்சினையிலும் இந்தியாவைத் தவிர்த்து எந்த நடவடிக்கைகளிலும் இறங்கப் போவதில்லை என்பதும் தெளிவான விஷயமாகும்.

போரில் விடுதலைப் புலிகளை அழித்ததன் மூலம் தமிழ் மக்களின் பேரம் பேசும் வலிமையைப் படுமோசமான முறையில் பாதித்த நாடு என்ற வகையிலும் தென்னாசிய விவகாரங்களில் இந்தியாவின் முக்கியத்துவம் காரணமாகவும் தமிழ் இனப்பிரச்சினைக்கு ஒரு நியாய பூர்வமான தீர்வைக் காண்பதற்கான கடப்பாடு இந்தியாவுக்கு உண்டு.

அண்மையில் இலங்கைக்கு விஜயம் செய்து விட்டு இந்தியா சென்ற அமெரிக்காவின் மத்திய தென்னாசிய விவகாரங்களுக்கான துணைச் செயலர் ரொபேட் ஓ பிளாக் அவர்கள் இலங்கை தொடர்பாக ஒரு சுயாதீன விசாரணையை மேற்கொள்ள ஒரு பொறிமுறையை உருவாக்கவும், தடுத்து வைக்கப்பட்ட கைதிகளை விடுவிக்கவும், பயங்கரவாதத் தடைச்சட்டங்கள் போன்ற சட்டங்களை விலக்கவும், இராணுவ முகாம்கள் உயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றி மக்களைத் தங்கள் சொந்த இடங்களில் குடியேற அனுமதிக்கவும் இந்தியா இலங்கை மீது அழுத்தங்களைப் பிரயோகிக்க வேண்டுமெனக் கேட்டுக் கொண்டார். இப்படியான நிலையில் இந்தியாவின் பொறுப்பு எத்தகையது என்பதை நாம் புரிந்து கொள்ளமுடியும்.

ஆனால் இந்தியாவின் போக்கோ தமிழ் மக்களைப் பொறுத்தவரை கவலையளிக்கும் விதமாகவே இருந்து வருகிறது. அதாவது மஹிந்த அரசைத் திருப்திப்படுத்தும் வகையிலேயே இந்தியா இலங்கையின் இனப் பிரச்சினையைக் கையாள முயலும் ஒரு நயவஞ்சக ராஜதந்திரத்தை மேற்கொண்டு வருவதாகவே தோன்றுகிறது.

குறிப்பாக இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக மேற்குலகின் அக்கறை, தமிழ் மக்களின் வலுவான கோரிக்கைகள் என அனைத்தையும் மழுங்கடிக்கவும் திசை திருப்பவும் பல்வேறு தந்திரோபாயங்களைக் கையாண்டு இலங்கை அரசைப் பாதுகாக்க முனைகிறது. அதாவது இலங்கை இனப்பிரச்சினைத் தீர்வுக்கு சாதகமான முறையில் உருவாகி வரும் தேசிய, சர்வதேச வாய்ப்புகளை இந்தியா மூலமாக இலங்கை திசைதிருப்பி சிதைத்து விடுமோ என்று அஞ்ச வேண்டிய நிலை தோன்றியுள்ளது. இத்தகைய ஒரு நயவஞ்சக முயற்சிக்கு இந்தியாவின் நிழலில் அரசியல் பேசும் சில தமிழ்க் குழுக்கள் மட்டுமின்றி தமிழ் தேசியக் கூட்டமைப்பும் மிகமிக விழிப்பாக இருக்க வேண்டியது அவசியம்.

போருக்கு முன்பும் சரி, போர் நடந்த காலத்திலும் சரி இலங்கைத் தமிழ் மக்களுக்கு தமிழக மக்கள் வழங்கி வரும் சக்தி மிக்க ஆதரவு ஒரு வலிமையாகவே எமக்கு விளங்கி வந்திருக்கிறது. ஆனால் கருணாநிதி ஆட்சியிலிருந்த போது தமிழக மக்களின் எழுச்சியை மழுங்கடிக்கப் பல்வேறு விதமான தந்திரங்களை மேற்கொண்டு இந்திய மத்திய அரசின் தமிழ் மக்கள் விரோத நடவடிக்கைகளுக்கு அவர் துணை போனார். குறிப்பாகப் போர் உச்சக் கட்டத்தை எட்டிய போது தமிழ் மக்கள் இலங்கையில் வகை தொகையின்றி அழிக்கப்பட்டபோது தமிழகம் பொங்கி எழுந்த நிலையில் உண்ணாவிரதம், நாடாளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலகல் போன்ற பச்சை ஏமாற்று நடவடிக்கைகளை அரங்கேற்றினார். தமிழக மக்கள் தம்மைத் தீமூட்டி எரித்து தமது எதிர்ப்பை வெளியிட்ட போதும் தி.மு.க அரசு மத்திய அரசை நியாயப்படுத்தும் போக்கையே கடைப்பிடித்தது.

அதற்கு கடந்த தேர்தலில் தமிழ் மக்கள் சரியான பாடம் புகட்டி தி.மு.கவை ஆட்சிப்பீடத்திலிருந்து தூக்கியெறிந்தனர். ஆனால், அண்ணாதி.மு.க ஆட்சிக்கு வந்த பின்பு செல்வி.ஜெயலலிதா இலங்கை இனப் பிரச்சினை தொடர்பாக தீர்க்கமான உறுதியான நிலைப்பாட்டை எடுத்து வருகிறார். தமிழக மக்களின் உணர்வுகளைச் சட்டசபைத் தீர்மானங்கள் மூலம் வலுப்படுத்தி மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுத்து வருகிறார்.

இலங்கை இனப்பிரச்சனை தொடர்பான சர்வதேச அழுத்தங்கள், தமிழக மக்களின் எழுச்சி என்பனவற்றை இலங்கையின் தமிழ்க் கட்சிகளை வைத்தே மழுங்கடிக்கும் ஒரு நயவஞ்சக தந்திரோபாயம் தான் சுதர்சன நாச்சியப்பன் தலைமையில் மேற்கொள்ளப்பட்ட தமிழ் கட்சிகளின் 'துயரும் தீர்வும்' என்ற கலந்துரையாடல் நாடகம். இதில் அவர் கோரியபடி தமிழ்க் கட்சிகள் இணைந்து ஒருமுகமான தீர்வை முன்வைத்தன. ஆனால் அவர் அதில் மாற்றங்கள் ஏற்படுத்தும் படி வலியுறுத்தினார். குறிப்பாக தேசியம், சுயநிர்ணயம், தாயகம் போன்ற வார்த்தைப் பிரயோகங்கள் தவிர்க்கப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். தமிழ்க் காங்கிரஸ் எடுத்த உறுதியான நிலைப்பாடு காரணமாக அந்தச் சதி முறியடிக்கப்பட்டது.

அதாவது தமிழ்மக்கள் மீது ஒரு போலியான தீர்வை இலங்கை அரசு திணிப்பதற்கான வாய்ப்புகளை வழங்கும் வகையில் அரசு தமிழ் கட்சிகள் மூலமே பலவீனமான கோரிக்கையை முன்வைக்கச் செய்யும் ஒரு பெரும் சதியே இந்தத் 'துயரும் தீர்வும்' என்ற நாடகம். தமிழ் மக்களின் கையாலேயே தங்கள் தலையில் மண் அள்ளிப் போட வைக்க இந்திய மத்திய அரசு சுதர்சன நாச்சியப்பன் மூலம் மேற்கொள்ளப்பட்ட முயற்சியிலிருந்து இலங்கைத் தமிழ் மக்கள் தற்காலிகமாகத் தப்பி விட்டனர். ஆனால், அடுத்த வலை பின்னப்படாது என்று மட்டும் நினைத்து எம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளக் கூடாது என்பது தான் முக்கியம்.

இந்திய அரசு இலங்கை அரசின் இன ஒடுக்குமுறை நடவடிக்கைக்கு தொடர்ந்து துணைபோகும் என்பதும், அதைப் போர்க் குற்றங்களிலிருந்து தப்ப வைக்க எல்லா முயற்சிகளையும் எடுக்கும் என்பதும் மறுக்க முடியாத உண்மை. ஆனால் சர்வதேசமோ இலங்கைப் பிரச்சினையை இந்தியா முலமாகவே கையாள விரும்புகிறது என்பதும் அடுத்த உண்மை. இதுதான் இன்று இலங்கைத் தமிழ் மக்கள் முகம் கொடுக்கும் மிகப் பெரும் சிக்கல்.

இச் சிக்கலுக்கு முகம் கொடுக்க எமக்குள்ள ஒரே வழி எமது உறுதியான நிலைப்பாடு தான். எத்தகைய மாய்மாலங்களிலும் அகப்படாது நாம் எமது கோட்பாட்டில் உறுதியாக இருக்க வேண்டும். அப்போது தான் இன்று எமக்குச் சார்பாக எழுந்துள்ள சர்வதேச சூழலும், இந்திய மக்களின் எழுச்சியும், பயனுள்ள பலாபலன்களை எமக்கு வழங்க முடியும். எதிர்த்தரப்பினருடனான பேச்சுவார்த்தைகள் உரிமைகளைப் பெறுவதற்கேயொழிய உரிமைகளை மறைத்து பறிகொடுப்பதற்கு அல்ல என்பதை எப்போதும் நினைவில் நிறுத்த வேண்டும். ★

உண்மைச் சம்பவம்

# விபரீதத்தில் முடிந்த உல்லாசப் பயணம்



■ ஜெகன்

**50** வயதான பபியோ ஓர் பிரபலமான வழக்கறிஞர். நற்பண்புக ளை உடையவர். அவரது அன்பு மனைவி என்றிகா. விஞ்ஞான பட்டதாரி ஆசிரியை. 47 வயதான அவளும் கணவரும் நியூயோர்க் சென்று திரும்பியிருந்தனர். இருவருமே தம் தொழிலில் கடுமையாக உழைப்பவர்கள்.

அவர்களுக்கு அன்டிரா, விவா, லூஜி என முறையே 14வயது, 12வயது, 9வயது நிரம்பிய மூன்று பெண் குழந்தைகள் இருந்தனர்.

ஈஸ்டர் பண்டிகைக்கு மனைவி பிள்ளைகளுடன் நகரத்திற்கு அப்பால் சிறிதுதூரம் சென்று அன்றைய ஒரு நாள் விடுமுறையை மகிழ்ச்சிகரமாகக் கழிக்க வேண்டும் என்று எண்ணினார் பபியோ.

அன்டார்டிக் கடலுக்குப் பதினாறு மைல் தொலைவிலுள்ள டராமோ மலைக்குச் செல்ல அவர் திட்டமிட்டார். இது குறித்து அவர்களுக்கு நெருங்கிய நண்பரான பிரான்கோவுக்குக் கூறியதும், அவர் மனைவி ரோசன்னாவும், டேனியல், றொனால்டோ என்ற இரண்டு பிள்ளைகளும் கூட வருவதாகச் சொன்னார்கள்.

றோம் நகரத்தை விட்டு இரண்டு குடும்பத்தினரும் இரண்டு கார்களில் புறப்பட்டனர். சனிக்கிழமை அன்று புறப்பட்ட அவர்கள், இரவை டராமோ மலைக்கு அருகிலுள்ள கிரான் பெஸ் சோவில் கழித்தார்கள். மறுநாள் பொழுது விடியும் சமயம் இரு குடும்பத்தினரும் மலையை நோக்கிக் காரில் புறப்பட்டனர். குழந்தைகள் குதூகலத்தில் ஆழ்ந்திருந்தனர். மலைக்குச் சில மைல் தூரத்தில் பொஸ்கோ என்னும் இடத்தில் கார்களை நிறுத்தினர்.

அதற்கப்பால் காரில் பயணிக்கமுடியாது என்பதால் பிக்னிக்குக்காக எடுத்துவந்திருந்த உணவுப் பொருட்கள், மதுவகைகள் மற்ற சாமான்கள் அனைத்தையும் எடுத்துக் கொண்டு அனைவரும் நடந்தனர்.

அந்தப் பயணம் அவர்கள் வாழ்வில் இவ்வளவு மோசமான விபரீதமாக முடிவுறும் என எவர்தான் நினைத்திருப்பார்கள்.

காற்று லேசாக வீசிக் கொண்டிருந்தது. கால்களில் கனமான பாதணிகளை அனைவரும் அணிந்திருந்தனர். அதனால் அவர்கள் வெண்மையாக மலையடிவாரத்தில் பெய்திருந்த பனியில் கவலையின்றி நடந்தனர். எழில் கொஞ்சும் இயற்கைக் காட்சிகள் அவர்கள் மனதைக் கவர்ந்தன.

ஓர் மலைக் குகையை அடைந்தனர். குகைக்கு வெளியே தமது பிக்னிக்கை வைத்துக்கொள்ளத் தீர்மானித்தனர். குழந்தைகள் பனியில் விளையாடத் தொடங்கினர். பெற்றோர்கள் தம்முடன் எடுத்துவந்த சிறியமேசை மற்றும் நாற்காலிகளை தரையில் போட்டு உணவுப் பொருட்களையும் எடுத்து வந்து விரித்து வைத்த போர்வையின் மேல் வரிசையாக எடுத்து வைத்தனர். ஈஸ்டர் பண்டிகைக்காக இத்தாலியர்கள் வழக்கமாகத் தயாரிக்கும் வறுத்த ஆட்டு இறைச்சி, உருளைக் கிழங்கு, கேக், ரொட்டி ஆகியவற்றுடன் பெரியவர்களுக்காக வைனும், சிறுவர்களுக்காக தோடம்பழ ரசமும் எடுத்து மேசையின் மீது வைத்தனர்.

எல்லாம் நேர்த்தியாக அமைந்தன. மலைக்குச் சிறிது தூரத்தில் கடலும், பனி படிந்த மலைப் பகுதியும் இளம்கதிரவனின் ஒளியில் மின்னின. மேலே நீல நிற வானம்.

எல்லாவற்றையும் விட மலைச்சிகரங்கள் மிக நேர்த்தியாக இருந்தன. மலையின் உச்சியில் நாற்பது அடி பருமனில் இருநூறு அடி நீளத்திற்குப் பனி படிந்திருந்தது.

சூரிய கிரணத்தை அவர்கள் பார்த்து அனுபவித்துக் கொண்டிருந்தனர். அதே சமயம் சூரியனின் கிரணத்தால் பனிப்படலத்தில் என்ன நடந்து கொண்டிருக்கிறது என்பதை அவர்கள் அறியாதவர்களாக இருந்தனர்.

அனைவரும் நடக்கப்போ கும் விபரீதம் குறித்து அறி யாதவர்களாக பிக்னிக்கை மகிழ்ச்சியுடன் அனுபவித்துக் கொண்டிருந்தனர். எல்லோரும் கேக், ரொட்டி சாப்பிட்டனர். பெரியவர்கள் வைனும், சிறியவர்கள் தோடம்பழ ரசத்தையும் சுவைக்கும்போது சூரிய ஒளியின் சூட்டில் மெதுவாக உருகிக் கொண்டிருந்த மலை மேல் அதுவும், அவர் களுக்கு நேரெதிரே மேலே இருந்த பனிப் பாறை கீழே சரிந்தது. இரண்டு வினாடிக்குள் மேசை, நாற்காலிகள், பிக்னிக்கில் சாப்பிட்டுக் கொண்டிருந்தவர்கள்- எல்லோரும் உறைபனியில் புதைந்தனர்.

எப்படியோ ஒருவாறு பிரான்கோ உறைபனியில் முழுவதுமாகப் புதைந்துவிடாமல் தப்பிவிட்டார். அவர் மார்பளவே புதைந்திருந்தார். விரைவில் மிகவும் பிரயாசைப்பட்டு அவர் உறைபனியில் இருந்து விடுவித்துக் கொண்டார். மற்றவர்கள் எங்கிருக்கிறார்கள் என்பதே தெரியவில்லை.

அவர் இடையில் கட்டியிருந்த பெல்ட்டில் இணைத்திருந்த பக்கிள்சைக் கழற்றி எடுத்து தம்மைச் சுற்றி அருகாமையில் உள்ள உறைபனியைத் தோண்டினார். வெகுநேரம் கஸ்டப்பட்டதன் பின்பு 14வயதுப் பையன் அன்டிரா கிடைத்தான்.

அடுத்து ஏதோ முனகல் சத்தம் கேட்டுத் தொடர்ந்தும் தோண்டியபோது மனைவி ரோசன்னாவைக் காப்பாற்ற முடிந்தது. அவளும் சுயநினைவில்லாமலே கிடந்தாள். அவளை ஒருவாறு தேற்றிய பிறகு மற்றவர்களைத் தேடி பல இடங்களைத் தோண்டினார் யாரும் அகப்படவில்லை.

குகைக்கு அருகில் யாராவது இருக்கிறார்களா என்று பிரான்கோ. தேடினார். தூரத்தில் "பிரான்கோ வா கடவுளுக்காக வந்து உதவி செய்" என்று யாரோ கத்தினார்கள்.

சுமார் முப்பது நிமிட நேரம் எங்கெல்லாமோ ஓடித் தேடினார் பிரான்கோவுக்கு மூச்சிரைத்தது. சுமார் மூன்று மைல் தூரம் உரக்கக் கத்திக் கொண்டே ஓடினார். பல இடங்களில் தடக்குண்டு வீழ்ந்தார். கடைசியாகக் கார் நிற்பாட்டிய இடத்தை அடைந்தார் காரை எடுத்துக் கொண்டு பக்கத்துக் கிராமதிற்கு உதவி கோரிச் சென்றார். உதவி புரியப் பலர் உடனே விரைந்தோடி வந்தனர்.

உயிர் பிழைத்த ஒவ்வொருவரையும் எடுத்துச் சென்று அம்புலன்சில் ஏற்றினார்கள் "என் குழந்தைகளைப் பார்க்காமல் நான் வரமாட்டேன்" என்று றோசன்னா பிடிவாதமாக நின்றாள்.

அன்று இரவு ஒன்பது மனிக்குக் கடைசியாக விவா கிடைத்தாள். அவள் சுய நினைவில்லாமலிருந்தாள். அவளது பெற்றோர் கிடைக்கவே இல்லை. மூன்று வாரங்களின் பின்னர் அவர்களின் சடலங்கள் மீட்புப் பணியாளரிடம் அகப்பட்டன.

பன்னிரண்டு வயதான விவா தன் பெற்றோர்கள் இறந்துவிட்டதை முன்பே தெரிந்து கொண்டு விட்டாள். பெற்றோரின் சடலங்கள் கிடைத்த செய்தி மருத்துவமனைக்கு கிடைப்பதற்கு முன்பே அங்கு சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்த விவா "அம்மா, அப்பா இருவரும் உறைபனியில் இறந்து விட்டது எனக்குத் தெரியும்" என்றாள்.

பபியோவின் குழந்தைகளைப் பிடித்த துரதிஸ்டம் அத்துடன் விட்டுவிடவில்லை.

மருத்துவ மனையில் இருந்து அவர்கள் றோம் நகரத்திலுள்ள தம் வீட்டிற்குச் சென்ற வேளையில் வீட்டுச் சாமான்கள் அனைத்தும் திருட்டுப் போயிருந்தன. அவர்கள் குடுப்பம் உறை பனியில் சிக்கிக் கொண்ட செய்தியை வானொலி மூலம் அறிந்த திருடார்கள் வீட்டில் புகுந்து அனைத்தையும் சுருட்டி வாரிக் கொண்டு சென்றுவிட்டனர்.

தாய் தந்தையை இழந்து சொத்துக்களையும் இழந்து பரிதவிக்கும் தனது நண்பனின் பிள்ளைகளை பிரான்கோவும் மனைவியும் தம்முடன் கூட்டிச் சென்று தமது இல்லத்தில் வைத்துப் பாதுகாவலராக இருந்து வளர்த்தனர்.

அந்தப் பயணம் அவர்கள் வாழ்வில் இவ்வளவு மோசமான விபரீதமாக முடிவுறும் என எவர்தான் நினைத்திருப்பார்கள். ★

## சிந்தனைக்குச் சில துளிகள்!

- ★ புத்திமதி விளக்கெண்ணெய் போன்றது அதைக் கொடுப்பது சுலபம், அதைக் குடிப்பது மிகவும் கஷ்டம்.
- ★ பெண்களுக்கு இரண்டுமுறை பைத்தியம் பிடிக்கும்.
- ★ ஆண்கள் இதயங்களால் சிரிப்பார்கள். பெண்கள் உதடுகளால் சிரிப்பார்கள்.
- ★ நாக்கு தான் பெண்ணிற்கு வாள், அது ஒருபோதும் துருப்பிடிப்பதில்லை.
- ★ உன் இதயம் ரோஜாமலராயிருந்தால், பேச்சில் அதன் வாசனை தெரியும்.
- ★ சோம்பேறித்தனம் தான் அடிக்கடி பொறுமை என்ற பெயரில் தவறாகக் கணிக்கப்படுகிறது.
- ★ உரலில் தலையைவிட்டபிறகு உலக்கைக்கு அஞ்சக் கூடாது.
- ★ சொந்த ஊரில் ஒருவன் பெயருக்கு மதிப்பு, அயலூரில் அவன் சட்டைக்குத் தான் மதிப்பு.
- ★ மகிழ்ச்சியை விலைகொடுத்து வாங்க முடியுமானால் அந்த விலையைப் பற்றியும் நாம் கண்ணீர்விட்டுக் கொண்டிருப்போம்.
- ★ எந்தப் பழக்கத்தையும் ஜன்னல் வழியாகத் தூக்கி எறிந்துவிடமுடியாது. கையைப் பிடித்து படிப்படியாக இறங்கி அழைத்துப் போய்தான் வெளியேற்ற வேண்டும்.
- ★ எல்லோருக்குமே உங்கள் காதைக் கொடுக்கலாம். ஒரு சிலரிடம் மட்டுமே வாயைக் கொடுக்கலாம்.
- ★ நம்பிக்கையுள்ளவர்களுக்கு கதவுகள் மூடிக்கொண்டாலும், ஜன்னல்கள் வழிகாட்டும்.
- ★ ஒருவன் தன் கோடாரியை விழுங்கப்போவதாகச் சொன்னால், நீ அதன் காம்பைப் பிடித்துக்கொண்டு அவனுக்கு உதவி செய்.
- ★ அழகுக்காகத் திருமணம் செய்து கொள்பவன் இரவு நேரங்களில் இன்பமாகவும், பகல்நேரங்களில் துக்கமாகவும் இருப்பான்.
- ★ தூக்கம் வந்துவிட்டால் தலையணை தேவையில்லை, காதல் வந்து விட்டால் அழகு தேவையில்லை.
- ★ ஒன்பது வியாபாரம் செய்பவனுக்கு தரித்திரத்தைச் சேர்த்துப் பத்தாகும்.
- ★ நீ குடும்பத்தின் தலைவனாக இருக்கவேண்டுமானால், உன்னை மூடனாகவும் செவிடனாகவும் காட்டிக் கொள்ளவேண்டும்.
- ★ கெட்டிக்காரன் தன் நற்பண்புகளை உள்ளே மறைத்து வைத்துக் கொள்கிறான், மூடன் அவைகளைத் தன் நாவிலே தொங்கவிட்டுக் கொள்கிறான்.
- ★ தாய்வார்த்தை கேளாப்பிள்ளை, நாய்வாய்ச் சீலை.
- ★ ஊமை மனைவி கணவனிடம் அடிபடுவதே இல்லை.
- ★ பெண்பிள்ளை விவாகத்திற்கு முன்னாள் அழுவாள், ஆண்பிள்ளை விவாகத்திற்கு பின்னால் அழுவான்.
- ★ பெண்ணின் யோசனையால் பலனில்லை என்றாலும், அதை ஏற்றுக் கொள்ளாதவன் பாடு அவலம்தான்.
- ★ உலகத்திற்கே தெரியவேண்டிய விஷயத்தை உன் மனைவியிடம் மட்டும் சொல், அது போதும்.
- ★ தூக்கில் தொங்குவதும் மனைவி வாய்ப்பதும் விதியின் பயன்.

# மருந்துகளுக்கெல்லாம் மருந்தாக இருப்பது சிரிப்பு



ஒருவரின் மனநிலைக்கும் அவரின் மகிழ்ச்சிக்கும் நெருங்கிய தொடர்பு இருக்கிறது. மன தில் மகிழ்ச்சி குறையக்குறைய உடல் நலமும் பாதிக்கத் தொடங்கும். மன இறுக்கம், மனச்சோர்வு, மன உளைச்சல், மனப்புழுக்கம் என்பவை எதனால் எப்படித் தோன்றியது? எப்படிப் போக்குவது? என்று தெரியாமல் குழப்பிப் போகின்றவர்கள் பலர். இந்த மன இயல்பு மாற்றத்துக்கு மா மருந்தாக இருப்பது, சிரிப்பு. வாய்விட்டுச் சிரித்தால் நோய் விட்டுப் போகும் என்றிருக்கையில் ஏன் வாய் மூடி இருக்கவேண்டும்.

**நோய் எதிர்ப்பு சக்தி**

மருந்துகளுக்கெல்லாம் மருந்தாக இருப்பது சிரிப்பு என்று எண்ணற்ற ஆராய்ச்சியாளர்கள், கூறியிருக்கின்றார்கள். காரணம், சிரிப்பு என்னும் மருந்தே நோய்களை விரைவாகக் குணப்படுத்துகிறது. நோய்களைப் போக்கவும் மீண்டும் அவை வராமலிருக்கவும் நோய் எதிர்ப்புச் சக்தியை உடலுக்குத் தருகிறது சிரிப்பு.

உடம்பில் நோய் எதிர்ப்பு என்னும் சக்தியாகச் செயல்படுகின்ற வெள்ளை அணுக்களுக்கு மிகவும் விருப்பமானது சிரிப்பு. சிரிப்பைக் கேட்டால் வெள்ளை அணுக்கள் அதிக அளவில் உற்பத்தியாகின்றன. உடம்பிலுள்ள நரம்புகள் ஒரு வகையான இரசாயனத்தை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றன. சிரிக்கும் போது அந்த இரசாயனம் அதிக அளவில் உற்பத்தியாகி நோய் எதிர்ப்புச் சக்தியை ஊக்குவிக்கிறது. மேலும், நாம் சிரிக்கும்போது, மூக்கிலுள்ள சளியில் இம்யூனோகுளோபுலின்&ஏ என்னும் நோய் எதிர்ப்புப் பொருள் அதிகரிக்கிறது. அதனால், பாக்டீரியா, வைரஸ், புற்று நோய்த் திசுக்கள் உடலுக்குள் சென்று விடாதவாறு தடுக்கப்படுகிறது.

**இரத்தம் தூய்மையாகும்**

இரத்த நாளங்களில் கொழுப்பு அதிகரிப்பதானாலேயே மாரடைப்பு மற்றும் இதய நோய்கள் ஏற்படுகின்றன. இதுபோன்ற அபாயகரமான நோய்கள் தோன்றாதிருக்க வேண்டுமானால், நாள் தோறும் குறைந்தபட்சம்ஒரு மணி நேரமாவது, சிரித்துப் பழகவேண்டும். நகைச்சுவைப் படங்கள், வசனங்கள், கதைகள், சொற்பொழிவுகள் போன்றவற்றைக் கேட்டு சிரிக்க வேண்டும்.

சிரிப்பினால், இரத்தம் தூய்மையாகிறது. இரத்த அழுத்தம் குறைகிறது. நுரையீரல் நன்கு செயல்படுகிறது. சிரிப்பினால், என்சிபேலின்ஸ் என்னும் ஹோர்மோன் சுரக்கிறது. அது தசைகளில் ஏற்படும் வலிகளை நீக்குகிறது. ஸெப்டிக் அல்சர் என்னும் இரைப்பைப் புண் குணமாகிறது. மூளை நரம்புகள் சிறப்பாகச் செயல்படத் தொடங்குகின்றன. எனவே, நோய் வராமல் தடுக்கவும் வந்த நோயிலிருந்து விடுபடவும் சிரித்துப் பழகுங்கள்.

**அதிகரிக்கும் நட்பு வட்டம்**

சிரிப்பில் பலவகை இருந்தாலும் மகிழ்ச்சிக்காகச் சிரிக்கும் சிரிப்பே சிரிப்பு. நகைச்சுவைக்காகவும் பிறரைக் கேலி செய்வதற்காகவும் சிரிப்பு பயன்படுகிறது. சிலரது நகைச்சுவை, சிந்தனையை தூண்டக்கூடியதாகவும் அறிவுக்கு விருந்தாகவும் இருக்கும். சிலரது நகைச்சுவைப் பொருள் பொதிந்ததாகவும் இருக்கும். பிறர் மனதை புண்படுத்தாமல் நகைச்சுவையினால் ஏற்படக்கூடிய சிரிப்பு மனத்துக்கு ஊட்டமாக அமைகிறது. மனத்தின் சுமையைக் குறைக்கிறது. உடலுக்கு ஆரோக்கியத்தை, புத்துணர்ச்சியைத் தருகிறது. நகைச்சுவை உணர்வு உள்ளவர்களுக்கு நண்பர்கள் வட்டம் பெரிதாக இருக்கும். உறவு பலமாக இருக்கும்

**புன்னகையால் மலரும் மனம்**

புன்னகை என்பது ஆன்மாவின் உருவம். கண்ணுக்குத் தெரியாமல் உள்ளுக்குள் மறைந்திருக்கும் ஆன்மா, தனது அழகை வெளிப்படுத்தும்போது, புன்னகை தோன்றுகிறது. ஆன்மா உடலுக்கு எவ்வளவு முக்கியமோ அதைப்போல உடல் நலத்துக்கு ஆன்மா வழங்கும் புன்னகை முக்கியம். சிரிப்பினால், உடல் நலம் பெறும். சிரிப்பினால் செல்வம் பெருகும். சிரிப்பினால், இந்த உலகம் உள்ளங்கைக்குள் வரும் என்பதை கண்கூடாக காணலாம்.

மனத்துக்கு என்று இருக்கும் ஒரே மருந்து சிரிப்பு மட்டுந்தான். அந்தச் சிரிப்பு மருந்து கசப்போ புளிப்போ உவர்ப்போ கார்ப்போ துவர்ப்போ இல்லை. சிரிப்புக்கு என்றிருப்பது ஒரே சுவை. அது இனிப்பு. இனிப்பு பிடிக்கும் போது சிரிப்பு பிடிக்காமல் இருக்குமா? சிரியுங்கள். சிரிக்கச்சிரிக்க மலரும் தாமரை போல், மனம் மலர்ந்து மணம் வீசத் தொடங்கும் என்பது நிதர்சனமான உண்மை


Sudar Oli

வார மலரை ஐரோப்பாவில்
தபால் செலவை மட்டும் செலுத்தி வாராந்தம்
இலவசமாகப் பெற்றுக்கொள்ளவும்.
பிறந்தநாள் வாழ்த்துக்கள், மரண அறிவித்தல்கள்
மற்றும் அனைத்து விளம்பரங்களும்

Sudaroli, Post fach 60,
4302 August,Switzer land,
Tel: 0041 61813 15 52

Mail: info@tamilkadai.ch



Hotel & Gastro formation by Hotel & Gastro Union GastroSuisse hotelleriesuisse



ஹோட்டல் துறையில் மேல்ப் படிப்பு இலவசம்

புறகிறஸ்சோ - இலவசம் - தொழில் மற்றும் துறைசார் நிபுனத்துவம்.

ஹோட்டல் முகாமைத்துவம், சமையல் மற்றும் சர்வர் வேலைகளுக்கான தொழில் பயிற்சிகள். படிப்புக் காலங்களுக்கு வேலையிடத்தில் விடுமுறை பெற்றுத் தரப்படும்.

நேடியாக இணையத்தில் அல்லது தொலைபேசி மூலம் பதிவு செய்யலாம்.

www.progresso-lehrgang.ch

| Hotel & Gastro *formation* | Eichistrasse 20 | 6353 Weggis
| Telefon +41 (0)41 392 77 33 | Fax +41 (0)41 392 77 70
| progresso@hotelgastro.ch | www.progresso-lehrgang.ch



உலகின் முதலாவது பல மொழி தமிழ் அகராதி, தமிழ், ஆங்கிலம், டொச், பிரெஞ்ச், இத்தாலி, நெதர்லாந்த், டெனிஸ், சுவீடிஸ், சிங்களம் ஆகிய பத்து மொழிகளைக் கொண்ட அகராதி. உங்கள் கையடக்கத் தொலைபேசியில் பதித்துக்கொள்ளலாம்.

மொழி படிப்பவர்கள், பாடசாலை மாணவர்கள், ஐரோப்பிய சுற்றுப் பயணம் செய்பவர்கள் அவசியம் வைத்திருக்க வேண்டிய ஒரு மென்பொருள்.
தொடர்புகளுக்கு மூர்த்தி மாஸ்ரர்,


இலங்கைத் தொடர்புகளுக்கு 077 266 36 25,

Tel. 0041 61 813 15 52

www.tamilkadai.ch

உங்கள் கைபேசியில் 10 மொழி அகராதி

für Handy




Sprache wörterbuch

ஏஜண்டுகளுக்கு நல்ல கமிசன்

# பிறவிக் குணம்?



மற்றவர்கள் குறித்து ஊர் வம்பு பேசுவது பெண்களின் பிறவிக் குணம். அது எந்த காலத்திலும் மாறாது.

சமீபத்தில் இது குறித்த ஆய்வு இங்கிலாந்தில் மேற்கொள்ளப்பட்டது. அதில் நாள் ஒன்றுக்கு 298 நிமிடங்கள் அதாவது 5 மணி நேரம் பிறரை குறித்து பெண்கள் ஊர்வம்பு பேசுவது தெரிய வந்தது.

குழந்தைகள் பற்றியும், கடைகள், உபயோகிக்கும் சோப்புகள், மற்றும் பெண்கள் பிரச்சினைகள் குறித்தும் பேசுகின்றனர். அதே நேரத்தில் தங்களின் உடல் எடை, உணவு பழக்க வழக்கங்கள் மற்றும் உடை விவகாரங்கள் குறித்து மட்டும் 24 நிமிடங்கள் விவாதிக்கின்றனராம்.

ஆய்வு மேற்கொண்டவர்களில் மூன்றில் ஒரு பங்கு பெண்கள் தங்களின் சாப்பாட்டு விடயம் குறித்தே முக்கியமாகப் பேசுவதாகத் தெரிவித்துள்ளனர்.

பொதுவாக தங்களின் தோழிகள், கணவன்மார்கள் மற்றும் தாயாருடன் பேசி வம்பு அளக்கின்றனர். இவர்களில் தோழிகளுடன் தான் அதிக ஊர்வம்பு பேசுவதாக ஆய்வில் கண்டறியப் பட்டுள்ளது.

# மருந்தாகும் மல்லிகைப்பூ

மல்லிகையின் நறுமணத்தில் மயங்காதவர்கள் யாரும் இருக்கமாட்டார்கள். வெள்ளை நிறத்தில் பூத்துக்குலுங்கும் மல்லிகை மலர்கள் நறுமணத்திற்காக தலையில் சூடுவதற்கு மட்டுமின்றி பல்வேறு மருத்துவ குணங்களையும் தன்னுள்ளே கொண்டுள்ளது.

**மருத்துவ குணம்**

மல்லிகையில் சாதிமல்லி, ஊசி மல்லி, குண்டுமல்லி, என பல்வேறு வகைகள் உள்ளன. இதன் இலை, பூ, மொட்டு, வேர் என அனைத்தும் மருத்துவத் தன்மை வாய்ந்தது.



தினமும் ஓரிரு மல்லிகைப்பூக்களை உட்கொண்டு வந்தால் உடலில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும் என கண்டறியப்பட்டுள்ளது. மல்லிகைப்பூவை பெண்கள் சூடுவதால் அவர்களுக்கு அழகோடு பல பயன்களும் கிடைக்கிறது.

**மல்லிகைப் பானம்**

மல்லிகைப்பூக்களை நிழலில் உலர்த்தி காயவைத்து பொடி செய்து, தேனீர் போல போல் காய்ச்சி குடிக்க சிறுநீரக கற்கள் நீங்கும். நீர்சுருக்கு, நீர் எரிச்சல் நீங்கும். மல்லிகைப் பொடிப் பானம் தினமும் குடித்தால் எலும்புருக்கி நோய், நுரையீரல் புற்று நோய்களின் பாதிப்பு குறையும் எனக் கண்டறியப்பட்டுள்ளது.

**குடற்புழுக்கள் நீங்கும்**

குடலில் புழுக்கள் தங்கியிருந்தால் அவை குடல் சுவர்களை அரித்து தின்று புண்களை உண்டாக்கும். இதனால் செரிமானத்தன்மை குறையும். இந்த குடற்புழுக்களை அழிப்பதற்கு மல்லிகை மலர்களை நீர் விட்டு கொதிக்கவைத்து வடிகட்டி அருந்தினால் குடல்புழுக்கள் நீங்கும். அஜீரணக் கோளாறினால் ஏற்படும் வயிற்றுப் புண்களுக்கும், வாய்ப்புண்களுக்கும் மல்லிகை சிறந்த மருந்து.

**நரம்பு தளர்ச்சி நீங்கும்**

நேரங்கடந்த உணவு, சத்தான உணவின்மை போன்றவற்றினால் சிலருக்கு நரம்புகள் தளர்ச்சியடைந்து உடலில் பல பாதிப்புகளை ஏற்படுத்தும். இவர்கள் மல்லிகைப்பூக்களை நிழலில் காயவைத்து பொடி செய்து தேன் கலந்து சாப்பிட்டால் நரம்புத்தளர்ச்சி நீங்கும்.

கண்களில் சதை வளர்வதால் ஏற்படும் பார்வைக் கோளாறுகள் நீங்க மல்லிகைப் பூக்களை நீரில் கொதிக்க வைத்து அதனுடன் பனங்கற்கண்டு சேர்த்து அருந்தி வந்தால் கண்களில் ஏற்பட்ட சதை வளர்ச்சி குறையும்.

மல்லிகைப் பூக்களை நன்றாக கசக்கி நெற்றியின் இரு புறங்களிலும் தடவி வர தலைவலி குணமடையும்.

**பெண்கள் நோய் தீர**

பிரசவத்தில் ஏற்படும் பிரச்சினையினால் தாய்ப்பால் கொடுக்க முடியாமல் மார்பில் சுரந்த பால் கட்டிக்கொண்டு வலி ஏற்படும். இந்த சமயத்தில் மல்லிகைப்பூக்களை அரைத்து மார்பகத்தில் பற்றுபோல் போட்டால் வலி குறைந்து பால் சுரப்பது நிற்கும். மார்பகத்தில் தோன்றும் நீர்கட்டிகள் குணமடையவும் மல்லிகையை பற்று போடலாம். இதனால் வலி நீங்கி கட்டிகள் குணமடையும்.

மல்லிகைப்பூவை நன்கு கொதிக்க வைத்து ஆறியபின்பு குடித்து வந்தால் மாதவிலக்கின் போது ஏற்படும் பிரச்சினைகள் குணமடையும்.

மல்லிகைப் பூக்களைக் கொண்டு எடுக்கப்படும் எண்ணெய் கர்ப்பப்பைக்கு வலுவூட்டி பிரசவத்தின் போது உண்டாகும் வலியை குறைத்து சுகப்பிரசவத்திற்கு உதவுகிறது. பெண்களின் கருப்பையில் உண்டாகும் புண்கள், கட்டிகள் நீங்க மல்லிகை எண்ணெயை பயன்படுத்தலாம். நாள்பட்ட தழும்புகள், அரிப்புகள் குணமடையும்.

**நோய் எதிர்ப்பு சக்தி**

மல்லிகைப்பூக்களை தினமும் சாப்பிட்டு வந்தால் உடம்பில் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும். இதனால் அடிக்கடி சளியினால் ஏற்படும் மூச்சடைப்பு, இருமல் போன்ற தொந்தரவுகள் நீங்கும்.

மல்லிகை மொட்டுக்களை புண்கள், காயம்பட்ட இடங்கள், கொப்புளங்கள், வீக்கங்கள் போன்றவற்றிற்கு அரைத்து மேல் பூச்சாக பூசினால் உடனே குணமடையும். மல்லிகையின் வேரை காயவைத்து பொடிசெய்து அதனுடன் வசம்புத் தூளை சேர்த்து எலுமிச்சம் பழச்சாறு விட்டு தேய்த்து குளித்தால் தோல் நோய்கள் நீங்கும்.

# மனப் பயத்தை மாற்றுங்கள்

வாழ்ந்த வீட்டையும் சொந்த பந்தங்களையும் விட்டு புகுந்த வீட்டில் அடி எடுத்து வைக்கும் புதுமணப்பெண்களை தாக்கும் மனநோய்களில் முக்கியமானது 'நியூரோடிக் டிஸ்ஓடர்' எனப்படும் நரம்பு சம்பந்தப்பட்ட அச்ச பாதிப்புகள். இந்த நோய் உள்ள பெண்கள் பார்ப்பதற்கு சாதாரணமாக இருப்பார்கள். சூழ்நிலைக்கு ஏற்ப நடந்து கொள்வார்கள். ஆனால் மனதுக்குள் அஞ்சி நடுங்கிக் கொண்டிருப்பார்கள்.

'நியூரோடிக்டிஸ் ஓடர்' நோய் தாக்கியவர்கள் தினசரி வாழ்க்கையில் எதற்கெடுத்தாலும் அச்சப்படுவார்கள். குறிப்பாக விபத்து நடந்த இடத்தை பார்க்கவோ அல்லது விபத்தில் சிக்கியவர்களின் உடலைப் பார்த்தோ மிகவும் பயப்படுவார்கள். இரத்தத்தை கண்டால் அவர்களுக்கு வாந்தி, மயக்கம் ஏற்படும். இதனால் உடல்ரீதியாக மிகப் பெரிய பாதிப்பை எதிர்கொள்வார்கள். அவர்களின் உடலில் வியர்வை, நடுக்கம், விரைவான இதயத்துடிப்பு ஆகியவை ஏற்படும். சிறுகுடல் பாதிக்கப்படும். கொந்தளிப்பான உணர்வால் மூர்ச்சை உண்டாகும். இப்படி பயப்படும் பெண்கள் முதலில் வாழும் முறையை மாற்றவேண்டும்.


**வாழும் முறையில் மாற்றம்**

பள்ளிக்குச் செல்லும் குழந்தை வீடு திரும்பும் வரை பயப்படுவது, கணவரை நினைத்து கவலைப்படுவது ஆகியவை தேவையில்லாத பயம் என்பதை இந்த நோய் தாக்கியவர்கள் உணர வேண்டும். தனிமையில் இருந்தால் பயமாக இருந்தால் அதை தவிர்ப்பது நல்லது. அச்சம் தரும் சந்தர்ப்பங்களை குறைத்துக் கொள்ள வேண்டும்.

நியூரோடிக் டிஸ்ஓடர் நோய் தாக்கியவர்களுக்கு பாதுகாப் பான சூழலை உருவாக்க வேண்டும். பயப்பட வைக்கும் சூழ்நிலையை எதிர்த்து போராடும் மனநிலையை அவர்களுக்கு உருவாக்க வேண்டும். எதற்கும் பயப்படத் தேவை இல்லை என்று அவர்கள் மனதில் பதியும் வகையில் அடிக்கடி சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும். அச்சத்தால் உடலில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது என்று தெரிந்தால் உடனே மருத்துவரிடம் செல்லவேண்டும்.

**மனப்பான்மையை மாற்றுங்கள்**

எது நடந்தாலும் நன்மைக்கே என்ற மனப்பான்மையை உருவாக்க வேண்டும். எதையும் நேரடியாக சிந்திக்க கற்றுக் கொள்ள வேண்டும். தினமும் யோகா, தியானம், இசை ஆகியவற்றில் கவனம் செலுத்துவது நல்லது. மனதில் அச்சம் தோன்றும்போது ஏதாவது பாடலை பாடலாம். எப்போதும் நமக்குப் பிடித்த பாடலை முணுமுணுத்துக் கொண்டிருந்தால் அச்சம் தரும் சிந்தனை குறையும். இவை அனைத்தையும் விட, குடும்ப உறுப்பினர்களிடம் மனம் விட்டு பேச வேண்டும். இதனால் மனதில் அச்சம் குறையும்.



# கவிதைப் புனல்

## தேசத்தின் தூண்கள்



முச்சந்தி மூலையில்
இடித்து வீசப்பட்டுள்ளது
அந்தக் "கற்தூண்"

வெற்றுத் தான்தானே
என.....! பலர்.....!
வேதம் ஓதுகின்றனர்
பக்கப்பாட்டிற்கு - சிலர்
சல்லரியும் போட
புதையுண்டு போகின்றது
எங்கள்......?
தேசத்தின் வரலாறு!

ஆனால்............?
என்னால் மட்டும்
"வெற்றுத்தூண்" என
வெறுத்து ஒதுக்க
முடியவில்லை
அன்று எம்
வேதனைகள்
தகர்த்தெறிந்து
சோதனைகளை
சாதனைகளாக்கிய
"தேசத்தின் தூண்கள்"
அல்லவா
அவைகள்

- வன்னி மகன்.

## எனது அறைகூவல்



என்
உடம்பைத் தின்ற
மனிதர்கள் தான்- இப்போது
என் பெண்மையைப் பற்றி
விமர்சிக்கிறார்கள்

என்னை
அங்குலம் அங்குலமாக
அனுபவித்தவர்கள் தான்
என்னை வேசி என்று
விபரிக்கிறார்கள்

எனது
அதரங்களையும்
அந்தரங்கங்களையும் அணைத்து
போதையில் மிதந்தவர்கள் தான்
நான் நடத்தைக் கெட்டவள் என்று
நக்கலடிக்கிறார்கள்

நானே சொர்க்கமென
நாளாந்தம் வந்துபோனவர்கள் தான்
எனக்கு - பலவிதமான பெயர்களை
பரிசளித்து மகிழ்கிறார்கள்

என்னை அணைத்து
உடலை நுகர்ந்து
என் இளமையையும்
வாழ்க்கையையும் கொள்ளையடித்த
கொள்ளைக்காரர்களே - இன்று
என்னை கொல்ல வேண்டுமென்று
கோஷமிடுகிறார்கள்

அரசியல்வாதியிலிருந்து
அன்றாடங்காய்ச்சி வரை
ஆடையிழந்து
என் முன்னே நிர்வாணமாய்
கிடந்தவர்கள்- என்னை
துயிலுரிந்து துரத்துவதற்கு
திட்டமிடுகிறார்கள்

சமூகமே! சமூகமே!
உங்களில் ஒரு உத்தமன்
ஒருத்தியோடு வாழ்பவன்
ஒருவரேனும் சொல்லுங்கள்
உடனடியாய் நானும்
ஊரைவிட்டுப் போகிறேன்....

- இராமசாமி ரமேஷ்
(அளம்பில்).

## போதை



பதவி ஓர் போதை, அந்தப்
பதவிக்காய்ப் பறப்பவர்கள்
எதனையும் எண்ணிப் பாரார்!
எவரையும் மதிக்க மாட்டார்!
முதல்வராய் ஆகினாலும்
முன்னாலே ஓடப் பார்ப்பார்!
அதன் மேலும் கடவுள் ஆகி
அருளை வழங்கப்பாப்பார்!

ஆசைக்கோர் அளவே இல்லை,
அனைத்து மண் ஆண்டபோதும்
பேசுவார் ஆழி பற்றிப்
பெரு வானும் ஏறப் பார்ப்பார்!
கூசிடார் புகழைத் தேடக்
கொள்கையில் நில்லார், நெஞ்சில்
மா சிலாக் கடமை யாற்றி
மதிப்பினைத் தேடிடாரே!

- சி.அம்பலவாணர்,
திருகோணமலை.

முள்ளிலும் பாதணியாய்...
**ஏழையின் பாதம்**

நீர்வடிவ நெருப்பு
**மது**

கௌரவ பிச்சை
**சீதனம்**

இறுதிப் படுக்கையறை
**சவப்பெட்டி**

திருடனுக்கோ வியாபாரமாய்
**சாமி சிலை**

இன்னொரு உனதுயிர்
**மானம்**

குழந்தைக்கான தூக்கமாத்திரை
**தாலாட்டு**

கையிலடங்கும் எரிமலை
**தீப்பெட்டி**

பாரம்பரிய ஏழைத்தோடு
**கறிவேப்பிலைக்குச்சி**

மழையின் தாய்
**வெயில்**

பெண்ணின் முதல்மரணம்
**முதற்பிரசவம்**

பூமியின் பூப்புனிதவிழா
**மாரிமழை**

உயிரோடிடும் சிதை
**புகை**

முற்றத்தின் மேலாடை
**கோலம்**

காசிருந்தால் கலைவிழா
**பூப்புனித விழா**

பூமியின் ஆளுநர்
**சூரியன்**

முற்றமில்லா மாளிகை
**மாடி வீடு**

கடவுளுக்கும் கர்ப்பப்பை
**தாய்**

திருட்டு மென்பொருள்
**யூலியன் அசாங்கே**

பேய்களின் திருவிழா
**போர்**

பெருந்தன்மை குறியீடு
**விளக்குமாறு**

உயிரற்ற விசுவாசி
**ரோபோ**

- யோ.புரட்சி,
வள்ளுவர்புரம்.





## நவம்பரில் மௌன குரு

அருள்நிதியின் அடுத்தப் படம் நவம்பரில் திரைக்கு வருகிறது. படத்தின் பெயர் மௌன குரு. சாந்தகுமார் என்ற அறிமுக இயக்குனர் இயக்கியிருக்கும் இந்தப் படத்தை அருள்நிதியின் தந்தை தமிழரசு தயாரித்துள்ளார். படப்பிடிப்பு முடிந்து தற்போது டப்பிங் வேலைகள் நடந்து வருகின்றன.

## நயனை கவர்ந்த அமலாபால்

அமலா பால் விதவிதமாக போஸ் கொடுத்த போட்டோ அல்பத்தை இதழ் ஒன்றில் பார்த்த நயன்தாரா, உடனடியாக அமலாவுக்கு எஸ்எம்எஸ் அனுப்பினார். அதில், உங்களுடைய போட்டோவை பார்த்தேன். பாலிவுட் ஹீரோயின் பிரியங்கா சோப்ரா போல் இருந்தீர்கள் என்று புகழ்ந்து தள்ளி இருந்தார். உடனடியாக நன்றி கூறி மெசேஜ் அனுப்பிய அமலாவுக்கு, மகிழ்ச்சியில் கையும் ஓடவில்லை, காலும் ஓடவில்லை. இனிப்பான, பரிவான உங்கள் வாழ்த்து என்னை நெகிழ வைத்துவிட்டது. என அவர் கூறியுள்ளார்.



## அன்பு எனும் அபாயம்



பொதுவாக தூதரக அதிகாரிகளுக்கு நல்ல மரியாதை இருக்கும். பெரிய வேலை ஒன்றும் கிடையாது. சொகு வாழ்க்கை. ஆனால், ஜெர்மன் தூதரக அதிகாரி ஹெர்பெர்ட், ஜார்ஜியா நாட்டுக்கு வந்த போது எல்லாமே வேறும திரி ஆகிவிட்டது. அவரது வாழ்க்கை அர்த்தமற்று வெ மையாக மாறிப்போனது. வெறுமனே தூக்கத்தில் நடப்பு போல, வேலைகளைச் செய்து கொண்டிருப்பார். கம்ப்யூட டர் கேம்ஸில் பகல்களைக் கழிப்பார். ஜார்ஜியாவில் கிடை த்த காதலி நானாவால் கூட அவரது பொழுதுகளைக் க கண்டாக்க முடியவில்லை. ஒருநாள் காய்கறி மார்க்கெட் வழியே நடக்கும்போது நடந்தது ஒரு திருப்பம். அவர 'பர்ஸ்' வழிப்பறி செய்யப்பட்டது. மறுநாள் அந்த வழிப்பறிக் காரனைத் தேடிபோனா அடுத்த அதிர்ச்சி. பணத்தைப் பறித்தது பையன் அல்ல... ஆணைப் போல தோற்றமளிக்கும் 1 வயது குட்டிப் பெண். அவள் பெயர் சஸ்கா. ஒரு அகதி. குற்றங்களும் வறுமையும் உழலு பகுதியில் வாழ்ந்து கொண்டிருப்பவள். இவர்களுக்கு இடையே காதலோ காமமோ அற்ற ஒ மெல்லிய நட்புணர்வு பூக்கிறது. அவள் அவரைச் சிரிக்க வைக்கிறாள். பொறுப்புணர்வை புரிய வைக்கிறாள். ஆனால், விரைவிலேயே அவருக்கு கஷ்டகாலம் தொடங்கி விடுகிறது ஊழலும் சந்தேகமும் வன்முறையும் சேர்ந்து இந்த உறவைக் குலைக்கிறது. யாரோ அந்த பெண்ணை தவறாகப் பயன்படுத்துகி றார்கள். அவர் மீது செக்ஸ் குற்றச்சாட்டு விழுகிறது அவர் மனம் குலைகிறது. மோசமான போலீஸ்காரர்களையும் வழிப்பறி செய்கிறவர்களையு வன்முறையா ளர்களையும் சந்திக்க நேர்கிறது. ஒருகட்டத்தில் இந்தச் சூழலைத் தாக்கு பிடிக்க முடியாமல் போகிறது. ஹெர்பெர்ட் நாடு திரும்பி விடுகிறார்.


நடுத்தர வயதைத் தாண்டிய, தனிமையில் வாடும் ஒரு ஆணுக்கும், வாழ்க்கையை தேடிக்கொண்டிருக்கும் சின்னப் பெண்ணுக்கும் இடையே உருவாகும் பாச உணர்வுகளை அருமையாகச் சித்தரிக்கிறது 'மென் ஃப்ரம் த எம்பஸி' என்ற இந்த ஜெர்மன் படம். இயக்கியவர் டிட்டோ சின்சடேஷ். வார்ஸா, வான் கோவர், லாகார்னோ, மார்டெல் பிளாட்டா, கோவா உள்பட பல திரைப்பட விழாக்களில் விருதுகளையும் பாராட்டுகளையும் பெற்ற படைப்பு இது. துளி அன்பு கூட கிடைக்காமல் தனிமையில் துயரப்படுகிறவர்களைப் பற்றித்தான் இந்த இயக்குநரின் எல்லாப் படங்களுமே கவலை தெரிவிக்கின்றன.

### நல்ல படம்

நீங்கள் அன்பில் விழுந்தால் கூட அபாயத்துக்குள் தள்ளப்பட எல்லாமே ஒரு விளையாட்டுதான் என்றும் சொல்கிறார் இந்த இயக்கு உடைந்து விடக்கூடிய அளவு மென்மையானது நம் வாழ்க்கை. இதில் அ பும் நட்பும் கனிவும் எவ்வளவு முக்கியம்? பெறுவதும் கொடுப்பது இல்லாமல் இது சாத்தியமாகாது. உங்கள் வாழ்க்கையை உற்றுப் பா கள். குட்டிக் குட்டி அற்புதங்கள் நடந்திருக்கும். இனியும் நடக்கு வாழ்க்கையின் எல்லா சம்பவங்களுமே மோசமானவையல்ல. இ தான் இந்தப் படம் சொல்லும் சேதி.

## பொண்ணு கிடைச்சா கல்யாணம்

எனக்கு பெண் பார்த்து விட்டதாக நிறைய தகவல்கள் வருகிறது. ஆனால் இப்போது திருமணம் பற்றிய எண்ணம் இல்லை. அப்படி இருந்தால், வீட்டில் பெண் பார்க்கச் சொல்வேன். எனக்கு பொருத்தமான பெண் கிடைத்தால், உடனே கல்யாணம்தான்.






## இனி ஒரிஜினல் கெட்அப் அஜீத் அதிரடி முடிவு!

மங்காத்தா படத்தின் பெரிய வெற்றி மகிழ்ச்சியை தந்துள்ளது. வெள்ளை நிற தலைமுடியுடன் நடித்தது பற்றி கேட்கிறார்கள். அதுதானே எனது நிஜத் தோற்றம். 'பில்லா 2' படத்துக்கு பிறகு 'மங்காத்தா'வில் தோன்றிய அதே தோற்றத்தில் தொடர்ந்து நடிக்க முடிவு செய்திருக்கிறேன் என்றார் அவர்.



## லோரன்சுடன் தமன்னா

லோரன்ஸ் தான் இயக்கும் 'ரிபெல்' என பெயரிடப் பட்டுள்ள தெலுங்கு படத்தில் ஹீரோ யினாக நடிக்க அனுஷ்காவிடம் கால்ஷீட் கேட் டிருந்தார். தற்போது அதில் மாற்றம் செய்ய முடிவு செய் திருக்கிறார். அவருக்காக காத்திருந்தால் ஷூட் டிங் தொடங்க தாமதமாகும் என்பதால் அவருக்குப் பதில் தமன்னாவை லோரன்ஸ் ஒப்பந்தம் செய்துள்ளார்.



## சிம்பு படத்தில் மல்லிகா ஷெராவத்

'ஒஸ்தி' படத்தில் வரும் குத்துப் பாடலுக்கு சிம்புவுடன் இணைந்து மல்லிகா ஷெராவத் ஆடுகிறார். இந்த குத்துப் பாடலில் ஆடப் போகிறவர் யார் என்பதில் எதிர்பார்ப்பு இருந்து வந்தது. காரணம் 'ஒஸ்தி'யின் ஒரிஜினலான தபாங்கில் இந்தக் குத்துப் பாடல் படத்தின் ஹைலைட்களில் ஒன்றாக அமைந்திருந்தது. நயன்தாரா முதல் ஸ்ரேயா வரை பலரது பெயர்கள் அலசப்பட்ட நிலையில் இறுதியாக மல்லிகா ஷெராவத்தை ஒப்பந்தம் செய்துள்ளதாக செய்திகள் தெரிவிக்கின்றன. ஹைதராபாத்தில் இந்தப் பாடல் படமாக்கப்பட உள்ளது.

## 10 கோடியில் கிராப்பிக்



இப்படத்திற்காக சில காட்சிகளுக்கு கிர பிக்ஸ் செய்ய முடிவு செய்த இயக்குனர் ஏ.ஆர். கதாஸ், அதை மிகச் சிறப்பாக செய்யக்கூடிய வனத்தை கவனமாக தேர்ந்தெடுத்தாராம். இ டத்தின் கிராபிக்ஸ் பணிகள் அமெரிக் காவி உள்ள STAN WINSTION STUDIOSல் நடக்கிறத இதற்காக மட்டும் சுமார் 10 கோடி செலவு செ இருக்கிறார்களாம்.

வும் அபாயம்

ாரிகளுக்கு நல்ல மரியாதை
ன்றும் கிடையாது. சொகுசு
தூதரக அதிகாரி ஹெர்பெ
போது எல்லாமே வேறுமா
ழ்க்கை அர்த்தமற்று வெறு
மனே தூக்கத்தில் நடப்பது
கொண்டிருப்பார். கம்ப்யூட்
ப்பார். ஜார்ஜியாவில் கிடை
வரது பொழுதுகளைக் கற்
நாள் காய்கறி மார்க்கெட்
து ஒரு திருப்பம். அவரது
காரனைத் தேடிபோனால்,
போல தோற்றமளிக்கும் 12
களும் வறுமையும் உழலும்
ாதலோ காமமோ அற்ற ஒரு
றாள். பொறுப்புணர்வைப்
லம் தொடங்கி விடுகிறது.
லைக்கிறது. யாரோ அந்தப்
ஸ் குற்றச்சாட்டு விழுகிறது.
ப்பறி செய்கிறவர்களையும்
இந்தச் சூழலைத் தாக்குப்
ார்.
ஆணுக்கும், வாழ்க்கையைத்
ாகும்

ல படம்

த்துக்குள் தள்ளப்படலாம்.
ால்கிறார் இந்த இயக்குநர்!
நம் வாழ்க்கை. இதில் அன்
பெறுவதும் கொடுப்பதும்
ாழ்க்கையை உற்றுப் பாருங்
க்கும். இனியும் நடக்கும்.
மோசமானவையல்ல. இது

மன்னா



ல் கிராஃபிக்ஸ்



சில காட்சிகளுக்கு கிரா
செய்த இயக்குனர் ஏ.ஆர்.முரு
ரிப்பாக செய்யக்கூடிய நிறு
தேர்ந்தெடுத்தாராம். இப்ப
னிகள் அமெரிக் காவில்
N STUDIOSல் நடக்கிறதாம்.
ார் 10 கோடி செலவு செய்து



# பிரமிட் கட்டமைப்புக்களைப் போன்ற தடை செய்யப்பட்ட திட்டங்கள்

# உங்களை அழிவடையச் செய்யும்

## பிரமிட் கட்டமைப்பைக் கொண்ட தடை செய்யப்பட்ட திட்டத்தில் பங்குபற்றுதல் சட்ட விரோதமானதாகும்

### “தடைசெய்யப்பட்ட திட்டம்” என்பது யாது ?

- தடைசெய்யப்பட்ட திட்டம் என்பது அதில் பங்குபற்றுபவர்கள் பணத்தினை அல்லது பணப் பெறுமதியினைச் செலுத்துவதற்கு அல்லது பங்களிப்புச் செய்வதற்கு வேண்டிக்கொள்ளப் படுவதுடன் அதில் பெறப்படும் நன்மைகள், 1988ஆம் ஆண்டின் 30ஆம் இலக்க வங்கித் தொழில் சட்டத்தின் 83C பிரிவில் குறிப்பிட்டுள்ளபடி
  1. திட்டத்தில் பங்குபற்றுபவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்லுதல். அல்லது
  2. பங்குபற்றுபவர்களினால் மேற்கொள்ளப்படும் பங்களிப்புக்கள் அதிகரித்துச் செல்லுதல் என்பவற்றில் பெருமளவில் தங்கியிருக்கும் ஓர் கட்டமைப்பாகும்.
- இதன் அடிப்படையில் திட்டத்தில் புதிய பங்குபற்றுபவர்கள் இணைந்து கொள்வதற்கு முற்பணமாக ஓர் கட்டணத்தைச் செலுத்துமாறு வேண்டப்படுகின்றனர். மேலதிக பங்குபற்றுபவர்களின் மூலமாகவும் அதேநேரம் தற்போதுள்ள பங்குபற்றுபவர்களினால் கொண்டு வரப்படும் புதிய பங்குபற்றுபவர்கள் மூலமாகவும் தான் இலாபங்கள் (பணம் அல்லது ஏனைய சலுகைகள்) கிடைக்கும் என பங்குபற்றுபவர்களுக்கு பின்னர் உறுதியளிக்கப்படுகின்றது. எனினும், இத்திட்டங்களானது பெருமளவில் பொருட்கள் அல்லது சேவைகளினை விற்பனை செய்யும் திட்டங்களாக போலியான முறையில் காணப்படுகின்றன.

### தடைசெய்யப்பட்ட திட்டங்களை வேறுபடுத்திக் காண்பதற்கான அம்சங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

1. **திட்டத்தின் இயல்பு** - இத்திட்டத்தில் இணைந்து கொள்வதற்கு திட்டத்தின் ஊக்குவிப்பாளர்கள் புதிய பங்குபற்றுபவர்களை பொருட்கள் அல்லது சேவைகளைக் கொள்வனவு செய்வதன் மூலம் பணத்தினை முதலீடு செய்வதற்கு வேண்டுகிறார்கள் என்பதுடன் பின்னர் அப்பொருட்கள் அல்லது சேவைகளை விற்பனை செய்வதன் மூலம் இத்திட்டத்திற்கு மேலதிக பங்குபற்றுபவர்களைக் கொண்டு வருமாறும் வேண்டப்படுகின்றனர்.
2. **வழங்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கான சந்தைப்படுத்தல் இயலுமை** - சந்தையில் இப்பொருட்கள் அல்லது சேவைகளுக்கு பலமான கேள்வி இல்லாதிருப்பதுடன் ஊக்குவிப்பாளர்களினூடாக மட்டுமே இவை கிடைக்கக் கூடியதாகவும் இருக்கின்றன.
3. **உயர் நுழைவுக் கட்டணம்** - இத்திட்டத்தில் சேர்வதற்கான நுழைவுக் கட்டணம் பெரும்பாலும் உயர்வாகவே இருக்கின்றது. இது ஊக்குவிப்பாளர்களினால் வழங்கப்படும் பொருட்கள் அல்லது சேவைகளுக்கான விலையினூடான கட்டணமாக விதிக்கப்படலாம்.
4. **இரண்டாந்தரச் சந்தையும் விற்பனைக்குப் பிந்திய சேவையும்** - இப்பொருட்களுக்கு இரண்டாந்தரச் சந்தை இல்லாதிருப்பதுடன், விற்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கான விற்பனைக்குப் பிந்திய சேவைகளுக்கான உத்தரவாதம் ஊக்குவிப்பாளர்களினால் ஒரு போதும் வழங்கப்படுவதில்லை.
5. **நிதி வருமானங்கள்** - பங்குபற்றுபவர்களால் விற்கப்பட்ட பொருட்கள் அல்லது சேவைகளுக்கான தரகு அவர்களுக்கு வழமையாக வழங்கப்படுவதில்லை. ஆனால் அதிகூடிய வருமானங்களைப் பெற்றுக் கொள்வதானால் புதிய பங்குபற்றுபவர்களை சேர்த்துக் கொள்ளுதல் வேண்டுமென்று அறிவுரை வழங்கப்படுகின்றது. ஒரு பங்குபற்றுபவரின் நிதி வருமானங்கள் அவரினால் கொண்டு வரப்படும் புதிய ஆட்சேர்ப்புக்களின் எண்ணிக்கையிலேயே தங்கியிருக்கின்றது.
6. **மீண்டும் வாங்கும் கொள்கை** - வாங்கிய பொருட்கள் மீள் விற்பனைக்குரிய தன்மையினைக் கொண்டிருப்பினும் ஊக்குவிப்பாளர்கள் இத்திட்டத்திலிருந்து விலகிய பங்குபற்றுபவர்களின் எஞ்சியிருக்கும் இருப்புக்களை மீண்டும் வாங்கும் கொள்கை ஒன்றைக் கொண்டிருப்பதில்லை.
7. **பொருட்களின் விற்பனையில் கவனம் செலுத்துதல்** - இறுதி நுகர்வோருக்கு பொருட்கள் அல்லது சேவைகளை சில்லறையாக விற்பனை செய்யும் நோக்கம் இத்திட்டத்தில் சிறிதளவாகவே காணப்படுகின்றது.
8. **திட்டத்தைப் பற்றிய தகவல்கள்** - பொதுவாக ஊக்குவிப்புப் பிரசுரங்கள் அல்லது ஊக்குவிப்பாளர்கள் திட்டத்தின் கம்பனி பற்றிய வதிவிடம், வீதி, விலாசம், அல்லது தொலைபேசி இலக்கம் என்பவற்றை வெளிப்படுத்துவதில்லை.
9. **நம்பமுடியாத வருமானங்கள் பற்றிய தவறான உறுதிகள்** - ஊக்குவிப்புப் பிரசுரங்கள் அல்லது ஊக்குவிப்பாளர் நம்பமுடியாத வருமானங்கள் (உ-ம் “சட்டரீதியாக மாதாந்தம் ரூ.100,000 இனைப் பெறுதல்”) அல்லது “வளமானதும் சந்தோசமானதுமான வாழ்க்கை”, “இலகுவாக புதிய ஆட்களை சேர்த்துக் கொள்ளமுடியும்” போன்ற நன்மைகளைப் பெறமுடியும் என உறுதிகளை அளிக்கின்றனர்.
10. **இணையுமாறு நிர்பந்தித்து ஊக்குவித்தல்** - வழமையாக ஊக்குவிப்பாளர்கள் புதிய பங்குபற்றுபவர்களை கம்பனி அல்லது பொருட்கள்/ சேவைகள் பற்றிய போதியளவு விளக்கங்களைப் பெற்றுக் கொள்வதற்கு இடமளிக்காமல் ஒப்பந்தங்களுக்குள் நுழைவதற்கு நிர்ப்பந்திக்கிறார்கள்.
11. **பயிற்சிகளும் விற்பனை உதவிகளும்** - ஊக்குவிப்பாளர் விற்பனை மற்றும் ஆட்சேர்ப்பு தொடர்பான பொருத்தமான முன்னெடுத்துச் செல்லும் பயிற்சிச் சந்தர்ப்பங்களை அவனுடைய/ அவளுடைய புதிய பங்குபற்றுபவர்களிற்கு வழங்குவதில்லை.
12. **திட்டத்தின் எதிர்காலம்** - திட்டத்தின் அடிமட்டத்திலிருக்கும் புதிய பங்குபற்றுபவர்கள் புதிய ஆட்சேர்ப்புக்களைச் செய்யமுடியாத நிலை எழும்போது அவர்கள் தமது முதலீட்டை இழக்க வேண்டி நேரிடும் என்பதுடன் அத்திட்டம் முறிவடையும் நிலையையும் அடையும்.
13. **செயற்பாட்டுப் பிரதேசங்கள்** - செயற்பாட்டுப் பிரதேசங்கள், பிரிவு அல்லது செயற்களம் தொடர்பான நியாயமான ஓர் திட்டத்தை கொண்டில்லாதிருப்பதுடன், ஊக்குவிப்பாளர்கள் பொதுவாக எந்தவொரு நியாயமான அல்லது பகுத்தறிவான வரையறைகள் இல்லாமல் அதிகரித்த ஆட்சேர்ப்புக்களுக்கு ஊக்கமளிக்கிறார்கள்.



**பிரமிட் தன்மையைக் கொண்ட திட்டங்கள் வங்கி தொழில் சட்டத்தின் 83C பிரிவின் கீழ் சட்ட விரோதமானதாகும். மேலும், சில கொடுப்பனவுகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்கள் என்பன வெளிநாட்டுச் செலாவணிக் கட்டுப்பாட்டுச் சட்டம் மற்றும் பணத்தைத் தூயதாக்கல் தடைச் சட்டம் ஆகியவற்றின் கீழ் தண்டனைக்குரிய குற்றமாகக் கருதப்படலாம். இப்படியான திட்டங்களை நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ ஆரம்பித்தல், வழங்குதல், ஏற்பாடு செய்தல், விளம்பரப்படுத்தல், கொண்டு நடத்துதல், நிதியிடுதல், நிர்வகித்தல் அல்லது நெறிப்படுத்துதல் என்பனவும் சட்ட விரோத செயல்களாகும்.**

### குற்றவாளிகளுக்கு சட்டத்தின்கீழ் அளிக்கப்படும் தண்டனை மிகவும் கடினமானதாகும்.

மேற்குறிப்பிட்ட செயல்கள் மூலம் ஏதாவது ஒரு நபர் இப்படியான தடைசெய்யப்பட்ட திட்டத்தில் பங்குபற்றிய குற்றவாளியாகக் கண்டு பிடிக்கப்பட்டால் அவர் பின்வருவனவற்றிற்கு உட்படுவார்.

- மூன்று வருடங்களுக்குக் குறையாத சிறைத் தண்டனை அல்லது
- ஒரு மில்லியன் ரூபாவுக்குக் குறையாத அபராதம் அல்லது
- சிறைத் தண்டனை மற்றும் அபராதம்

மற்றைய ஒரு நபருக்கு இழப்பு அல்லது தீமையை உண்டுபண்ணும் விதத்தில் குற்றங்களானது சுய விருப்பத்துடன் அல்லது தெரிந்து கொண்டு புரியப்பட்டிருந்தால் அதற்கான தண்டனை

- மூன்று வருடங்களுக்கு குறையாத மற்றும் ஐந்து வருடங்களுக்கு மேற்படாத கடூழியச் சிறைத் தண்டனை மற்றும்
- இரண்டு மில்லியன் ரூபா அபராதம் அல்லது திட்டத்தில் பற்குபற்றுபவர்களிடம் இருந்து பெறப்பட்ட இலங்கை நாணயத்தின் முழுத் தொகையின் இருமட்ங்கு என்பவற்றில் ஆகக் கூடிய தொகையைக் கொண்ட அபராதம்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

மேலதிக விசாரணைகளுக்கு

தொலைபேசி: 2477100, 2477105, 2477120, 2477129
தொலைநகல்: 2477711, மின்னஞ்சல்: banksup@cbsl.lk

CENTRAL BANK OF SRI LANKA
60 growth& stability
1950 - 2010

# நான் சொன்னா நம்பமாட்டியள்



சிறுகதை

■ நெடுந்தீவு மகேஸ்

**உ**ள்ளத்தை ஏதோ ஒன்று இறுக்கி உறுத்துவதாய்த் தோன்றியது. அவரது உட்குழிந்த கண்களில் ஏக்கமும், முகத்தில் அப்பிய மிரட்சியும் அவரைத் தனிமைப்படுத்தியிருந்தது.

வெண்மையும் கருமையும் கலந்து விளைந்த தாடி அவருக்கு வழமையானதல்ல, அந்த முகாமை வந்தடையுமுன்பே பட்ட அல்லல்கள் தொல்லைகளுக்கான ஓர் அடையாளம்.

முகச்சவரம் செய்து பல மாதங்களாகி விட்டன. முதிர் வயதின் மாற்றங்களோடு கூடிவந்த துன்ப துயரங்களின் பூச்சுக்களும் அவரைப் பற்றிப் பிடித்து அலங்கோலமாக்கியிருந்தன.

மாற்றுடையற்று, ஒடுங்கிய கூடாரத்தில் நீரும் சேறுமாய் நிரம்ப, உண்ணும் உணவுக்காய் சோர்ந்து, உறங்கும் வழியற்று வாடி நின்றார்.

எல்லோருக்கும் போல இழப்புக்கள் அவருக்கும் பொதுவானதாகிப் போயிற்றெனில் அவரை விசேடமாக நோக்கிப் பார்க்க யாருமே இருக்கப் போவதில்லை. இப்பொழுது அவர் எந்த ஆதார முமற்ற தனிமரமாய் நிற்கிறார்.

அவரது பேர்த்தி மகளின் மகள் கவிதா, அந்த முகாமிற்குள் தடுக்கப்பட்ட நாளிலிருந்து எந்தச் செய்திப் பத்திரிகைகளையும் அதில் காணும் படங்களையும் பார்த்தாற் போதும் ஆவேசத்துடன் அந்தப் பத்திரிகையைக் கசக்கிக் கிழித்துக் கால்களின் கீழ் போட்டுமிதித்து, தனது ஆத்திரத்தை வெளிப்படுத்துவாள்.

உணவு தண்ணீர் ஒதுங்கும் இடம் எல்லாம் வழங்கப்படுவதாகச் சொல்லப்படும் அந்த முகாமிற்குள் சுதந்திரம் நிலவுவதாகத் தோன்ற தினசரி பத்திரிகைகள் ஓரிரண்டு உள்ளே உலா வந்தன

அன்று, கவிதா படுத்துத் தூங்கிக் கொண்டிருந்தாள். மழைநீரில் நனைந்தும் நனையாமலும் கிடந்த அந்தப் படங்கின் ஓரத்தில் சண்முகத்தார் உட்கார்ந்திருந்தார்.

சில நிமிடங்கள் கண்களை மூடி இருந்தவர் விழித்த போது தோன்றிய பெருமூச்சில் எதுவும் செய்ய இயலாத ஆற்றாமையின் பேரவலம் ஒலித்தது.

வீடு, வயல்,காணி, பூமி என வனப்போடு வாழ்ந்த வன்னி மண்ணின் நினைப்பில் அவர் மூழ்கும் போதெல்லாம் மனதை உறுத்தும் வேதனையில் அமைதியடைந்து விடுவார்.

தனது மனைவி, மகள், மருமகன், பேரப்பிள்ளைகள் என்ற எண்ணங்கள் மேலெழும் போதெல்லாம் கண்களில் நீர் சொட்டக் கலங்கித் தவிப்பார்.

வீடு நிரம்பிய செல்வங்களோடு உண்ணும் உணவுக்குப் பஞ்சமற்று நெல்லும் காய்கறிகளும் ஆடுகளும் மாடுகளும் சூழ்ந்து இருந்த வாழ்க்கை. எல்லாமே இல்லையென்றாகிப் போன கொடுமை.

அத்தோடு இழந்தவையை மறக்க எஞ்சிய பேர்த்தி கவிதாவின் இன்றைய நிலை! அவளது கல்வியைக் கற்க இயலாமல் அதில் பற்றிய வேதனை நெருப்பு.

பசிக்கும், தாகத்திற்கும் வரிசையில் நின்று அவளுக்கு வாங்கிவந்து கொடுத்தாலும் "படிப்பு படிப்பு" எனத் தம் உழைப்பையே கொடுத்துக் கவிதாவின் கல்விக்காய் பாடுபட்ட பெற்றோரின் ஆசையில் வீழ்ந்த பேரிடியை எண்ணும் போது நீங்க, நான் சொன்னா நம்ப மாட்டியள், ''நீங்க, நான் சொன்னா நம்ப மாட்டியள்" என்று பிதற்றும் அவரின் கோலம் மனத்தை பிழிந்து வருத்தும்.

தமது ஒரே மகளின் கல்விக்காக, அவளது பெற்றோர் பட்ட பாடுகள் படிப்பின் மகத்துவம் உணர்ந்து அவளுக்கேற்ற கற்கைத் தேவைகளுக் காய்த் தமது வசதிகளையும் இழந்து ஏற்படுத்திக் கொடுத்த விருப்புக்கள் எல்லாம் சிதைந்து போனதாக எண்ணியவாறு சண்முகத்தார், படுத்திருந்த கவிதாவை திரும்பிப் பார்த்தார்.

பொருட் செல்வத்திற்கும் மேலான கல்விச் செல்வத்தை இன்று பெற இயலாமல் அவளைப் பாதித்திருக்கும் உள நெருக்கீட்டுக்கு நிவாரணம் இல்லையே.

சண்முகத்தார் ஏங்கினார். அம்மா அப்பா தம்பி தங்கைகள் என்று கூடி வாழ்ந்த குடும்பத்தை ஓட ஓட விரட்டிக் கொன்றும். குலைத்தும் இன்று இந்தச் சிறிய கூடாரத்திற்குள் சண்முகத்தாரையும் அவரின் பேர்த்தி கவிதாவையும் அழிவிலிருந்து, எஞ்ச வைத்து ஒதுக்கிச் சேர்த்திருக்கிறது அந்தக் கொடிய போர்.

எவருமே விரும்பி நோக்காத அந்தக் கொடிய யுத்தத்தை எண்ணி ஒவ்வொரு மனமும் இன்றும் அழுகிறது. மக்களும் அவர்களின் தேவைகளும் நிறைவு செய்யப்பட வேண்டியவை. அவற்றை நிறைவு செய்யத் திராணியற்றோர் அவர்களை மௌனிப்பதன் மூலம் பிரச்சினைகளைத் தீர்த்துவிடலாம் என்றே எண்ணுகின்றனர்.

எவ்வளவு கொடுமையான சிந்தனை. சண் முகத்தார் கவிதாவை நோக்கினார். அவர்கள் வாழ்ந்த பூமியில் உயர்ந்திருந்த பாடசாலைக் கட்டடம். அதன் அயலில் குடியிருந்த கவிதாவின் குடும்பம்.

நூற்றுக் கணக்கான மாணவர்களும் அவர்களைக் கற்பிக்க வெனக்கூடியிருந்த ஆசிரியர்களும் கற்றல்கற்பித்தலில் ஆர்வம்பெருக வுழைத்த சமூகமும் நிறைந்த காட்சி இன்று இங்கு இல்லை. கவிதா இந்தக் கூடாரத்தினுள், உறங்கிக் கிடக் கிறாள்.

வன்னியில் அவள் வளர்ந்த வாழ்ந்த நாட்களில் படிப்புடன் விளையாட்டு, நாடகம், ஆடல், பாடல் என அவள் கொண்டிருந்த அழகியல் நாட்டமும் அன்பும், பண்பும் நிரம்பக் கற்பித்த ஆசிரியர்களின் விருப்பும், உறவு, நட்பு என்று உதவி நின்ற சுற்றமும் இன்று தொலைந்த விதம் கண்டு அதிர்ந்து போனாள். அவளுக்குப் படிப்பின் மீதிருந்த ஆர்வம் அழிந்து போனது.

முழுவதுமாய் வேலிக்குள் அடைக்கப்பட்டிருந்த அவர்களின் நடமாட்டம் அவர்களை முடமாக்கியது. பல்திறன் ஆற்றல் விளையப் படிப்பதில் கொண்டிருந்த ஊக்கம் ஒழிந்து போனது.

வன்னிப் பரப்பின் பல திசையிருந்தும் அந்த முகாமில் கூடியவர்களுள் கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரணதரப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் தகுதி கொண்ட மாணவர்கள் பலரும் இருந்தனர்.

வன்னிப் பெருநிலம் கல்வியில் வளம் பெற்றிருந்ததை வரலாறு மறுத்துவிடாது. அங்கு கற்பித்த ஆசிரியர்களின் வாண்மையின் சிறப்புக்கு அந்த நாள் மாணவர்களின் தேர்ச்சி அடைவுகள் மாத்திரமல்ல. வன்னி மண்ணின் வளங்களைத் தேர்ந்து வனப்புற ஆக்கிய ஆலைகளும் சோலைகளும் விளைத்த செல்வங்களும் உலகம் வியக்க உயர்ந்திருந்தமை உண்மைகளாகும்.

கல்வியையே தமது முதுசமாகக் கொண்டுழைத்த தமிழினத்தின் மூச்சு இன்று முகாம்களில் அடக்கி வைக்கப்பட்டுள்ளது.

கவிதாவைப் போல் பலரும் கல்வியைத் தொடர இயலாது கற்கும் திறனற்றுத் தூங்கிக் கிடந்தனர். கல்வியே உயர்வானது அதனைப் பெறு வதே பெரும் பேறு என எண்ணி நின்ற சண்முகத்தாருக்கு கவிதாவின் நிலை கவலையை விளைத்தது.

நான் சொன்னா நம்ப மாட்டியள், நான் சொன்னா நம்ப மாட்டியள் எனப் பிதற்றத் தொடங்கினார்.

ஏதோ அரவம் கேட்டு விழித்துக் கொண்ட கவிதா "தாத்தா தாத்தா" எனச் சண்முகத்தாரைக் கூப்பிட்டாள். அவரை அறியாமலே பிதற்றும் அவரது வாய் மௌனிக்க, அவர்கவிதாவின் அழைப்பில் ஈரக்கப்பட்டாலும் அவள் கல்வியில் நாட்டமின்றித் தூங்கிக் கிடக்கும் செயல் அவரது மனதை வாட்டியது. ஆதங்கத்தோடு திரும்பிப் பார்த்தார்.

"நான் பரீட்சை எழுதுவேன் தாத்தா, ஆனால், இங்க, நடக்கிற விசேட வகுப்புக்குப் போக மாட்டன்" என்றாள் உறுதியாக. வன்னியில் அவள் வாழ்ந்த போது கற்ற கல்வியே அவளின் கல்விப் பெறுபேற்றை உயர்த்தப் போதுமானதென்ற நம்பிக்கை அவளுக்கு.

இதுவரை பரீட்சையும் எழுதமாட்டேன் படிக்கவும் போக மாட்டேன் என்றவள் இப்பொழுது பரீட்சை எழுதச் சம்மதித்திருக்கிறாள் என்பது சண்முகத்தாருக்கு ஆறுதலாக இருந்தது. இந்த முகாமிற்கு வந்த நாள் தொடக்கம் ஏதோ உளப் பாதிப்புக்குள்ளானவளாகவே அவளது நடமாட்டம் காணப்பட்டது. இன்று அவளின் வார்த்தைகள் ஏதோ ஒரு வகைத் தெளிவு பெற்றனவாக அவருக் குப்பட்டது.

உடலாலும் உள்ளத்தாலும் பாதிப்புற்ற நிலையில் அர்த்தமற்ற மனங்கொள்ளா வலிந்த கற்பித்தலும் அதற்கான அழைப்புகளும் கவிதாவின் விழித்த மனத்துக்கு வேதனையைத் தந்தன.

அவளது உற்றார் உறவினரைப் போரின் பேரைச் சொல்லிக் கொன்றொழித்தவர் பலர் அவளின் கண்ணெதிரில் தோன்றினர். அங்கே நடப்பவை யாவுமே நாடகமாகத் தோன்ற அவற்றை அவளால் ஏற்றுக் கொள்ள இயலாமற் போனது.

எதனையோ அவள் வெறுத்தாள். அதனால் மனம் எவரது சொல்லுக்குகந்த வழிகளிலும் நடக்க மறுத்தது. கண்ணியில் அகப்பட்ட கிளியாய் கூண்டுக்குள் அடைக்கப்பட்ட கோலத்தில் அவளின் நிலை. அவளோடு கூட வந்த பாட்டனார் சண்முகத்திற்கு அவ ளன்றி அன்பு செய்ய யாருமே இல்லையென்ற தவிப்பு.

அவளின் எதிர்காலத்திற்கு உறுதியைச் சேர்க்கும் கல்வியையாவது ஊட்டிவிட வேண்டும் என்ற ஆவல். இவைகளுக்கிடையில் அப்பொழுது கவிதாவின் பரீட்சை எழுதும் முடிவில் ஏற்பட்ட மாற்றம் கண்டு சண்முகத்தார் மகிழ்ந்தார்.


பெற்றாரை உறவினரை இழந்தது மாத்திரமல்ல அவர்களின் பிணங்களையும் அடக்கம் செய்யாது அவற்றின்மீது நடந்து கடந்து வந்த கோரம். அவளுக் குத்தாங்கவொண்ணா வேதனையைக் குவித்திருந்தது.

தொடரும் அழுத்தங்களால் விரிந்தெழுந்த வேதனையும், விரக்தியும் அவளின் அழகைக் கெடுத்தது.

அன்று விடிந்த பொழுதோடு கவிதாவைத் தேடும் சண்முகத்தாரின் கலங்கிய கண்களில் தோன்றிய பதற்றம் அந்த முகாம் முழுவதையும் ஒரு போராட்ட அலைவுக்குள் அமிழ்த்திவிட்டது. சண்முகத்தார் கவிதா கவிதா எனக் கூக்குரலிட்டுக் கூப்பிட்டார். அமைதியாக அங்குமிங்கும் அலைந்து கவிதா கவிதா என அன்பொழுக அழைத்தார். அவளைக் காணவில்லை. இதுவரை எங்கிருந்தும் எந்தவித பதிலும் இல்லை. கவிதாவைக் காணவேயில்லை.

அந்த முகாமிலுள்ள எவருமே மீண்டும் கவிதாவைக் கண்டதில்லை. சண்முகத்தார் "நீங்க, நான் சொன்னா நம்ப மாட்டியள், நான் சொன்னா நம்ப மாட்டியள்" என்று உரத்துச் சொல்லிப் பிதற்றிக் கொண்டிருக்கிறார். அவருக்கு ஆறுதல் சொல்ல அங்கு எவருமே இல்லை. எந்தப் பயங்கரத்திற்கு முகம் கொடுத்துக் கவிதா எங்கொளித்தாளோ! எவ்விடத்தில் யார் அவரைக் கடத்திப் போயினரோ?

"நான் சொன்னா நம்ப மாட்டியள், நான் சொன்னா நம்ப மாட்டியள்" என்றே மீண்டும் மீண்டும் உரக்கச் சொல்லிச் சிரிக்கும் சண்முகத் தாரைப் பரிதாபமாகப் பார்ப்பதற்குக் கூட அங்கே எவரும் இருப்பதாகத் தெரியவில்லை. சண்முகத்தார் பலமாகச் சிரித்துக் கொண்டே இருக்கிறார்.★



# சிலிர்க்க வைக்கும் ரசனை

2013ஆம் ஆண்டு முதல் ஆகாயத்தில் பறந்தபடி பூமியையும், தினமும் உதிக்கும் சூரியனின் அழகையும் பார்த்து ரசிக்க முடியும்.

பூமிக்கு மேல் தொங்கி கொண்டு உலக காட்சிகளை பார்ப்பது என்பது நம்மை சிலிர்க்க வைக்கும் சாகசமாக இருக்கும். இந்த வித்தியாசமான பயணத்திற்கு ஆகும் செலவு 5 மணி நேரத்திற்கு 90 ஆயிரம் பவுண்ட் என கணக்கிடப்பட்டுள்ளது.

பூமியின் கடைசி வளைவு பகுதியை ஹீலியம் நிரப்பப்பட்ட பலூன் கலத்தில் இருந்து பார்த்து ரசிக்கலாம். இப்படி பயணம் செய்பவர்கள் சூரிய உதயத்தை பார்க்கும் முதல் மனிதர்களாகவும் இருப்பார்கள்.

பூமிக்கு மேல் 22 மைல் பயணம் செய்பவர்கள் செல்லும் கலம் 2 பைலட்டுகள் மற்றும் 4 பயணிகள் அமரும் வகையில் உள்ளது. இந்த கலத்துடன் 423 அடி விட்டம் கொண்ட ஹீலியம் பலூனும் இணைக்கப்பட்டு இருக்கும்.

ஹீலியம் காற்று ஒரு பொருளை உயரத்தில் கொண்டு செல்லக்கூடிய தன்மை படைத்தது ஆகும். இந்த கலத்திற்கு ப்ளூன் என்ற பெயர் சூட்டப்பட்டுள்ளது. இந்த கலம் விண்வெளி பகுதியை அடைய ஒரு மணி நேரம் ஆகும்.

அதன் பின்னர் 3 மணி நேரம் பூமிக்கு மேல் பயணம் செய்த பின்னர் மீண்டும் அது திரும்பும். இந்த ஹீலியம் கலத்தை ஸ்பெயின் தொழிலதிபர் ஜோஸ் மரியானோ லோபஸ் உருவாக்கி உள்ளார்.




# இணையதளம் உருவாக்க

இணையதள வடிவமைப்பாளர்களுக்கும் புதிதாக இணையதளம் உருவாக்க விரும்புபவர்களுக்கும் சாம்பிள் Content கொடுத்து உதவுகிறது ஒரு தளம்.

இணையதள உருவாக்க வடிவமைப்புக்கு சமயத்தில் என்ன Content நம் தளத்தில் கொடுக்க வேண்டும் என்று தெரியாது, அப்படி Content இல்லாத நேரத்தில் வடிவமைப்புக்கு இலவசமாக சாம்பிள் Content கொடுக்க ஒரு தளம் உள்ளது.


இத்தளத்திற்கு சென்று எத்தனை Paragraphs வேண்டும் என்பதை எண்ணிக்கையில் கொடுத்து Give me bacon என்ற பொத்தானை சொடுக்கினால் போதும், அடுத்து வரும் திரையில் நமக்கு சாம்பிள் Content கொடுக்கும்.



இடத்தை நிரப்பி பார்ப்பதற்கு ஏதாவது வேண்டும் என்று தேடுபவர்களுக்கு ஒவ்வொரு முறை இத்தளத்திற்கு சென்று சாம்பிள் கேட்கும் போது ஒவ்வொரு நேரம் ஒவ்வொரு தகவலைக் கொடுக்கும்.

நமக்கு தேவையானது வரும் வரை நாம் இத்தளத்தில் சென்று தேடலாம்

# விஸ்வரூபம் எடுக்கும் மீன்



கடலோரங்களில் இறந்தது போல காணப்படும் 'டெட்ரோடான்' மீன், கையில் எடுத்தால் விஸ்வரூபம் எடுக்கும் ஆற்றல் வாய்ந்தது.

மன்னார் வளைகுடாவில் தான் 'டெட்ரோடான்' என்ற வினோத மீன் உண்டு. கையடக்கமானது. பொதுவாக கடலோரங்களில் இறந்ததுபோல் ஒதுங்கி இருக்கும். என்னவென்று கையில் எடுத்தால் போதும், விஸ்வரூபம் எடுத்துவிடும். கை கொள்ளாத அளவுக்கு ஊதிய பலூன் போல், தன்னுள் காற்றை நிறைத்து ஊதிவிடும். இந்த திடீர் மாற்றத்தால் நாம் தடுமாறுவோம். இந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி, கையிலிருந்து நழுவி கடலுக்குள் சென்று தன்னைக் காத்துக்கொள்ளும். வாய்ச் சொல்லில் வீரர்போலத் தான் இதுவும். ஆனால், இது ஒரு நச்சுமீன். 'டெட்ரோ டோடாக்சின்' என்னும் நச்சுப்பொருள் இம்மீனின் ஈரலில் உள்ளது. இதை தொட்டாலோ, எடுத்தாலோ, நச்சால் ஒன்றும் ஆவதில்லை. ஆனால், நச்சை நீக்காமல் உண்டாலோ, உண்டவர் சுருண்டு மாண்டு போவார். ஜப்பானியருக்கு இந்த மீனின் மீது தனி மோகம். நச்சை நீக்கிய பின்னரே உண்ணுகின்றனர். கை தேர்ந்தவர்கள் மட்டுமே முறையாக நச்சை நீக்க முடியும். கடந்த 2002ல் மட்டும் இம்மீனை உண்டவர்களில் 56 பேர், மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அவர்களில் மாண்டவர் ஆறு பேர். இனி, மன்னார் வளைகுடா கடற்கரையில் ஒதுங்கியதை தொடும் முன், நிறையவே யோசிக்க வேண்டும்.





"நம்ம தலைவருக்குத் திடீரென்று நெஞ்சுவலி வந்து விட்டதெல்லே, எப்படி?"

"அவர்க்கிட்ட யாரோ, சுவிஸ்லாந்தில் பூகம்பம் என்று புரளி கிளப்பி இருக்கிறாங்கள் அதுதான்!"

"ஜெயிலில் இருக்கும் உங்களைப் பார்க்கக் கட்சிக் காரர்கள் யாரும் வரவில்லையா?"

"தினமும் பார்த்துக் கொண்டுதானே இருக்கோம்!"






"செல்லம்! சாப்பிடாம அடம்பிடிச்சா அம்மாவுக்குக் கோபம் வரும்!"

"போம்மா, ஹாசாரே தாத்தா சாப்பிடாம இருநதா மட்டும் பாராட்டுறீங்கள்

## உலகின் மிகப்பெரிய வெங்காயம்



உலகின் மிகப்பெரிய வெங்காயத்தை விளைவித்து விவசாயி ஒருவர் சாதனை படைத்திருக்கிறார், 5 கிலோ கிராம் நிறையுடைய இந்த வெங்காயம் சாதனைப் புத்தகத்திலும் இடம்பிடித் திருக்கிறது, 25 வருடமாக வெங்காய உற்பத்தியில் பங்களிப்பு செய்த 67 வயதான Gardener Peter Glazebrook என்பவரே இந்த வெங்காய உற்பத்தியாளராவார். இவர் ஓய்வூதியம் பெற்ற ஒருவராவார். கிட்டத்தட்ட 25 ஆண்டுகளாக உலகின் மிகப்பெரிய வெங்காயத்தை உருவாக்கும் முயற்சிகளை மேற்கொண்டு வந்ததாக குறிப்பிட்டார். இதற்கு முன்னர் உலகின் மிகப் பெரிய வெங்காயம் என்ற சாதனை கடந்த 2005 ம் ஆண்டு நிகழ்த்தப்பட்டிருந்தது. ஆனால் இவர் தற்போது அச்சாதனையை முறியடித்து புதிய சாதனை படைத்துள்ளார்.



## பணம் காய்க்கும் மரங்கள்

மரங்களில் பணம் காய்க்கின்றது என்று சொல்கின்றபோது நம்புவீர்களா? ஆனால் இவ்வதிசயம் பல நூற்றாண்டு காலமாக பிரிட்டனில் இடம்பெற்று வருகின்றது. அதிஷ்டம், ஆரோக்கியம், ஆயுள், சந்தோஷம் ஆகியவற்றை வரமாக பெறுகின்றமைக்காக மரங்களில் பணத்தை அறைகின்றனர் பிரித்தானியர்கள். பாரம்பரியம் பாரம்பரியமாக இந்நடவடிக்கை தொடர்ந்து இடம்பெற்று வருகின்றது.



## விசித்திரமான உயிரினம்


இங்கிலாந்து நாட்டின் கிராமப்பகுதி ஒன்றில் இறந்த நிலையில் பிடிக்கப்பட்ட இந்த உயிரினத்தின் தோற்றம் பலரையும் வியப்பில் ஆழ்த்தியுள்ளது. இதுவரை அடையாளம் காணப்பட்ட தகவல்களின் அடிப்படையில் குறித்த உருவம் 10-20 செ.மீ நீளமுடன் மிகச்சிறிய அளவில் காணப்பட்டுள்ளது. மேலும் இதன் எலும்புகள் ஒரு சிசுவின் எலும்புகளை ஒத்ததாகவும் உடல் அமைப்பு மனித உடலமைப்பை ஒத்ததாகவும் காணப்படுகிறது. முழுமையான 2கால்கள் மற்றும் கைகளுடன் தலையில் மெல்லிய திசுவுடன் மஞ்சள் நிறத்தில் முடி காணப்படுகிறது. கைகளில் சாதாரண மனிதர்களுக்கு உள்ளதைப்போன்று ஐந்து விரல்கள் காணப்படுகிறன. இன்னுமொரு முக்கிய விடயம் என்னவென்றால் இதன் முதுகுப்பகுதியில் இலைகள் போன்று இறக்கை அமைப்பு காணப்படுகின்றமையும் ஆய்வாளர்களை வியப்பில் ஆழ்த்தியுள்ளது.

## காதினால் பலூனை ஊதி சாதனை

சீனாவின் குவாங்ஸி மாகாணத்தில் குய்லிங் நகரில் வசிக்கும் 55 வயதான இந்த நபர் தொழிற்சாலை ஒன்றில் வேலை பார்த்து வந்தூர். சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னர் இவர் தனது காதுகளில் இருந்து காற்று கசிவதை உணர்ந்தார். இதனால் இவரது மனதில் சில எண்ணங்கள் உதித்தன. இதை வைத்தே நான் ஏதாவது வித்தியாசமாக செய்ய வேண்டும் என எண்ணினார். இதற்காக தனது காதில் குழாய் ஒன்றை வைத்து பலூன்களை ஊதி சாதித்தார். பின்னர் இவர் வசித்த பிரதேசத்தில் இடம் பெற்ற ஒரு களியாட்ட விழா ஒன்றில் தனது காதுகள் மூலம் வெளிவரும் காற்றினை பயன்படுத்தி 20 விநாடிக்குள் 20 எரியும் மெழுகுதிரிகளை அணைத்து பார்வையாளர்களை வியப்பில் ஆழ்ந்தினார்.



## தலைகீழாக நின்று அம்பு விடும் சாதனைப்பெண்



Lilia Stepanova, எனப்படும் 24 வயது நிரம்பிய இந்தப்பெண் யாரும் நினைத்துப்பார்க்க முடியாத செயலை செய்திருக்கிறார். குறிபார்த்து கைகளால் அம்பு விடுவதற்கே நடுங்கிப்போகும் எமக்கு. ஆனால் இந்தப்பெண் தலை கீழாக நின்று தனது குதிக்காலால் இலக்கை குறிபார்த்து அம்பெய்திருக்கிறார். இதை ஆவலுடன் எதிர்பார்த்திருந்த ரசிகர்ளுக்கு ஒரே மகிழ்ச்சி. இதுகுறித்து Lilia Stepanova மேலும் தெரிவிக்கையில் தான் நான்கு வயதாக இருக்கும் போதே தினமும் ஒருமணி நேரம் காலால் அம்பு விடும் பயிற்ச்சியை மேற்கொண்டதாகவும் தனது தாயார் தான் குருவாக இருந்து பயிற்சியளித்ததாகவும் தெரிவித்தார். இதை முறையாக கற்க விரும்பிய Lilia Stepanova USA இலுள்ள gymnastics பயிற்சி கல்லூரியில் பயின்ற பின்பே இது போன்ற மேடை நிகழ்சிகளில் பங்கேற்றதாகவும் தெரிவித்தார்.

## நாய்க்குட்டியை பிரசவித்த பூனை

கிழக்கு சீனாவின் ஜியாங்சு மாகாணத்தில் சவ் யுன் என்பவர் பூனை ஒன்றினை வளர்த்து வந்துள்ளார். பின்னர் அந்த பூனை இரண்டு குட்டிகளை பிரசவித்தது. இது பற்றி உரிமையாளர் சவ் யுன் கூறுகையில் நான் சென்று பார்க்கும் போது அது தனது இரண்டு குட்டிகளையும் வாயில் கவ்விக்கொண்டு நின்றது. நான் அருகில் சென்று பார்த்ததும் வியந்து போனேன். அதில் ஒரு குட்டி நாய்க்குட்டியாக காணப்பட்டது என தெரிவித்தார்.



# இனிமேல் தி.மு.க ஆட்சிக்கு வரவே முடியாது என்கிறார் ஜெயலலிதா!



■ எஸ்.சுரேந்திரஜித்

தமிழகத்தில் 5 வருடங்களுக்கொருமுறை ஆட்சி மாறுவது வழக்கமாகும். இது தொடர்பில் புதிய போக்கு ஒன்றை சிருஷ்டிக்க இதுவரையும் கலைஞருக்கோ ஜெயலலிதாவுக்கோ முடியவில்லை. இதற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க ஜெயலலிதாவுக்கு இயலுமாயிருக்கும் என்பதான அறிகுறிகள் சமகாலத்தில் வெளிப்பட்டுவருகின்றன. தி.மு.க ஆட்சியில் அறிமுகப்படுத்தப்பட்ட பெரும்பாலான திட்டங்களை தலைகீழாக மாற்ற முயற்சிப்பது அபத்தமான அரசியல் செயற்பாடு என்பதில் யாருக்கும் சந்தேகம் இல்லை. இவ்வாறு 5ஆண்டுகளுக்கு ஒருமுறை பாடசாலை சிறார்களின் பாடத்திட்டத்தை மாற்றி அமைத்தால் இது எங்கே போய் முடியும் என இடக்குமுடக்காக மடக்கிக் கேள்வி கேட்ட பத்திரிகையாளருக்கு ஜெயலலிதா தந்த அதி அற்புதமான பதில் தி.மு.க இனிமேல் ஆட்சிக்கே வராது என்பதாகும். அதாவது 2016ல் முறைப்படி தி.மு.க மீண்டும் ஆட்சிபீட மேற வேண்டும். 1991 இலிருந்து 5வருடங்களுக்கு ஒருமுறை மாறி மாறி அ.தி.மு.கவும், தி.மு.காவும் ஆட்சியைப்பிடித்து வருகின்றன.

1991ல் அ.தி.மு.க, 1996ல் தி.மு.க, 2001ல் அ.தி.மு.க, 2006ல் தி.மு.க, 2011ல் தி.மு.க என இது விஷயம் துல்லியமாக நடந்து வருகின்றது. ஆனால் ஜெயலலிதாவின் தற்போதைய திட்டப்படி இனிமேல் தி.மு.க ஆட்சிக்கு வரவே முடியாதபடி செய்துவிடுவார் என்று தோன்றுகிறது. கடந்த மாதம் சட்டசபையின் சகல கூட்டத் தொடர்களிலும் முதலமைச்சர் ஜெயலலிதா தவறாது பிரசன்னமாகி இருந்தார். சாதாரண எம்.எல்.ஏக்கள் கூட இவ்வாறு சகல அமர்வுகளிலும் பங்கு கொள்ளவில்லை. மிகுந்த ஆர்வமாக அரசாள்தலில் அவர் ஈடுபாடு கொண்டு செயற்பட்டு வருகிறார்.

பல்வேறு துறைசார் தகவல்களையும் நுனி நாக்கில் அவர் வைத்திருக்கும் விதம் வியப்படையச் செய்வதாக இருந்தது. யார் எந்த இடக்கு முடக்கு கேள்வியைக் கேட்டாலும் நெற்றியடி கொடுப்பது போல அவர் பதிலளித்தார். அதில் ஒன்றுதான் இனி தி.மு.க ஆட்சிக்கு வரவே இயலாததென்பது. முதல் இரு பதவிக் காலத்திலும் ஆடாத ஆட்டமாடி அனுபவம் முற்றிய இன்றைய ஜெயலலிதா பெரும் வித்தியாசமானவராகவே தெரிகிறார். எளிமையான ஒற்றை நிறப் புடவை மட்டுமே அணிகிறார்; கட் அவுட்டுகள் வைக்கக்கூடாதென கட்சியினருக்கு உத்தரவிடுகிறார். கட்சியினர் வியப்பில் வாயைப்பிளக்கிறார்கள்.

மாநிலத்தைத் தாக்கும் பிரச்சினைகளில் மத்திய அரசை நெருங்கித் தூள் கிளப்புவதால் அவரது வியூகங்கள் கண்டு தி.மு.க.வும் திணறவே செய்கிறது. திருநெல்வேலி மாவட்டம் ராதாபுரம் தொகுதியிலுள்ள கூடல்குளத்தில் அணுமின்நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. இது சூழல் மாசடைவதற்கு ஏதுவாகுமென சூழல் ஆர்வலர்களும், வைகோ உள்ளிட்ட தரப்புகளும் எதிர்ப்புக்காட்டியுள்ளனர். உடனே ஜெயலலிதா பிரதமருக்கு கடும் தொனியில் கடிதம் அனுப்பியுள்ளார். கலைஞரும் கடிதம் போடுவதில் கில்லாடிதான்; ஆனால் ஜெயலலிதா இம்முறை கடிதத்துடன் மட்டும் ஓயப்போவதில்லை என்பது தெளிவாகியுள்ளது. இது மாநிலமளவில் முதலமைச்சரின் செல்வாக்கை பெருமளவு உயர்த்திவிட்டுள்ளது என்பதை மறுப்பதற்கில்லை.

இந்த வேகத்தில் போனால் அடுத்த சட்டசபை தேர்தலில் (2016) தி.மு.க ஆட்சியைப்பிடிக்க இயலாது என்றே கூறலாம். அடுத்த மாதம் நடக்கவுள்ள உள்ளாட்சி சபைத் தேர்தலில் தி.மு.கவுக்கு இறங்குமுகமே என்பது நிச்சயம். வழக்கமாகவே இடைத்தேர்தலிலும் உள்ளாட்சித்தேர்தலிலும் ஆளும் கட்சி தான் வெற்றிபெறும். அந்த வாய்ப்பாட்டின்படி அ.தி.மு.க அமோக வெற்றி பெறுமென கணிப்பிடப்பட்டுள்ளது. இதை உணர்ந்த ஜெயலலிதா தனது கூட்டணிக் கட்சிகளை நைசாக கழற்றி விட்டுள்ளார். சட்டசபைத் தேர்தலில் 161இடங்களில் போட்டியிட்டு 150இடங்களில் அ.தி.மு.க வென்றது நினைவிருக்கலாம். எனவே விஜயகாந்தின் கட்சியுடன் கூட்டணி இல்லாவிடினும் கூட அதிமுக தனித்து ஆட்சிக்கு வந்திருக்கும் என்பது தெளிவானது. மேலும் விஜய்காந்த் எதிர்கட்சி தலைவர் பதவியை விரும்பி அந்த ஆசனத்தில் அமர்ந்துவிட்டார். எனவே அவரை எப்படி ஆளும்கட்சிக் கூட்டணியில் வைத்திருப்பது என்ற காத்திரமான கேள்வியை ஜெயலலிதா கேட்கலாம். உள்ளாட்சித் தேர்தல்கள் பெரிய முக்கியத்துவமுடையவை அல்லவெனினும் மாநகர முதல்வர் (மேயர்) பதவி எல்லாவற்றுக்கும் தாய் போன்றது. ஸ்டாலின் கூட இப்பதவியை வகித்து முன்னேறிய ஒருவரே. தற்போது இது தி.மு.க வசமுள்ளதாயினும் அடுத்த மாதத் தேர்தலுடன் அ.தி.மு.கவால் கைப்பற்றப்படும் என்பது உறுதியாகி உள்ளது. அதற்கேற்றாற் போல சைதை துரைசாமி என்ற மூத்த அ.தி.மு.க தலைவரை சென்னை முதல்வர் வேட்பாளராக ஜெயலலிதா அறிவித்துள்ளார். இவர் நடந்து முடிந்த சட்டசபைத் தேர்தலில் ஸ்டாலினை கிட்டத்தட்ட தோற்கடித்தே விட்டார் எனுமளவுக்கு போட்டி தந்தவர். பல பதவிகளுக்குப் பெரும் தொகையில் பெண் வேட்பாளர்களையும் அ.தி.மு.க தலைவி அறிவித்துள்ளார். இவை தவிர இலவச மிக்சி கிரைன்டர் என பெண்களுக்கு அவசியமான பொருட்களை இலவசமாக வழங்கியுள்ளமையும் குறிப்பிடத் தக்கது.

இதேவேளை, தி.மு.க - காங்கிரஸ் கூட்டணி உள்ளாட்சித் தேர்தலில் தொடராது என கலைஞர் அறிவித்துள்ளார். உண்மையில் தி.மு.கவிடம் இருந்து விலகலாம் என காங்கிரஸ் முடிவு எடுத்ததை மோப்பம் பிடித்த கலைஞர் காங்கிரஸ் இதை அறிவிக்க முன்பே முதல்நாள் நள்ளிரவில் செய்தியாளர்களை அழைத்து "தி.மு.க தனித்தே போட்டியிடும்" என அறிவித்தார். 'போக்கிரி அரசியலின்' முழுவடிவம் கருணாநிதி என்பதை மீண்டும் ஒருமுறை அவர் உணர்த்தியுள்ளார் எனலாம். தி.மு.கவின் முன்னாள் அமைச்சர்கள் பலர் சிறையிலுள்ளதால் தேர்தலில் களப்பணி ஆற்ற இவர்களால் முடியாது. எனவே தி.மு.க முகாமில் தேர்தல் பணிகளில் தொய்வு இருப்பது தெளிவாகவே தெரிகிறது.★

## எப்படி நடக்குது நேரடி ஒளிபரப்பு

உலகின் எந்த மூலையிலும் கிரிக்கெட் போட்டிகள் நடக்கும்போது அதன் நேரடி ஒளிபரப்பை வீட்டிலிருந்து கொண்டு சாவகாசமாக ரீவியில் பார்த்து ரசிக்கிறோம். துடுப்பாட்ட வீரர் 'ரன்அவுட்' ஆகும்போதோ, பந்து வீச்சாளர்கள் தவறாக பந்து வீசும் போதோ, அடுத்த விநாடியே ரீவியில் அதைத் துல்லியமாக பார்க்கிறோம்.

இதெல்லாம் எப்படி சாத்தியம்? உலகின் ஏதோ ஒரு மூலையில் நடக்கும் கிரிக்கெட் போட்டி எப்படி நம் வீட்டு அறைக்கு உடனே வருகிறது.

ஸ்டேடியம் முழுக்க வீடியோ கமராக்கள், நெட்வேக்கில் இணைக்கப்பட்டு அனைத்து கோணங்களிலும் ஒரே நேரத்தில் படம் பிடிக்கின்றன.

கமாராக்களில் ஒரே நேரத்தில் எடுக்கப்படும் படங்கள் கேபிள் வழியாக ஓ.பி.வான் எனும் நெட்வேக்கை கட்டுப்படுத்தும் வாகனத்தில் உள்ள கணனிகளுக்கு செல்லும்.

அங்கு ஒவ்வொரு கமரா படங்களையும் தனித்தனி கோணங்களில் பிரித்து அவற்றுள் விளம்பர லோகோக்கள், ரன் குறித்து தகவல்கள், சேர்க்கப்படும்.

மாற்றங்கள் செய்யப்பட்ட வீடியோ வாகனத்தின் மீது பொருத்தப்பட்டுள்ள டிஷ் அன்ரனா வழியாக செயற்கைக்கோள் மூலம் ரீ.வி நிலையத்துக்கு செல்லும் அங்கிருந்து வழக்கமாக நிகழ்ச்சிகள் ஒளிபரப்பப்படுவது போல், கிரிக்கெட் ஒளிபரப்பப்படும். இந்த தகவல் பரிமாற்றம் ஒரு வினாடிகளில் நடைபெறும்.

இப்படித் தான் கிரிக்கெட் நேரடி ஒளிபரப்பு மக்களிடம் உடனே கொண்டு செல்லப்படுகிறது.



# நாட்டு நடப்பு நல்லதாய் இல்லை




■ வில்லங்கம் விநாசியார்

போனகிழமை வில்லங்கத்தோடை உங்களைச் சந்திக்க வருவன் எண்டு அதுக்கு முதற்கிழமையே நான் பெரும் எடுப்பிலை சொல்லியிருந்தாலும், சொன்னபடி உங்களைச் சந்திக்க என்னாலை இயலாமல் போச்சுது. அதுக்குக் காரணம் என்னவெண்டு நான் சொன்னாலும் நீங்கள் நம்பப் போறதில்லை எண்டதும் எனக்குத் தெரியும். வேறை என்ன? நாட்டு நடப்பு என்னவெண்டு அறிய ஒருக்கால் ஒரு சுற்றுச் சுற்றிப் போட்டு வருவம் எண்டு வெளிக்கிட்டன். சத்தியமாய்ச் சொல்லுறன், உங்களுக்குத் தெரியும். இந்தப் புரட்டாசி மாதத்திலையும் இந்த வெய்யில் இப்பிடி எறிக்குதே, இது எங்களை எல்லாம் எவ்வளவு வாட்டு வாட்டுது. அந்தக் கடும் வெய்யிலிலை அகப்பட்டுத்தான் எனக்குத் தடிமனும் காய்ச்சலும் வந்திட்டுது.

வழக்கமாய் ஆவணி புரட்டாசியிலை மழை ஆரம்பிக்கிறது தான் அந்தக் காலத்து வழக்கம். ஆனால் இப்ப எல்லாம் காலநிலையிலும் எல்லாம் தலைகீழ் மாற்றம்தான். கலி முத்திப் போச்சுதெண்டு சொல்லுறதை விட வேறென்னத்தைச் சொல்ல ஏலும். நான் நினைக்கிறன், ஒருவேளை வன்னியிலை கடைசிச் சண்டை நடந்த வேளையிலை ஆமிக்காறர் அடிச்ச பீரங்கியளும், 'எயபோஸ்' காறர் போட்ட குண்டுகளும் வெடிச்சதிலை கிளம்பின நச்சுக் காத்தெல்லாம் எங்கடை தமிழர் பிரதேசங்களிலை ஆகாயத்திலை பரவிப் பரந்து வியாபித்துத்தான் மழைமேகங்கள் திரளாமல் ஒரு இரசாயன மாற்றத்தை ஏற்படுத்தியிருக்குமோ? அல்லாட்டில் கண்ணுக்கு முன்னாலை தங்கடை உயிருக்கு ஆபத்து வருகுதெண்டு தெரிஞ்சும் ஒண்டும் செய்ய இயலாமல் அங்கையும் இஞ்சையும் அந்தரிச்சு ஓடி ஒழிஞ்சும் கடைசியிலை பேதலிச்சுச் செத்துப் போன எங்கடை தமிழ்ச் சனங்களின்ரை ஆவிகளின்ரை சாபம்தான் இப்பிடி எங்களை சிரமப்பட வைக்குதோ எண்டு கூட நான் சில சமயம் நினைக்கிறதுண்டு.

போதாததற்கு இப்ப என்னடா என்றால், என்ரை கஸ்ர காலம் வில்லங்கம் என்னை வலியத் தேடி வருகுது. நான் என்ன செய்ய? என்னதான் சொன்னாலும் யாழ்ப்பாணத் தேர்தல் தோல்வியை அரசாங்கத்தாலை மறக்கேலாமல் கிடக்குப் பாருங்கோ. அதின்ரை எதிர் விளைவுதான் உந்த கிறீசுப் பூதங்கள் எண்டு நான் போன கிழமையே சொன்னன்தானே?. தன்னைத் தோற்கப் பண்ணின சனத்துக்கு ஒரு பாடம் படிப்பிக்க வேணும் எண்டதிலை குறியா நிக்குது அரசாங்கம். எங்கடை சனத்திட்டை உந்தப் பருப்பெல்லாம் அவியாது கண்டியளோ!. அதுகள் இருவத்தஞ்சு முப்பது வருசமாய் போரெண்டும் சமாதான மெண்டும் எல்லாத்தையும் கண்டு கழிச்சதுகள். அரசாங்கத்தைப்பற்றி நல்லாய்ப் படிச்சுட்டுதுகள். பிறகு உவை என்னத்தை எங்கடை சனத்துக்குப் படிப்பிக்கிறது?.

ஆனால் அரசாங்கத்தின்ரை உந்தத் தேர்தல் பழிவாங்கல் வேலையளாலை உள்ளதும் இல்லாமல் போகப்போகுது பாருங்கோ. முடிஞ்ச தேர்தலிலை யாழ்ப்பாணத்திலை தீவகத்திலை இருக்கிற மூண்டு சபையளைத் தவிர மிச்ச எல்லாத்தையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றிப் போட்டுது. இதால கூட்டமைப்புக்கு வோட்டுப் போட்டவையைப் பழிவாங்க வேணும் எண்டதுக்காக எங்கடை டக்ளஸ் மந்திரியும் அரசாங்கமும் சில வேலையளைச் செய்ய வெளிக்கிட்டிட்டினம். கூட்டமைப்பு வென்ற இடங்களிலை இருக்கிற ஆசுப்பத்திரியளிலை நிக்கிற அம்புலன்சுகளையும் பிரதேச சபையளிலை இருக்கிற பவுசருகளையும் எடுத்துக்கொண்டு போய் தீவகத்திலை இருக்கிற ஆசுப்பத்திரியளுக்கும் பிரதேச சபையளுக்கும் குடுத்துக்கொண்டிருக்கினம். இது எப்பிடி இருக்குது பாத்தியளோ?

என்னடா இந்த மனுசன் இப்பிடிச் சொல்லிக்காட்டிப் போட்டுதே எண்டு அவருக்கு ஒரே சங்கடமாய் இருந்தது. அந்தக் கூட்டத்திலை இருந்த அரசாங்க உத்தியோகத்தர்மார் எல்லாரும் ஒராளை ஒராள் பாத்து முழிச்சினம்.

உது மட்டுமோ?. கிட்டடியிலை யாழ்ப்பாண நூலகத்திலை நடந்த மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டமும் தீவக அபிவிருத்திக்குழுக் கூட்டமாய்த்தான் நடந்தது பாருங்கோ. அந்தக் கூட்டத்துக்கு அரசாங்கம் வென்ற பிரதேச சபையளின்ரை மெம்பர்மார் எல்லாருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டது. ஆனால் கூட்டமைப்பு வென்ற சபையளின்ரை மெம்பர்மார் ஒருதருக்கும் அழைப்பில்லைப் பாருங்கோ.

அதோடை அங்கை பேசின அமைச்சர் பசில் 'தீவகத்திலை இருக்கிற பிரதேச சபையளின்ரை அபிவிருத்திக்கு கனக்கக் காசு ஒதுக்கித் தாருங்கோ எண்டு அமைச்சர் டக்ளஸ் ஜனாதிபதிட்டைக் கேட்டிருக்கிறார்' எண்டு உண்மையைத் தானாகவே அவிட்டு விட்டிட்டார். அமைச்சர் டக்ளஸுக்கு ஒரு மாதிரியாய்ப் போச்சு. என்னடா இந்த மனுசன் இப்பிடிச் சொல்லிக்காட்டிப் போட்டுதே எண்டு அவருக்கு ஒரே சங்கடமாய் இருந்தது. அந்தக் கூட்டத்திலை இருந்த அரசாங்க உத்தியோகத்தர்மார் எல்லாரும் ஒராளை ஒராள் பாத்து முழிச்சினம். அப்ப மற்ற சபையளுக்குக் காசு இல்லையோ எண்ட கேள்வி எல்லாற்றை வாயுக்கையும் வந்தது. ஆனால் அது வெளியிலை வரேல்லை. கூட்டத்திலை அமைச்சரும் ஆளுநரும் சொல்லிற எல்லாத்துக்கும் வடக்கு மாகாண சபையின்ரை தலையள் கொஞ்சம் இருக்குதுகளெல்லோ, அதுகள் வேலிக்கு ஓணான் சாட்சி எண்ட மாதிரி தங்கடை தலையளை எல்லாப் பக்கமும் ஆட்டிச்சுதுகளாம். அதுகளுக்கும் கதிரை தானே முக்கியம். ஆளுநருக்கு வால் பிடிச்சு மற்றவையளைப் போட்டுக்குடுத்து பெரிய கதிரையளிலை இருந்திடவேணும் எண்டது தானே அவையளின்ரை ஆசை. ஆளுநரும் இப்ப யாழ்ப்பாணத்தின்ரை ஒரு குட்டி ஜனாதிபதி பாருங்கோ. அவற்றை கையிலை தான் எல்லாம் இருக்குது. அதாலை அவரைத் திருப்திப் படுத்திறதிலை எங்கடை அரச அதிகாரிகள் பலரும் குறியாய் இருக்கினம்.

அட, நான் ஒண்டைச் சொல்ல மறந்து போனன் பாத்தியளோ? உந்த அமெரிக்காக்காரன் பிளேக் அண்மையிலை யாழ்ப்பாணம் வந்தவரெல்லோ. அவர் இஞ்சை வந்து பலரையும் சந்திச்சவர். தன்ரை பயணம் முடிய ஒருக்கால் பேப்பர்காரரையும் சந்திப்பமெண்டு அந்தாள் நினைச்சுது. அதுக்கிடையிலை அமைச்சர் டக்ளஸ் ஒரு பிளான் பண்ணிப்போட்டார். பிளேக் பேப்பர் காரரைச் சந்திக்க வரேக்கை கொஞ்சச் சனத்தை பஸ்ஸுகளிலை ஏத்திக்கொண்டுவந்து பிளேக்குக்கு எதிராக ஆர்ப்பாட்டம் நடத்த வெளிக்கிட்டார் அமைச்சர். அந்த ஆள் சும்மா லேசான ஆளோ?. ஒரு ராஜதந்திரியெல்லோ?. ஆர்ப்பாட்டம் நடக்கிற இடத்துக்கே போகாமல் தந்திரமாய் நழுவிவிட்டார் அவர். ஆர்ப்பாட்டத்துக்கு வந்த சனத்துக்குத் தாங்கள் என்னத்துக்கு வந்தனாங்கள் எண்டே தெரியாமல் அதுகள் வெய்யிலிலை நிண்டு காய்ஞ்சதுதான் மிச்சம்.

கொழும்புக்குப் போன பிளேக் சும்மா விட்டாரோ? அங்க பேப்பர்காரரைச் சந்திச்சார். அதில் அவர் அமைச்சர் டக்ளஸையும் ஈ.பி.டி.பியையும் போட்டு வாங்கு வாங்கெண்டு வாங்கிப்போட்டார். போதாததற்கு ஈ.பி.டி.பி யாழ்ப்பாண மக்களை மிரட்டுது எண்டுமெல்லோ அவர் சொல்லிப்போட்டார். எங்கடை அமைச்சருக்கு இது பொல்லைக் குடுத்து அடி வாங்கின மாதிரிப் போச்சுது.

சரி நேரமாகிவிட்டுது. கனக்க விசயம் பார்க்கக் கிடக்குது. நான் அடுத்த கிழமை வந்து சந்திக்கிறன். ★

## 25.09.2011 – 01.10.2011

# ராசி பலன்

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1 ஆம் பாதம்**

தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் தட்டிக் கேட்கத் தயங்காத நீங்கள், எதிலும் நேர்மையை விரும்புபவர்கள். எப்படியும் வெற்றி பெறுவோம் என்ற தன்னம்பிக்கை அதிகரிக்கும். அதிகாரப் பதவியில் இருப்பவர்கள் அறிமுகமாவார்கள். சொந்த வீடு அமையும். சகோதரிக்கு திருமணம் முடியும். பெற்றோரின் பேச்சுக்கு முக்கியத்துவமளியுங்கள். உத்தியோகத்தில் வேலைச்சுமை அதிகமானாலும் தலைமையின் நம்பிக்கையை பெறுவீர்கள். சகிப்புத் தன்மை தேவைப்படும் வாரமிது.

**கார்த்திகை 2,3,4 ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1,2 ஆம் பாதங்கள்**

எப்போதும் எளிமையை விரும்பும் நீங்கள், கடின உழைப்பால் எதையும் சாதித்துக் காட்டுவீர்கள். ஏமாற்றங்கள் விலகும். புதுத் தெம்பு பிறக்கும். இழுபறியாக இருந்த வேலைகள் முடியும். எதிர்பார்த்த தொகை கைக்கு வரும். பிள்ளைகளின் பிடிவாதம் விலகும். தூரத்து உறவினர்கள் தேடி வருவார்கள். நட்பு வட்டம் விரியும். உடன்பிறந்தவர்கள் ஒத்தாசையாக இருப்பார்கள். வியாபாரத்தில் சூட்சுமங்களை உணருவீர்கள். புது நட்பால் சாதிக்கும் வாரமிது.

**மிருகசீரிடம் 3,4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

மூடப்பழக்கங்களை ஒதுக்கித் தள்ளும் நீங்கள், கீழ்த்தட்டு மக்களுக்காகப் போராடுவீர்கள். தொட்ட காரியம் துலங்கும். எதிர்பார்த்த பணம் வரும். சுப நிகழ்ச்சிகளில் முதல் மரியாதை கிடைக்கும். கணவன் மனைவிக்குள் நெருக்கம் உண்டாகும். எதிர்பார்த்த அயல்நாட்டுப் பயணம் தேடி வரும். நண்பர்களை சந்தித்து மகிழ்வீர்கள். உங்களின் புது முயற்சிகளை பெற்றோர் ஆதரிப்பார். உங்களின் திறமைகள் வெளிப்படும். வெற்றிப் பாதையில் பயணிக்கும் வாரமிது.

**புனர்பூசம் 4 ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

எதிலும் உடனடித் தீர்வை விரும்பும் நீங்கள் பாசத்திற்கு கட்டுப்பட்டவர்கள். காரண காரியமில்லாமல் கோபப்படமாட்டீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். பிரபலங்கள் அறிமுகமாவார்கள். பணப்புழக்கம் அதிகரிக்கும். சகோதரிக்கு வேலைக் கிடைக்கும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். வருங்காலத் திட்டத்தில் ஒன்று நிறைவேறும். விடாமுயற்சியால் வெற்றி பெறும் வாரமிது.

**மகம், பூரம், உத்திரம் 1 ஆம் பாதம்**

பாகுபாடு பார்க்காமல் பல தரப்பினருடனும் பாசமாக பழகும் நீங்கள், பரந்த மனசுக்கு சொந்தக்காரர்கள். பெரிய அந்தஸ்தில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். குடும்பத்தினர் உங்கள் ஆலோசனையை ஏற்பார். எதிர்பார்ப்புகள் தடையின்றி நிறைவேறும். குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். பிள்ளைகள் பொறுப்பாக நடந்துக் கொள்வார்கள். வியாபாரத்தில் கூடுதல் லாபம் கிடைக்கும். பழைய வேலையாட்களை மாற்றுவீர்கள். புதிய பாதையில் பயணிக்கும் வாரமிது.

**உத்திரம் 2,3,4 ஆம் பாதங்கள், அத்தம், சித்திரை 1,2 ஆம் பாதங்கள்**

மூளை பலத்தால் மற்றவர்களை வியக்க வைக்கும் நீங்கள் அதிரடி திட்டங்கள் தீட்டுவதிலும் வல்லவர்கள். எதிர்பார்ப்புகள் எளிதாக முடியும். கைமாற்றாக வாங்கியிருந்த பணத்தை தந்து முடிப்பீர்கள். குடும்பத்தில் உங்கள் கை ஓங்கும். பிள்ளைகளின் தேவைகளை பூர்த்தி செய்வீர்கள். நண்பர்களால் ஆதாயம் உண்டு. எவ்வளவு பணம் வந்தாலும் கரையும். எதிர்ப்புகளையும் தாண்டி முன்னேறுவீர்கள். நீண்ட நாள் கனவு நனவாகும். இங்கிதமான பேச்சால் சாதிக்கும் வாரமிது.

**சித்திரை 3, 4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்**

எந்த வேலையையும் தானே செய்தால் தான் திருப்தி அடைவீர்கள். சுயமரியாதையை எந்த சூழ்நிலையிலும் விட்டுக் கொடுக்க மாட்டீர்கள். திட்டவட்டமாக சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். பணப்புழக்கம் கணிசமாக உயரும். கணவன் மனைவிக்குள் மனம் விட்டு பேசுவீர்கள். பிள்ளைகளின் போக்கில் நல்ல மாற்றம் உண்டாகும். புதியவர்கள் நண்பர்களாவார்கள். பழைய பிரச்சினை தீரும் வாரமிது.

**விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

தன்னலமில்லாத நீங்கள் தன்னைச் சுற்றியிருப்பவர்களை சந்தோஷப்படுத்துவீர்கள். மதிப்பு, மரியாதைக் கூடும். வீட்டை விரிவுப்படுத்தி கட்டுவீர்கள். குடும்பத்தில் கலகலப் பான சூழல் உருவாகும். பிள்ளைகளால் சமூக அந்தஸ்து உயரும். எதிர்பாராத பணவரவு உண்டு. சகோதர வகையில் பயனடைவீர்கள். சகாக்கள் மத்தியில் பாராட்டப்படுவீர்கள். தெளிவான முடிவுகளை எடுப்பீர்கள். சம்பளப் பாக்கி கைக்கு வரும். தொட்டது துலங்கும் வாரமிது.

**மூலம், பூராடம், உத்திராடம் 1 ஆம் பாதம்**

தொலை நோக்குச் சிந்தனையும் மற்றவர்களுக்கு தொந்தரவு தராத குணமும் கொண்ட நீங்கள், சில இடங்களில் மௌனமாக இருந்து சாதிப்பவர்கள். எதிர்பார்ப்புகள் தடையின்றி நிறைவேறும். குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். உறவினர்களால் அனுகூலம் உண்டு. வெளிநாட்டிலிருப்பவர்கள் உதவுவார்கள். பெற்றோருடன் கலந்தாலோசித்து சில முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள். மாறுபட்ட அணுகுமுறையால் வெற்றி பெறும் வாரமிது.

**உத்தராடம் 2,3,4 ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1,2 ஆம் பாதங்கள்**

பிறர் மதிக்கும்படி நடந்து கொள்ளும் நீங்கள், பணம் காசை விட குணத்திற்கு முக்கியத்துவம் தருபவர்கள். பணவரவு திருப்தி தரும். குடும்பத்தில் அமைதி நிலவும். பிள்ளைகள் கேட்டதை வாங்கித் தருவீர்கள். வீடு மாறுவீர்கள். பழைய சொந்தங்கள் தேடி வரும். தந்தையுடன் வாக்குவாதம், வீண் செலவுகள் வந்துப் போகும். எச்சரிக்கையுடன் செயல்படப்பாருங்கள். வியாபாரத்தில் பங்குதாரர்களுடன் மோதல்கள் வந்து நீங்கும். கடின உழைப்பால் முன்னேறும் வாரமிது.

**அவிட்டம் 3,4 ஆம் பாதங்கள், சதயம், பூரட்டாதி 1,2,3 ஆம் பாதங்கள்**

இங்கிதமான பேச்சால் மற்றவர்களின் மனதில் எளிதில் இடம் பிடிக்கும் நீங்கள் நாலும் தெரிந்தவர்கள். சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். தடைப்பட்ட வேலைகள் முடியும். குடும்பத்தில் ஓரளவு நிம்மதி உண்டு. தூக்கமின்மை வந்துப் போகும். மூத்த சகோதரர் பண உதவி செய்வார். யாரையும் எளிதில் நம்பி ஏமாற வேண்டாம். தடைப்பட்ட உயர்கல்வியை தொடர்வீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களிடம் விவாதம் வேண்டாம். தன்னம்பிக்கையால் சாதிக்கும் வாரமிது.

**பூரட்டாதி 4 ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

சொல்லாலோ, செயலாலோ மற்றவர்களைக் காயப்படுத்தாத நீங்கள் அன்புக்கு அடிமையாவீர்கள். சோர்வு நீங்கி உற்சாகம் பொங்கும். கல்யாணப் பேச்சு வார்த்தை சுமூகமாக முடியும். தடைபட்ட வேலைகள் விரைந்து முடியும். குடும்பத்தாரின் ஒத்துழைப்பு அதிகரிக்கும். பிள்ளைகள் பிடிவாதமாக இருப்பார்கள். சகோதரருடன் கருத்து மோதல் வரும். அவ்சர முடிவுகள் வேண்டாம். வியாபாரத்தில் ஆர்வம் பிறக்கும். புது வாடிக்கையாளர்களை கனிவாக நடத்துங்கள். பட்டறிவால் பயனடையும் வாரமிது.

# நம்பிக்கைதானே வாழ்க்கை...

மகிழ்ச்சியும், துக்கமும் இணைந்ததுதான் வாழ்க்கை. இதனை உணர்ந்து கொள்பவர்களின் பயணம் தெளிந்த நீரோடையாக நகர்ந்து கொண்டிருக்கும். ஆனால் எதற்கெடுத்தாலும் கண்டிசன் போடும் இன்றைய இளம் தலைமுறையினர்தான் செய்வதறியாது தடுமாறி நிற்கின்றனர். ஒருவருக்கொருவர் புரிந்துகொண்டு விட்டுக்கொடுத்து வாழ்வதில்தான் இருக்கிறது வாழ்க்கைக்கான வெற்றியின் ரகசியம்.

**புனிதமான பந்தம்**

சீர்வரிசையும், வரதட்சணையும் கொடுத்துதான் திருமணம் நடைபெறுகிறது என்றாலும் இது பண்டமாற்று வியாபாரமல்ல. புனிதமான உறவின் தொடக்கம் என்பதை இருவருமே புரிந்து கொள்ள வேண்டும். எல்லோருக்குமே ஆசைகள், லட்சியங்கள் இருப்பது போல நம்மை திருமணம் செய்துகொண்டவருக்கும் கனவுகள் இருக்கும் என்பதை மறந்துவிடக் கூடாது. அதனை சிதைத்து விடவும் கூடாது. திருமணத்திற்கு முன்பே சந்தேகங்களை தெளிவுபடுத்திக் கொள்வதில் எந்தவித தவறும் இல்லை.

**எல்லையற்ற அன்பு**

வாழ்க்கைத்துணையை கரம் பற்றிய நிமிடத்திலேயே இருவரும் ஒருவருக்கொருவர் சங்கல்பம் செய்து கொள்ளவேண்டும். எந்த சூழ்நிலையிலும் உன்னைக் கைவிட மாட்டேன் என்ற உறுதிமொழியே தடுமாற்றம் இன்றி பயணம் செல்ல வழிவகுக்கும்.

மகிழ்ச்சியுடன் தொடங்கும் மணவாழ்க்கை இறுதி வரை சந்தோஷமாக இருப்பது என்பது மணமக்களின் கைகளில்தான் உள்ளது. வெவ்வேறு பழக்க வழக்கங்கள் உள்ள குடும்ப சூழ்நிலையில் இருந்து வந்திருந்தாலும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து எல்லையற்ற அன்பு பாராட்டுங்கள்.

**நம்பிக்கைதான் எல்லாமே**

மணவாழ்க்கையில் ஒன்றாக இணைந்த இருவருமே ஒருவருக்கொருவர் நம்பிக்கையுடன் வாழத் தொடங்கவேண்டும். ஏனென்றால் நம்பிக்கைதான் வாழ்க்கையின் அச்சாணி. தாம்பத்யத்தில் இருவரின் உடலும் சங்கமிப்பது போல இலட்சியப்பயணத்தில் தடையாக நில்லாமல் துணையாக இருப்பது அவசியம். அதுவே மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு அஸ்திவாரம்.

**யாதார்த்தமாய் வாழுங்கள்**


சிக்கல்கள், சிரமங்கள், சவால்கள் போன்ற வாழ்வியல் யதார்த்தங்களை புரிந்து கொண்டால் அவற்றை எளிதாக எதிர்கொள்ளலாம். வாழ்வு முழுவதும் வசந்தமாகும் குடும்ப வாழ்க்கை.சின்னச்சின்ன விஷயங்களை பெரிதுபடுத்தாமல் சிக்கல்களை தீர்ப்பதில் மட்டுமே திறமையை காட்ட வேண்டும்.

சிறு சிறு கருத்து வேற்றுமையின்போது தவறுகளை மட்டுமே எண்ணிக் கொண்டிருந்தால் எல்லாம் பூதாகரமாகத் தோன்றும். தடுமாற வைத்துவிடும். இல்லறத்தில் காலம் முழுக்க இணைந்திருப்பேன் என்று உறுதி ஏற்று செயல்பட்டால் அன்பும், விட்டுக்கொடுத்தலும் இயல்பாக வந்துவிடும்.

**அப்படியே ஏற்றுக்கொள்ளுங்கள்**

திருமணம் முடிந்ததும் கணவனோ, மனைவியோ இருவருமே ஒருவரைப் பற்றி ஒருவர் ஆராயத் தொடங்கக் கூடாது. ஏனென்றால் உறவுப்பாலம் சிதைவதற்கான முதல் வித்து இதில்தான் தொடங்குகிறது.

இருவருமே வெவ்வேறு சூழலில் பிறந்து வளர்ந்தவர்கள் என்பதால் அவரவரின் குறை நிறைகளை அப்படியே ஏற்றுக் கொள்ளுங்கள். யாரும் யாருக்காகவும் மாறவேண்டும் என்ற கட்டாயம் இல்லை. காலச் சூழலில் சில மாற்றங்களை ஏற்றுக்கொள்ளும் பக்குவம் வரும். மகிழ்ச்சி குடியேறும்.



# ஆபரணங்களின் தெரியாத ரகசியங்கள்!

கோயிலில் உள்ள அம்மனுக்கு என்னதான் பட்டுப்புடவை கட்டி மலர் மாலையெல்லாம் சூட்டினாலும், தாலி, தோடு, மூக்குத்தி, வளையல், ஒட்டியானம், மோதிரம் ஆகிய அணிகலன்கள் அணிவித்தால் தான் அலங்காரம் முழுமையடையும். பெண்களை அம்மனின் அம்சமாக கூறுகின்றனர். எனவே தான் பெண்கள் அணியும் கீழ்கண்ட அணிகலன்களுக்கும் சில காரணங்கள் கூறப்படுகிறது.



- **தாலி:** தாயாகி, தாலாட்டுப்பாட கணவன் தரும் பரிசு சின்னம்.
- **தோடு:** எதையும் காதோடு போட்டுக் கொள். வெளியில் சொல்லாதே !
- **மூக்குத்தி:** மூக்கு தான் முதலில் சமையலை அறியும் உத்தி என்பதை உணர்த்துகிறது.
- **வளையல்:** கணவன் உன்னை வளைய, வளைய வர வேண்டும், என்பதற்காக,
- **ஒட்டியாணம்:** கணவன், மனைவி இருவரும் ஈருடல் ஒருயிராய் ஒட்டியானோம் என்பதற்காக
- **மோதிரம்:** எதிலும் உன் கைத்திறன் காண்பிக்க.

# சிலருக்கு ஆதாரம் பலருக்குச் சேதாரம்

■ செந்தில்குமார்



வன்னியில் போர் முடிவுக்கு வந்து இரண்டரை வருடங்கள் கழியும் நிலையில் மீளக்குடியமர்த்தப்பட்ட மக்கள் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அபிவிருத்திபற்றியும், அரசியல் பற்றியும் ஆரவாரப்படும் அரசத் தரப்பு தற்போது இனக்கலப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றது.

அரசினதும், வேறு உதவும் அமைப்புக்களிடமும் உதவியை எதிர்பார்த்திருந்த மக்கள் அவை முழுமையாகக் கிடைக்காத நிலையில் தமது சொந்தத் தொழில் முயற்சிகளை ஆரம்பித்து வாழ்வாதாரத்தை மேம் படுத்த எத்தனித்துவருகின்றனர்.

ஒருபக்கம் நல்ல முயற்சிகள் நடைபெற மறு பக்கத்தில் தீய, சமூகத்துக்கு ஒவ்வாத செயற்பாடுகள் நடைபெறுவதை அவதானிக்க முடிகின்றது. அதாவது சிலர் தமக்கான வாழ்வாதாரத் தொழில் எனக் கருதிச் செய்யும் தொழில், பலரது இறப்புக்களுக்கும் குடும்பத்தகராறுகளுக்கும் பிறழ்வான நடத்தைகளுக்கும் காரணமாக அமைவதனையே காணக்கூடியதாக உள்ளது.

கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் சட்டவிரோத மது உற்பத்தி தொடர்பான வழக்கொன்று விசாரிக்கப்பட்டுத் தண்டப்பணம் அறவிடப்படாத நாள் இல்லையென்றாகிவிட்டது.

இதில் சுவாரஷ்யமானதும் வேதனையானதுமான விடயம் என்னவென்றால், சட்டவிரோத மதுபான உற்பத்திக் குற்றச்சாட்டில் நீதிமன்றில் முற்படுத்தப்படுபவர் தீர்ப்பறிக்கை சமர்ப்பித்த உடனேயே குற்றப்பணத்தைச் செலுத்தி சாதாரணமாக வெளியேறிவிடுகிறார். அதுமட்டுமல்ல தான் இழந்துவிட்டதாகக் கருதும் அந்தப் பணத்தை வீடு சென்றதும் ஒரு நாளிலேயே உழைத்தும் விடுகிறார்.

"காச்சுவதற்கு மனமிருந்நால் காச்சிவிடலாம்.
குடிப்பதுக்கு மனமிருந்தால் குடித்துவிடலாம்.
கேட்பதற்கு யார் உள்ளார்?"

இதுதான் வன்னியில் கசிப்பு உற்பத்தியாளர்களதும் வாடிக்கை நுகர்வோரதும் நிலைப்பாடாக உள்ளது.

கையும் களவுமாகப் பிடிபடும் ஒருசிலரே நாளாந்தம் நீதிமன்றுக்கு வருகின்றனர். மற்றைய பலர் சூழ்ச்சியாகத் தப்பித்து கொள்கின்றனர்.

ஒரு பின்தங்கிய கிராமம். ஒதுக்குப் புறமாகத் தனிமையில் உள்ள ஒரு வீடு. ஆனாலும் கொண்டாட்ட வீடுபோல ஆண்களால் மாலைப் பொழுது நிரம்பி வழிந்து கொண்டிருக்கும். ஊரில் பலருக்கு அங்கு கசிப்பு விற்பனையாவது தெரியும். துணிகரமாக இந்தத் தொழில் செய்யப் பின்புலத்தில் அதிகாரத் தரப்பின் ஆதரவு இருப்பதாக மக்கள் உணருகின்றார்கள். காரணம் அடிக்கடி அந்த வீட்டுக்கு அவர்கள் விருந்தாளிகளாக வந்து போவதுதான்.

வன்னியில் தவறைத் தட்டிக் கேட்டும் சுதந்திரம் இருப்பதாகத் தெரியவில்லை. சிலவேளை சட்டங்கள் கூட மாறுகின்றன. அன்றும் அதுதான் நடந்தது. குறித்த வீட்டில் நடப்பதைப் பார்த்து எரிச்சலுற்ற இளைஞன் ஒருவன் தனக்குத் தெரிந்த வகையில் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்தான்.

பொலிஸ்காரரர் ஒருவர் வந்தார். கசிப்பைப் பிடிப்பவர் போல உடனே வீட்டுக்குள் நுழைந்தார். பையனுக்குச் சந்தோஷம். என்னுடைய முயற்சி கைகூடிவிட்டது என்று மகிழ்ந்தான். ஐந்து நிமிடத்தில் பொலிஸ்காரர் வெளியில் வந்தார். கூடவே அந்த வீட்டுப் பெண்ணும் வந்தார். அந்த இளைஞனைப்பார்த்து பொலிஸ்காரர் சிரித்துவிட்டு 'நீ போ, நான்பாக்கிறன்' என்றாராம்.

வெளியில் வரும்போது அவரது காற்சட்டைப் பொக்கற்றுக்குள் போத்தல் ஒன்றும், கையில் காசும் இருந்ததைத் தான் அவதானித்ததாக பையன் சொன்னான். (வன்னேரிக்குளத்தில் சம்பவம், அக்கராயன் பொலிசாரிடம் முறையிடப்பட்டது, நடவடிக்கை 'நீபோ நான் பாக்கிறன்')

**நடைபாதைக் கசிப்பு வியாபாரி**
**விசுவமடுவில் சம்பவம்**

இரவு 7 மணியிருக்கும். திருமண வீடு ஒன்றுக்காக மூன்று நண்பர்கள் யாழ்ப்பாணத்திலிருந்து பஸ்சில் சென்று, இறங்கி திருமண வீட்டுக்குச் செல்வதற்காக நடந்து சென்றனர். ஒரு கடை அருகில் முதியவர் ஒருவர் சைக்கிளைச் சாத்திவிட்டு இருந்தார். பஸ்ஸில் சென்ற களைப்புக்கு ஒரு போத்தல் பியர் குடித்தால் கலியாண வீட்டில் இரவு ஏதாவது வேலை செய்து கொடுக்கலாம் எனத் திட்டமிட்ட மூவரும் அந்த முதியவர் அருகில் சென்று 'ஐயா, இந்தச் சாராயம், பியர் விக்கிற கடை இல்லையா' என்று கேட்டனராம்.

அதற்கு அவர் 'இருக்குது. தூரப் போக வேணும். ஆமிதான் விக்கிறான். பொது ஆக்கள் அதை விக்க முடியாதாம். இப்ப அங்கை இருக்காது. முடிஞ் சிருக்கும். நான் ஒண்டு வைச்சிருக்கிறன். அடிச்சுப் பாருங் கோவன்' என்றாராம். இவர்களுக்கும் அது என்ன என்ற ஆவல், ஆனால் கசிப்புப் பற்றி தெரியும். 'கடதாசிப் பைக்குள் கசிப்பு வச்சிருக்கிறன் தம்பி. நல்லாய் 'கிக்' ஏத்தும். கொஞ்சம் அடிச்சுப்பாருங்கோவன்' என்றாராம். இவர்களுக்கும் புது இடம். 'வேண்டாம் ஐயா, என்றுவிட்டு, திரும்பி விட்டனர். திருமண வீட்டில் வந்து இராணுவ சாராயக் கடைபற்றி விசாரித்த போது, விசுவமடு தேக்கங்காட்டுப் பகுதியில் மலிவு விலையில் அவற்றைப் பெறலாம் என்று அறிந்து கொண்ட மூவரும் 'அட, இடம் தெரியாததால் சந்தர்ப்பத்தை மிஸ்பண்ணியிட்டம்' என்று கவலைப்பட்டனராம்.

என்னதான் இருந்தாலும், சில குடும்பங்கள் தமது வாழ்வாதாரத் தொழிலாகக் கசிப்பை உற்பத்தி செய்து விற்பது, நாளாந்தம் கூலிக்கு மாரடித்து உழைக்கும் தொழிலாளர் உடற்களைக்குக் கொஞ்சம் குடிப்பம் என்று எண்ணித் தினமும் கசிப்பைக் குடித்துப் படிப்படியாக அவர்களது ஆயுளைக் அவர்களுக்குத் தெரியாமலேயே குறைத்து வருகின்றனர்.

தினமும் போதையில் வீட்டுக்குச் செல்லும் கணவன்மார், தமது மனைவிமாரை வாய்க்கு வந்தபடி ஏசுவது, அடிப்பது, சந்தேகம் கொள்வது, இவை மட்டுமா? தான் பெற்ற மகளை, வளர்க்கும் பேரப்பிள்ளையைக்கூட மதுபோதை காரணமாக காமப் பசிக்குஇரையாக்கிய சம்பவங்களும்இடம்பெற்றுள்ளன.

குற்றச் செயலைத் தடுப்பதற்கென்று வன்னியில் பணியிலுள்ளவர்கள்கூட இதுபோன்ற காரியங்களிலேயே ஈடுபடுகின்றனர். அவர்களுக்குச் சட்டவிரோதக் கசிப்பு உற்பத்தியாளர்களது கையூட்டுக்கள், சம்பளத்துக்கும் மேலாகக் கிடைப்பதால் அதையெல்லாம் எப்படி அவர்கள் குற்றச்செயலாக உணர்ந்து கொள்வார்கள்?

ஒட்டுமொத்தத்தில் சிலரின் சட்டத்துக்குப் புறம்பான நடவடிக்கைகள் ஒட்டுமொத்த சமூகத்தை சீரழிப்பதாகவே நோக்கப்படும். இது விடயத்தில் யார்தான் அக்கறைக் செலுத்துவரோ? போருக்கு முன் கௌரவமான தொழில் புரிந்த ஒரு குடும்பம் இப்போது குடும்பமாகச் சேர்ந்து கசிப்புக் காய்ச்சி விற்பதுக்கு யார் தான் காரணமோ?

நாளுக்குநாள் சீரழியும், திட்டமிட்டு சிலரால் சீரழிக்கப்படும் சமூகத்தைக் காப்பாற்ற யார் தான் முன் வருவாரோ? ★

# நனோ காரை தங்கத்தில் வடிவமைத்தால் எப்படி இருக்கும்




நனோ காரை தங்கத்தில் வடிவமைத்தால் எப்படி இருக்கும் என்ற யோசனை இந்தியாவின் ஏழை மக்களுக்கு வராது போகலாம். இந்தியாவின் முக்கிய பணக்காரரரான ரத்தன் டாத்தாவுக்கு வராது போகுமா?. அவரது சிந்தனைக்கு வடிவம் கொடுத்தது கோல்ட் பிளஸ் நகை வடிவமைப்பு நிறுவனம். அண்மையில் மும்பையின் நனோ காட்சி அறை ஒன்றில் இந்தத் தங்கக் காரை, அறிமுகம் செய்தார்கள். இதன் போது இந்தத் தங்கக் கார், இந்திய நகைத் தயாரிப்பில் பாராம்பரியமாகக் கடைப்பிடிக்கப்பட்டு வரும் தொழில் நுட்பத்தின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டதாகவும் 14வகைத் தொழில் நுணுக்கங்களுடன், 80 கிலோ தங்கம், 15 கிலோ வெள்ளி மற்றும் அலங்காரக் கற்களும், சேர்த்து வடிவமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தக் காரினை இவ்வாறு தங்கத்தால் அலங்கரித்த, கோல் ட்பிளஸ் சார்பில் கருத்துத் தெரிவிக்கையில், உலகெங்கிலும் இந்திய நகை வடிவமைப்புக்கு தனிமரியாதை உண்டெனவும், 5 ஆயிரம் ஆண்டுகள் கடந்து நிற்கும் இந்தப் பாராம்பரியத்தைக் கொண்டாடும் வகையிலும் இந்த முயற்சி மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரியப்படுத்தப்பட்டது. இந்தியாவின் விலைகுறைந்த கார் என்ற அறிமுகத்துடன் விற்பனைக்கு வந்த நனோ காரின், தங்கமாடலின் தயாரிப்புப் பெறுமதி 22 கோடி ரூபா. இந்த கார் விற்பனைக்கு அல்ல. நானோவின் விளம்பரத்துக்கான காட்சிப்படுத்தலுக்கு மட்டுமே எனத் தெரிவிக்கப்பட்டிருப்பது சற்று ஆறுதலான செய்தி. உங்கள் ஊர் நனோ காட்சியறைக்கும், 'உலகத் தொலைக்காட்சி வரலாற்றில் முதல் முறையாக' எனத் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளிலும், இந்தக் கார் விரைவில் வலம் வரலாம்.



# நவீன நரகாசுரர்களால் அடிமைப்படுத்தப்படும் தோட்டத் தொழிலாளர்கள்

இரா.புத்திரசிகாமணி

மலையகத்தில் குறிப்பாக தோட்டத் தொழிலாளர்களால் சிறப்பாகக் கொண்டாடப்படும் பண்டிகைகளில் ஒன்று தீபாவளித் திருநாள்.

தேவர்கள் உட்பட உலக மக்களை அடிப்மைப் படுத்தி, பேசவோ, ஒன்றாக உடுக்கவோ, நல்ல உணவை உண்ணவோ ஏன் இன்னும் கூறப் போனால், விளக்கு வைத்து வெளிச்சத்தில் கூட இருக்க விடாமல் இருட்டில் வதைத்த நரகாசுரன் அழிக்கப்பட்ட தினத்தையே உலக வாழ் இந்துக்கள் வெடி கொளுத்தி புத்தாடை பூண்டு, வீடுகள் தோறும் விளக்கேற்றி நல்ல உணவுகளையும், பலகாரங்களையும் தயாரித்து உறவுகளுடன் கூடி உண்டு மகிழ்வதுடன் கோயில்களிலும் விசேட பூஜைகளை நடத்தி வழிபாடுகளை செய்வர்.

கிட்டத்தட்ட இன்று மலையக மக்களின் வாழ்க்கையும் அந்தநிலைக்கு இட்டுச் செல்லப்படுமோ என்ற அச்சமும் ஏற்பட்டுள்ளது.


உலகிலேயே ஆகக் கூடுதலாக வேலை செய்து குறைந்த ஊதியத்தைப் பெறுபவர்கள் தோட்டத் தொழிலாளர்கள் என்று கணிப்பிடப்பட்டுள்ளது.

தோட்ட நிர்வாகங்கள், தோட்டக் கம்பெனிகள், தொழிற்சங்கங்கள், அரசியல் கட்சிகள் என பல பக்கத்தாலும் பிரித்து வைக்கப்பட்டு சின்னா பின்னமாக்கப்பட்டுள்ளனர். இவர்களை ஒன்று படவிடாமல் துண்டு போட்டு வைத்து சுகம் காணுகின்றனர். ஊர் இரண்டுபட்டால் தானே இந்தக் கூத்தாடிகளுக்குக் கொண்டாட்டம்.

தோட்டத் தொழிலாளர்கள் இன்று நவீன நரகாசுரர்களால் அடிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என்று கூறினால் அதில் தவறு ஒன்றும் இல்லை என்பது எனது துணிவான கருத்து.

இப்பொழுது விடயத்திற்கு வருவோம். எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 26 ஆம் திகதி தீபாவளிப் பண்டிகை வருகின்றது. எண்ணி வைத்தாற் போல் இன்னும் 35 நாட்களே இருக்கின்றன.

தோட்டத் தொழிலாளர்கள் தீபாவளிப் பண்டிகைக்கு என எதையும் சேமித்து வைப்பதில்லை. காரணம் வருடாவருடம் தீபாவளிப் பண்டிகை முற்பணம் கிடைக்கும். அதோடு அம்மாத சம்பளமும் கிடைத்துவிடும். இதனால் தீபாவளிப் பண்டிகைக்கு என விசேடமாக சேமித்து வைப்பதில் அக்கறை காட்டுவதில்லை. இது மலையகத் தொழிற்சங்க வாதிகளுக்கு ஒரு நல்ல வாய்ப்பாகிப் போய்விட்டது.




ஒருவர் பத்தாயிரம் ரூபா வேண்டும் என்பார். மற்றவர் எட்டாயிரம் ரூபா என்பார். அடுத்தவர் இல்லை இல்லை ஐயாயிரம் போதும் என்று பல அறிக்கைகளை விட்டு விட்டு ஒய்ந்து விடுவார்கள்.

இந்த அரசியல் வாதிகளுக்கும் தொழிற் சங்கத் தலைவர்களுக்கும் தமது பெயர் பத்திரிகைகளில் வந்துவிட்டால் போதும். தொழிலாளர்களுக்கு இந்த பண்டிகை முற்பணம் கிடைத்ததோ கிடைக்கவில்லையோ என்பதில் அக்கறை இல்லை.

அப்பாவித் தொழிலாளர்களோ நமது தலைவர்கள் கேட்டுவிட்டார்கள் கூடுதலான தொகை கிடைக்கும் என்ற எதிர்பார்ப்புடன் இருப்பார்கள். ஆனால் தோட்டக் கம்பனிகளோ, எல்லோருடைய கோரிக்கைகளையும் உதாசீனம் செய்துவிட்டு தாம் விரும்பிய ஒரு தொகையை பண்டிகை முற்பணமாக வழங்கி விடும். எதிர்பார்த்திருந்த தோட்டத் தொழிலாளர்கள் ஏமாற்றம் அடைவது தான் மிச்சம்.

ஐயா, தோட்டத் தொழிலாளர்களின் சம்பள உயர்வு விடயத்தில் தான் உங்களுடைய திமிர்த்தனத்தையும், வீராப்பையும் காட்டி உங்களுடைய வண்டிகளை நிரப்பிக் கொண்டீர்கள்.


பண்டிகை முற்பணம் எவரும் பிச்சையாகவோ, இனாமாகவோ வழங்கப்படுவது அல்ல. அவர்களுடைய உழைப்பை பிணையாக வைத்து வழங்கும் ஒரு கடன். இதனையாவது வழங்க முன்வருவீர்களா?

இதனைப் பெற்றுக் கொடுக்க இடைத் தரகர்கள் எவரும் தேவை இல்லை. பாவம் என்ன செய்வார்கள் இந்த ஏமாந்த தொழிலாளிகள். தமது வாழ்க்கையில் நடக்கும் அனைத்து விடயங்களும் தாம் சார்ந்த தொழிற் சங்கங்களின் தயவுடனேயே நடைபெறுகின்றன என்ற ஒரு மாயையில் மூழ்கிப் போய் உள்ளனர்.

அறிக்கை விடுவதால் மட்டும் உங்கள் கடமை முடிந்துவிட்டது என்று தொடர்ந்தும் ஏமாற்றாதீர்கள். கடைசி வரை காத்திருக்க வேண்டாம். தோட்டத் தொழிலாளர்களின் சந்தாப் பணத்தில் சுகம் அனுபவிக்கும் நீங்கள் அனைவரும் ஒன்று கூடி ஒரே இரவில் பண்டிகை முற்பணம் இவ்வளவு வேண்டும் எனக்கேட்டு வாங்கிக் கொடுக்க வேண்டும். இதன் மூலம் உங்கள் மீதுள்ள கறைகள் சிறிதளவாவது நீங்கும். செய்வீர்களா?

அண்டவெளியில் காணப்படும் கோள்கள் அல்லது கிரகங்கள் ஒன்பது என்கின்ற கதை போய் தற்போது வானவியல் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் விஞ்ஞானிகளால் புதிய புதிய கிரகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுக் கொண்டிருகிறது. இதுவரை வானியல் ஆய்வாளர்களால் சுமார் 50 கிரகங்கள் வரை கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. இவற்றில் கிட்டத்தட்ட 16 கிரகங்கள் பூமியினை ஒத்ததாகவும் இதன் அளவை விட பெரியதாகவும் காணப்படுவதாக விஞ்ஞானிகள் குறிப்பிடுகிறார்கள். இவற்றில் ஒரு கிரகத்தில் வேற்றுக்கிரக வாசிகள் வசிப்பதாகவும் விஞ்ஞானிகள் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்கள். இக்கிரகங்கள் பூமியில் இருந்து 36 ஒளி ஆண்டுகள் தொலைவில் இருப்பதாகவும் டெய்லி மெயில் செய்தி வெளியிட்டுள்ளது. விஞ்ஞானிகளின் இந்தக்கண்டுபிடிப்புக்கள் என்றோ ஒரு நாள் மனிதர்களை வேற்றுக்கிரகங்களுக்கு அழைத்து சென்று குடியமர்த்த முடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

## வேற்றுக்கிரகவாசிகள் வாழும் புதிய கிரகம்



# வாழ்க்கையில் உயர துணிவும் முயற்சியும் அவசியம்

சில சமயம் பிரச்சினைகள் நிறைய இருக்கும் போது அவற்றை எப்படிச் சமாளிக்கப் போகிறோம் என்ற பயம் ஏற்படும்.

பிரச்சினைகள் குழப்பமாக இருக்கும்போது அச்சமேற்படும். வேறு வேலை இல்லாமல் உட்கார்ந்திருக்கும்போது சில சிறு பிரச்சினைகள்கூட மிகப் பெரிய பிரச்சினையாய் மனதை அலைக்கழிக்கும். சத்தம் நிறைந்த பெரிய தொழிற்சாலையில் கூட ஒரு கவிஞன் உட்கார்ந்துகொண்டு அந்தச் சப்தமே பாதிக்காதவாறு, ஒரு கவிதையே எழுதிவிடமுடியும். அதே கவிஞன் இரவில் தூக்கம் வராமல் புரளும்போது, கேவலம் ஒரு சுவர்க்கோழி போடும் சப்தம் தலையைப் பிளப்பதாக உணருவான். காரணம் வேலை ஈடுபாடு, நமக்கு வேலை இருக்கும் போது - அடுத்தடுத்து வேலை வைத்துக் கொண்டிருக்கும்போது - நமக்குக் கவலைப்பட நேரமில்லை. அச்சப்பட நேரமில்லை. வருவது வரட்டும் என்ற மனோநிலையில் மனிதன் தன் காரியத்தில் ஈடுபடுகிறான்;

ஒரு வேலையைச் செய்வது - ஒரு வேலையில் ஈடுபடுவது - காந்த சக்தி கொண்டது. அப்போது அதனைச் செய்து முடிக்க முடியுமா, முடியாதா?... என்று சிந்தித்துப் பார்க்க நமக்கு நேரமிருப்பதில்லை. முடிவைப் பற்றிய நினைவே இல்லாமல் செய்யும் தொழிலில் ஈடுபடும் முடிவைப்பற்றி - பலனைப்பற்றிக் கவலைப்படாதே; உன் தொழிலைச் செய் என்று கூறுகிறது பகவத்கீதை.

முடியாதென்று பலர் சொன்னார்கள். ஆனால், அது முடியாதென்று அவனுக்குத் தெரியாது. காரியத்தில் ஈடுபட்டான். முயற் சித்து முடித்துவிட்டான். முடியாதென்பது தெரிந்திருந்தால் அவன் முடித்திருப்பானோ என்னவோ! என்கிறது ஒரு ஆங்கிலக் கவிதை.

தன்னம்பிக்கைக்கு மருந்து வேலைதான்; காரியம்தான்; செயல்தான்.

எனக்கு எழுத வராது என்று சொல்லிக்கொண்டோ, எனக்கு எழுத நேரமில்லை என்றோ சொல்லிக்கொண்டிருந்தால் எப்படி எழுத்தாளனாக முடியும்? எனக்கு எழுத வராது என்று சொல்லாதீர்கள்; நான் எழுத முயற்சித்ததில்லை என்று சொல்லுங்கள். எனக்கு நாட்டியம் ஆடத் தெரியாது என்று கூறாமல் நான் நாட்டியம் ஆட முயன்றதில்லை என்று வண் மை யாகக் கூறுங்கள் என்று அறிவுரை வழங்குகிறார்கள் மன நூலார். இரண்டு மூன்று முறை ஒரு காரியத்தில் தவறி விட்டால் நான் அதிர்ஷ்ட மற்றவன் என்பது எப்படி? அதற்குப் பதிலாக, நான் இம்முறை மூன்றாம் முறை தவறிவிட்டேன் என்று சொல்வது எப்படி......? நான் அதிர்ஷ்ட மற்றவன். எனக்குப் படிப்புவராது. என்னால் பந்தை வீசி எறிய முடியாது என்றெல்லாம் கூறி நம் மனத்தை நம்ப வைத்தால் நம் மனம் அதை அப்படியே ஏற்றுக்கொள்கிறது. இதைவிட நாம் நமக்குச் செய்யும் தீமை வேறு கிடையாது. அதற்குப் பதிலாக என்னால் முடியும். நான் எந்தக் காரியத்தையும் சிறிது சிறிதாகச் செய்துவிடுவேன் என்ற மனோபாவத்தில் எண்ணங்களை மனத்திற்குள் போடும்போது, நம்முள்ளே இருக்கும் இறைஞனை நாம் தட்டிக் கொடுக்கிறோம்; ஊக்க மூட்டுகிறோம்.

# உடலில் பரவும் வெள்ளைத் திட்டுக்கள் தொற்றுநோயா?

**கேள்வி:** ஆண். வயது 38. கடந்த மூன்று வருடங்களாக மூலநோய் இருக்கிறது. தினமும் காலையில் மலம் கழித்த பின்னர் மலவாசலால் இரத்தம் வெளியேறுகின்றது. இதற்கு நான் பல கை வைத்தியங்கள் செய்து பார்த்து விட்டேன். இரத்தப் போக்கு நிற்பதாய் இல்லை. மூலநோய் ஏற்படக் காரணமென்ன? இதிலிருந்து குணமாக ஆலோசனை கூறுங்கள்?

**பதில்:** நீங்கள் குறிப்பிட்ட மூலநோய் என்பதை Haenwrrhoids என அழைப்போம். எமது குதப் பகுதியில் இருக்கும் இரத்தக் குழாய்களில் புடைப்பு ஏற்படுவதனால் இவை ஏற்படுகின்றன. மேலும் Anal Fissure எனப்படும் நிலையும் மலத்தோடு இரத்தம் போவதற்கு (Bleeding per rectum) காரணமாக இருக்கலாம். மலச்சிக்கல் அல்லது கடினமாக மலக்குதத்தின் உட்சுவரில் உராய்வதன் மூலம் இரத்தப் போக்கை ஏற்படுத்துகின்றன.

உங்களது மலம் இளக்கமாக கட்டித் தன்மை இல்லாது இருக்குமானால் இத்தகைய பிரச்சினை இராது. ஆனால் இரத்தம் போகத் தொடங்கினால் மல ரீதியாகவே மலம் கழித்தபின் பிரச்சினை ஏற்படும். மேலும் குதத்தில் எரிவு, நோ ஏற்படுவதாலும் மலம் கழிப்பதில் பிரச்சனையை ஏற்படுத்தும் இது நிலமையை மேலும் சிக்கலாக்கும்.

எனவே தகுந்த Luxatives எடுத்து மலத்தின் தன்மையை இளகியதாக மாற்ற வேண்டும். இதுவும் ஒரு தற்காலிக ஏற்பாடேயாகும்.

ஒரு சத்திரசிகிச்சை நிபுணரின் ஆலோசனையோடு சத்திர சிகிச்சை செய்து கொள்வதே நிரந்தரத் தீர்வைத் தரும். கை மருந்துகள் செய்து காலத்தை வீணடிப்பது உகந்தசெயல் அல்ல. எனவே உரிய சிகிச்சை பெறுவதற்கு முயற்சியுங்கள்.

**கேள்வி:** எனது வயது 30. பெண். கடந்த வருட முற்பகுதியில் எனது கைகளிலும் உதட்டிலும் வெள்ளைத் திட்டுக்கள் ஏற்பட்டன. மருத்துவ ஆலோசனையின் பேரில் Dermovate Cream பாவித்தேன். குணமாகிவிட்டாலும் இவ்வாண்டு ஜனவரியில் மீண்டும் முகத்திலும் உதட்டிலும் அவை தோன்றியுள்ளன. அத்துடன் கடந்த மாதம் எனது 18 வயதான இளைய சகோதரரின் முகத்திலும் அத்தகைய வெள்ளைத்திட்டுக்கள் தோன்றியுள்ளன. இதனைக் குணப்படுத்தும் வழிவகை கூறுவீர்களா? இதுவோர் பரம்பரை வியாதி எனக் கூறப்படுவதில் உண்மையுண்டா? தயவு செய்து ஆலோசனை கூறுங்கள்.



**பதில்:** உங்களது பிரச்சினை போன்ற அதே பிரச்சினைக்கான பதிலை மிக அண்மையிலும் இந்தப் பகுதியில் தந்திருந்தேன்.

நீங்கள் Dermmovate பாவித்ததாக குறிப்பிட்டிருந்தீர்கள். இந்த நோய்க்கான சிகிச்சை தொடர்ச்சியாக பல மாதங்கள் மேற்கொள்ளப்படவேண்டும் இதன் பின்பும் அவ்வப் போது உடனடியாகவும் சிகிச்சை பெறவேண்டும்.

இல்லையேல், இது ஒரு தொற்று நோயாக இருப்பதால் மற்றவர்களுக்கு தொற்றுவதற்கு வாய்ப்பு ஏற்படும். ஏற்கனவே 18 வயது இளைய சகோதரிக்கு தொற்றியுள்ளது. எல்லோரும் தனித்தனி துவாய் மற்றும் சவர்க்காரம் என்பவற்றை பாவியுங்கள். அது முடியாத பட்சத்தில் Liquid shop பாவிக்கவும். உடனடியாக தோல் சிகிச்சை நிபுணரை அணுகி உரிய சிகிச்சை பெறுங்கள்.

**கேள்வி:** எனக்கு வயது 70 ஆண் அண்மைக் காலமாக சிறுநீர் கழிப்பதைக் கட்டுப்படுத்த முடிவதில்லை. பல சமயங்களில் கட்டுப் பாடின்றிச் சிறுநீர் வெளியேறி விடுகிறது. இரவில் அடிக்கடி பெரும்பாலும் ஐந்தாறு தடவைகள் சிறுநீர் கழிக்கும் உந்துதல் ஏற்படுகின்றது. எனக்கு இது வரை நீரிழிவு நோய் எற்படவில்லை. கட்டுப்பாடின்றிச் சிறுநீர் வெளியேறுவதால் மிகவும் சிரமத்தை ஏற்படுத்த வேண்டியுள்ளது. இதற்குக் காரணமென்ன? இதிலிருந்து விடுபட ஆலோசனை கூறுங்கள்.

**பதில்:** உங்களது வயது 70 எனவே சிறநீர் கழிப்பதோடு தொடர்புடைய இரு நோய்கள் பற்றி கவனம் செலுத்த வேண்டும். ஆண்களில் சிறுநீர்ப்பாதையில் உள்ள இனப்பெருக்கத்தோடு தொடர்புடைய முன்னிற்கும் சுரப்பி (Prostate gland) வீக்கமடைவதால் நீங்கள் குறிப்பிட்ட நிலை தோன்றலாம். அனேகமான ஆண்கள் தங்களது வாழ்க்கையின் பிற்காலத்தில் அல்லது வயது முதிர்ந்த காலத்தில் இத்தகைய பிரச்சினையை எதிர்கொள்கிறார்கள்.

சில வேளைகளில் உங்களுக்கு சலரோகம் அல்லது நீரிழிவு இருந்தாலும் கூட அடிக்கடி சிறுநீர் கழிக்க வேண்டி ஏற்படும். அதிலும் குறிப்பாக இரவில் கூடிய தரம் சிறுநீர் கழிக்க வேண்டி வரும் உங்களது வயது 70ஆக இருப்பதால் அதுவும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டியதே.

முன்னிற்கும் சுரப்பி வீக்கமாக இருப்பின் அதன் தன்மை, எல்லாம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். இதனை ஒரு சத்திர சிகிச்சை நிபுணராலேயே மேற்கொள்ள முடியும். மேலும் முன்னிற்கும் சுரப்பி வீக்கத்திற்கான இறுதித் தீர்வு சத்திர சிகிச்சை மட்டுமே. எனவே ஒரு சத்திரசிகிச்சை நிபுணரை அணுகி சரியான தீர்வை பெற்றுக் கொள்ளுங்கள்.

**இலவச மருத்துவ ஆலோசனைகளை 'சுடர் ஒளி' மூலம் வழங்குகிறார் டாக்டர் ஜோன் பொன்னையா. நீங்கள் கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரிகள்.**

**இலவச மருத்துவ ஆலோசனை**

I.) சுடர்ஒளி, யாழ்.அலுவலகம்,
361,கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

II.) சுடர்ஒளி,
85,ஐயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு 14.

# போதைப் பொருளை விட ஆபத்தானது தொலைக்காட்சி!


காலையில் 'அமுது' கொண்டே தொடங்கும் பெண்களின் வாழ்க்கை இரவு உறங்கும் வரையும் முடிவதில்லை. அந்த அளவிற்கு தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படும் நெடுந்தொடர்கள் பெண்களை கட்டிப் போட்டு, இல்லை இல்லை அடிமையாக்கி வைத்திருக்கிறது.

தொலைக்காட்சிக்கு அடிமையானவர்கள் போதைப் பொருள்களுக்கு அடிமையானவர்கள் போன்றுதான் நடந்துகொள்கிறார்கள். ஆனால் தொலைக்காட்சியானது போதைப்பொருளை விட கொடூரமானது என்று கண்டறியப்பட்டுள்ளது. மனிதனின் மனதை பாழாக்கி வன்முறை மீது நாட்டம் கொள்ளவைத்து நாட்டையும், சமுதாயத்தையும் அது அழிக்கின்றது.

தொலைக்காட்சியானது வளர்ந்து வரும் தலைமுறையினர் மனநிலையை மட்டுமின்றி உடல் நலனையும் வெகுவாகப் பாதிக்கின்றது என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

**பாதிக்கும் வன்முறைக் காட்சிகள்**

18 வயதை அடைவதற்குள் ஒரு சிறுவன் தொலைக்காட்சி வழியாக இரண்டு இலட்சம் வன்முறைக் காட்சிகள் பார்த்து வருவதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. சராசரியாக ஒரு குழந்தை 11 வயதை அடைவதற்குள் 8,000 கொலைகளையும் 10,000 வன்முறைகளையும் தொலைக்காட்சி வழியே பார்க்க நேரிடுவதாக



ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

தொலைக்காட்சியை பார்க்கும் சிறுவர்கள் தாங்கள் பார்க்கும் ஒவ்வொரு காட்சியையும் தமது ஆழ் மனதில் உள்வாங்கிக் கொள்கிறார்கள் என்றும் இதனடிப்படையில் அவர்கள் செயல்களில் இறங்குவதாகவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. நிஜத்திற்கும், நிழலுக்கும் இடையே எவ்வித வேறுபாட்டையும் இவர்களால் காணமுடிவதில்லை என்றும், தொலைக்காட்சி ஏற்படுத்திய பாதிப்புகளால் வாழ்க்கை பயங்கரமானதாகவும் இருள் சூழ்ந்ததாகவும், கவலைக்குரியதாகவும் ஆகிவிடுவதாக பெருவாரியான ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

**தவறான முன்னுதாரணம்**


பெரியவர்கள் சண்டை போட்டுக் கொள்வதையும், மனமுடைந்து கண்ணீர் விடுதல், கொலை, பாலியல் உறவு கொள்வது மற்றும் வன்முறைகள் போன்றவற்றை குழந்தைகள் தொலைக்காட்சிகளில் காண்கிறார்கள். பெரியவர்களின் பொறுப்பற்ற ஒழுக்கக் கேடான வாழ்க்கைகளை தொலைக்காட்சியில் மீண்டும் மீண்டும் பார்க்கும் குழந்தைகள் அவர்களை தவறுகளுக்கு முன்னுதாரணமாக்குகிறார்கள்.

தொலைக்காட்சியில் சித்தரிக்கப்படும் போலியான நிகழ்வுகள் உண்மையான வாழ்வில் நடப்புகளாக பசுமரத்து ஆணி போல பிஞ்சு நெஞ்சங்களில் பதிவாகின்றன. இதனால் குழந்தைகள் தங்களின் கள்ளம் கபடமற்ற தன்மையை இழக்கின்றனர். அவர்களின் எதிர்காலம் பாழ்படும் அளவிற்கு தொலைக்காட்சி வழியே நஞ்சு விதைகள் விதைக்கப்படுகின்றன என்பதே உண்மை.

# குறட்டை விடுபவர்களை விட அரட்டை அடிப்பவர்கள் எவ்வளவோ மேல்!

**பி.பிரதீபன்,**
**மட்டக்களப்பு.**

**கேள்வி:** சத்திரசிகிச்சை செய்யும் டாக்டருக்குப் பயம் இருக்காதா?



**பதில்:** பயப்பட வேண்டியது நோயாளி அல்லவா?

**எஸ்.மோகனா,**
**பாண்டிருப்பு.**

**கேள்வி:** காதல்; தேர்தல்; ஒப்பிடுக.

**பதில்:** தேர்தல் வாக்குறுதிகள் போல காதலும் ஆரம்பத்தில் களிப்பூட்டுவதாகவே இருக்கும். ஆனால் தேர்வின் பின் இரண்டுமே சலிப்பூட்டுவன தான்.

**த.பிரியந்தன்,**
**கொழும்பு-06.**

**கேள்வி:** இலக்கிய உலகில் பாரதிக்கும் கல்கிக்கும் ஏன் தனியிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது?

**பதில்:** அதுவரை இறுக்கமாக இருந்த தமிழ்மொழியில் அவ்விருவரும் தான் எளிமையைப் புகுத்தி சாதாரண மக்களுக்கும் இலக்கியத்தை எட்டச் செய்தவர்கள்.

**த.இளநிலா,**
**வவுனியா.**


**கேள்வி:** தமது ஒரு மகனை அறிவாளியாக ஆக்கி வைக்க அவனது பெற்றோர்கள் எவ்வளவு காலத்தைச் செலவிட நேர்கிறது?

**பதில்:** ஏறக்குறைய 20 வருடங்களையாவது மகனுக்காகச் செலவிட வேண்டியுள்ளது. ஆனால், அவனுக்கு வாய்க்கும் மனைவியோ அவனை ஒரு நாளிலேயே முட்டாளாக்கி விடுகிறாள்.

**பு.அனுஷா,**
**மானிப்பாய்.**

**கேள்வி:** அலுவலகத்தில் அரட்டை அடிப்பவர்கள் குறித்து...?

**பதில்:** அலுவலகத்தில் குறட்டை விடுப



வர்களோடு ஒப்பிடும் போது அரட்டை அடிப்பவர் எவ்வளவோ மேல்!

**வே.அன்பழகன்,**
**மன்னார்.**

**கேள்வி:** மிருகங்கள் மனிதர்களைப் போல் தற்கொலை செய்து கொள்வதில்லையே ஏன்?

**பதில்:** திமிங்கலங்கள் கூட்டாக கரையொதுங்கி தற்கொலை செய்து கொள்வதாக ஆய்வுத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

**அ.தர்மினி,**
**சுண்டுக்குளி.**



**கேள்வி:** மாமியாரிடம் பாராட்டுப் பெற என்ன வழி?

**பதில்:** வாத்தியார் மெச்சிய பிள்ளையும் இல்லை. மாமியார் மெச்சிய மருமகளும் இல்லை என்பது உமக்குத் தெரியாதா?

**ப.பிரியதர்சினி,**
**கோப்பாய்.**

**கேள்வி:** கோடிக்கணக்கான வரி ஏய்ப்பு செய்யும் நடிகர்கள் ஹசாரே பக்கத்தில் இருந்து கொண்டு அவருக்கு ஆதரவு தெரிவித்தார்களே ஏன்? இதன் அர்த்தமென்ன பித்தரே?

**பதில்:** ஜனநாயகம் என்பதுதான் அர்த்தம்.

**த.ஹரன்,**
**புதுக்குடியிருப்பு.**

**கேள்வி:** தோமஸ் அல்வா எடிசனுக்கு இருட்டைக் கண்டால் பயமாமே?

**பதில்:** அந்தப் பயத்தில்தான் அவர் ஆராய்ச்சி செய்து மின்குமிழையே கண்டுபிடித்திருப்பார் போலும்.

**த.சந்தோஷ்,**
**கொழும்பு-15.**

**கேள்வி:** தமிழ்த் திரையுலகில் இப்போது யாருடைய ஆட்சி நடக்கிறது பித்தரே?

**பதில்:** மங்காத்தா படம் வெளிவந்ததிலிருந்து "தல" யோட ஆட்சி.

**ம.ராஜீவ்,**
**மன்னார்.**

**கேள்வி:** பெண்கள் குடும்பத்தின் கண்கள் என்கிறார்களே! உண்மையா?

**பதில்:** முற்றிலும் உண்மை. காலையில் எழுந்ததும் கணவன் எங்கு போகின்றான். யாருடன் கதைக்கின்றான் எவருக்கு என்ன கொடுக்கின்றான் என்று ஒன்று விடாது கண்கொத்திப் பாம்பாக நோட்டமிடும் பெண்கள் குடும்பத்தின் கண்கள் தானே!



## பித்தன் பதில்கள்

---

## சொற்சிலம்பம் - போட்டி இல: 488

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ■ | 4 | 5 | |
| 6 | | | ■ | 7 | | | ■ |
| 8 | | | 9 | ■ | 10 | | 11 |
| | ■ | 12 | | 13 | | ■ | |
| ■ | 14 | ■ | 15 | | ■ | 16 | |
| 17 | | 18 | | ■ | 19 | | |
| 20 | | | ■ | 21 | | | |
| 22 | | ■ | 23 | | | | ■ |

அனுப்புபவர் பெயர்:..............................................................

விலாசம்:..............................................................

..............................................................

கையொப்பம்:..............................................................

### மேலிருந்து கீழ்

01. இயல்பு
02. தேர்தலில் அளிப்பது இதனை.
03. பொறுக்கும் போக்கு.
04. ஒரு மரக்கறி வகை.
05. நெஞ்சுக்குப் பின்புறம்.
09. தமிழ்ப் பகுதிகளில் திடீரென முளைப்பது இவரின் சிலை.
11. தென்னிந்தியப் பகுதி.
13. மேடையை மறைப்பது இது.
14. பிரபல தமிழ் நடிகர்.
16. மூடப்பட்ட குறியீடு.
17. யாகத்தில் சமர்ப்பிக்கப்படுவது.
18. எலி போன்றவற்றின் வீடு.
19. வெடித்தால் சேதம் ஏற்படுத்துவது.
21. இசைப்பாட்டு.

### இடமிருந்து வலம்

01. உயிர்ச் செயற்பாட்டில் ஒன்று.
04. பாக்குத் தரும் மரம்.
06. நிலுவை.
07. முதலாவது ஈர் இலக்க எண்.
08. பாடசாலையின் உள் அலகு.
10. தகைமைத் தன்மை.
12. மகள்.
15. நிலம்.
16. குரங்கு.
17. சூரியன்.
19. இதைச் செய்ய செய்ய குனிபவன் மடையன், செய்பவனும் மடையன்.
20. சிறிய பாத்திரம்.
21. பொருள்.
22. சாப்பிடு.
23. அவசியம்.

## சொற்சிலம்பம் போட்டி இல. 488

*சொற்சிலம்பம் 488 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்கவேண்டிய இறுதித் தினம் 2011 ஆண்டு ஒக்ரோபர் 10 ஆம் திகதி ஆகும். விடைகள், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் 16.10.2011 ஆம் திகதிய சுடர்ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும்.*

*முதலாவது பரிசாக ரூபா 250 உம், இரண்டாவது பரிசாக ரூபா 150 உம், மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக்குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.*

*அனுப்பவேண்டிய முகவரி:*
**சுடர் ஒளி யாழ். அலுவகம்,**
**361, கஸ்தூரியார் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

### போட்டி இல. 485 இல் பரிசு பெற்றோர்

1 ஆம் பரிசு — **எம்.பீ.முகைடீன்,**
இல.352, மதராசா வீதி,
பெரிய நீலாவணை.

2 ஆம் பரிசு — **க.பிரசாந்த்,**
இல.52/9. உடையார் லேன்,பழம்வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

3 ஆம் பரிசு — **எஸ்.மோகனதாசன்,**
சஞ்சீவன் ரயர் வேக்ஸ்,
முறிகண்டி.

## சொற்சிலம்பம் போட்டி இல.485 விடைகள்

### மேலிருந்து கீழ்

**01.தேசவழமை 02.சாமரை 03.பதி 04.திருமதி 05.அகல்தல் 06.கள் 09.மதி 11.புவனம் 14.சம்பவம் 16.கலக்கம் 18.தாபகன் 19.நம் 21.ரதி 22.சாது 24.சதா**

### இடமிருந்து வலம்

**01.தேசாதிபதி 05.அக 07.சம 08.திருமகள் 10.வரைபு 12.மதில் 13.வசதி 15.தல் 17.மைதானம் 19.நல்ல 20.மம்பரம் 22.சாக 23.வதி 24.சக 25.துன்பம் 26.சதாம்**

## பாராட்டுப் பெறுவோர்

**(1) அ.ஸ்ரீஸ்கந்தராஜா,**
இல.15/11, புவனேஸ்வரி அம்பாள் வீதி, நல்லூர் கிழக்கு, யாழ்ப்பாணம்.

**(2) திருமதி.பா.செல்வராணி,**
பெண்கள் கூட்டு விடுதி, உள்வட்ட வீதி, வவுனியா.

**(3) தி.ஹேமலதா,**
மாயக்கை, அல்வாய் வடக்கு , அல்வாய்.

**(4) ஸ்ரீஸ்கந்தராஜா சுரேன்,**
சிறுப்பிட்டி வடக்கு, நீர்வேலி.

**(5) எம்.எஸ்.எம்.ஸனூஸ்,**
முத்துப் போர்வை, கொடியாரு புற.

**(6) திருமதி.சி.யோகாம்பிகை,**
இல.107,பொற்றொழிலாளர் வீதி, மட்டக்களப்பு.

**(7) எம்.ஏ.அத்தாஸ்,**
ரஹ்மத் மன்ஸில், இல.141/1. குமாரதுங்க மாவத்தை, மாத்தறை.

**(8) ந.மகேஸ்பரராஜா,**
இல.21/22, புதுமுகத்துவார வீதி, கல்லடி, மட்டக்களப்பு.

**(9) க.சூரியகுமாரன்,**
இல.136, ஜெயந்தி நகர், கிளிநொச்சி.

**(10) நா.கிருபாகரன்,**
இல.131/3, வலது கரை, முத்து ஐயன்கட்டு, ஒட்டுசுட்டான்.


பியூட்டின்
Beautine
சருமம்,
தலைமுடி
மற்றும் நகங்களிற்கு
"சௌந்தர்யம் உள்ளிருந்து"
World's 1st Solubilised Keratin
(Functional Keratin)
தோலின் சுருங்கி விரியும் இயல்பையும், வலிமையையும் அதிகரிக்கும்.
தோல் கலங்களின் பிரிதலையும் புதிய கலங்கள் உருவாதலையும் அதிகரிக்கும்.
தோலின் திடகாத்திரத் தன்மையை அதிகரிக்கும்.
தலைமுடியின் மேலணியினுள் உட் சென்று மேல் கவசம் போல் தொழிற்படும்.
(CoQ10)
கலங்களின் புத்தாக்கத்தை தூண்டும்.
தோல் மீளமைப்பில் பங்கேற்பதுடன் தோலில் ஏற்படக்கூடிய பாதிப்புக்களை குறைக்கும்.
தோல் கலங்களினுள் ஊடுருவும்.
Active Nutrient Information
(Biotin)
தோல், தலைமுடி, நகங்கள் ஆகியவற்றன் ஆரோக்கியத் தன்மையை அதிகரிக்கும்.
தலைமுடிக்கு ஊட்டச்சத்தை வழங்குவதுடன் மயிர்கலங்களூல் ஊடுருவி தலைமுடி உதிர்தலை தடுக்கும்.
(Collagen Hydrolyzed)
தோலின் ஈரலிப்பு தன்மையை அதிகரிக்கும்.
தோலின் வழவழப்பு தன்மை மேம்படும்.
தோலின் சுருங்கி விரியும் இயல்பை அதிகரிக்கும்.
தோல் சுருக்கத்தை படிப்படியாக குறைக்கும்.
Beautine
Skin, Hair & Nails
Functional Keratin
Collagen Hydrolyzed
CoQ10
Biotin
30 Capsules
Beautiful From Within
பியூட்டின் என்பது விஞ்ஞான முறையில் நீண்ட கால ஆராய்ச்சிக்குப் பின் சர்வதேச ரீதியில் பெற்றுக்கொள்ளப்பட்ட மூலப்பதார்த்தங்களைக் கொண்டு உத்தரவாதம் மிக்க பெறுபேறுகளை தரக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டுள்ளது. இது தனித்துவமான போசனைக்கூறுகளை கொண்டு சருமம், தலைமுடி மற்றும் நகங்களிற்கு போசனையையும் பாதுகாப்பையும் உள்ளிருந்து வழங்குவதுடன் அவற்றை ஆரோக்கியமாக பராமரிக்கின்றது. இவ்வாறாக பியூட்டின் சருமத்தில் பயன்படுத்தப்படும் கிறீம்களை போலல்லாது ஆழமாக தொழிற்பட்டு சிறந்த பெறுபேறுகளை வழங்குகின்றது.
For More Information : beautine@astron.lk
011 5238163
Astron
Estd. 1956
Manufactured & Marketed by:
ASTRON LIMITED, 688, Galle Road, Ratmalana. Tel : 011 2636741 / 011 5566741
Fax : 011 2636173 E-mail : astron@astron.lk Web : www.astron.lk
www.ideabase.us


லொறி, டிபர், ட்ரக்
வாகனங்களுக்கு
லீசிங் சுமை குறைக்கப்பட்டுள்ளது
பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத
லொறி, டிபர், ட்ரக் கனரக வாகனங்களை
மிக இலகுவான முறையில் குறைந்த வட்டியில்
லீசிங் அடிப்படையில் பெற்றுக் கொள்ள
சென்ட்ரல் பினான்ஸ் நிறுவனத்திற்கு வாருங்கள்.
CF
சென்ட்ரல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி
உடன் தொடர்புகளுக்கு 0112315215
கொழும்பு (011) 2300555 கண்டி (081) 2227000 அல்லது அருகிலுள்ள சென்ட்ரல் பினான்ஸ் கிளை அலுவலகத்திற்கு வாருங்கள் வெப்.தளம். www.cf.lk & www.cfautomart.com

Stayfree®

# Feminine Hygiene

Feminine hygiene or women's personal hygiene is to keep her body, particularly her private areas clean and healthy. The importance of keeping such cleanliness should be known by all women so that concerns relating to, but not limited to, menstrual periods, vaginal discharge and yeast infections could be avoided. Personal hygiene problems that are unique to all women involve dealing with the above mentioned matters. Common issues related to feminine hygiene are mostly due to failure to wash underwear and changing of pads during menstruation and vaginal discharge. Focusing on hygiene during periods, Dr Sumitra clarifies common doubts relating to this subject.



fpa SRI LANKA
enriching relationships

**Dr.Sumithra Thisera**
Medical Director
Family Planning Association

**Firstly, what is the difference between a cloth pad and a sanitary napkin?**

A cloth pad is a reusable piece of folded fabric kept to hold menstrual blood. A sanitary napkin is a disposable absorbent fabric pad used for the same purpose.

**Which is a better choice?**

Disposable sanitary napkin simply because once used its thrown away. When using cloth pads and if it is not washed & sanitized properly before reusing, It could lead to many hygienic problems.

**Common complaints from women of all ages during menstruation are rashes and infections on the private areas. Why are these discomforts common during periods?**

These discomforts are common during monthly periods for those who do not change their pads frequently enough. Also infections occur when one washes their private areas with disinfectant soaps to get rid of the odor during periods. This should be avoided as the area is quite sensitive, harsh chemicals present in such soaps causes infections and rashes. The private area should be washed only with water using a mild soap.

**How often should pads be changed during periods?**

During day time pads should be changed at least every 6 hours. At night however heavy flow pads could be used and should be changed first thing next morning.

**What should be kept in mind when selecting sanitary pads?**

Problems during periods are usually those related to rash/infections, odors and mostly leaks. So when choosing pads, one should go for pads made of good high absorbent material, a shape that best fits you and those that are lightly fragrant so it would lock the odor.

For any clarifications, please send your questions to **askdoctor@fpasrilanka.org** or **call on 2588488**




Freedom to live

**18 Anti Leak channels**
To help direct fluid into the pad, Thus helping faster absorption

**Wings**
To hold the pad securely in place and help prevent side leakage

**Dry net cover**
To give you a long lasting dry feel

Price: 110/-

செண்ட்ரல் பினான்சின்

மாபெரும்

# வாகன சந்தை



செப்டெம்பர் 23, 24 மற்றும் 25ம் திகதிகளில்

## யாழ்ப்பாணம்

நகர சபை மைதானத்தில்
(சுப்பிரமணியம் சிறுவர் பூங்கா எதிரில்)
பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

அனுமதி இலவசம்

| மக்ஸிமோ ட்ரக் | டாடா நனோ | டிமோ பட்டா | மைக்றோ பண்டா | திரீ வீல் குத்தகை |
|---|---|---|---|---|
| முதல் கொடுப்பனவு ரூ. 99,000/-* காப்புறுதி இலவசம் | முதல் கொடுப்பனவு ரூ. 99,000/-* | முதல் கொடுப்பனவு ரூ. 99,000/-* காப்புறுதி இலவசம் | முதல் கொடுப்பனவு ரூ. 150,000/-* | |

- ஜப்பான், இந்தியா மற்றும் சீன உற்பத்திகளான பதிவு செய்யப்பட்டதும் பதிவு செய்யப்படாததுமான மோட்டார் சைக்கிள்கள், முச்சக்கரவண்டி, கார்கள், வேன்கள், ட்ரக், ட்ரக்டர்கள், லொறி உட்பட அனைத்துவிதமான வாகனங்களுக்கு லீசிங் வசதி செய்து கொள்ளவும் வாகனங்களை விலைக்குப் பெற்றுக்கொள்ளவும் வாருங்கள்.
- இந்த நாட்டிற்கு வாகனங்களை இறக்குமதி செய்து விநியோகிக்கின்ற அனைத்து முக்கிய விற்பனை பிரதிநிதித்துவ நிறுவனங்களின் பங்களிப்பு.
- குறைந்த பட்ச மாதாந்த தவணையில் கொடுப்பனவு வசதி.
- துரித ஒருநாள் சேவையின் மூலமாக அன்றைய தினத்திலேயே வாகனத்தை எடுத்துச் செல்லக்கூடிய சந்தர்ப்பம்.
- முச்சக்கரவண்டி, மக்ஸிமோ ட்ரக், டாடா நனோ, மைக்றோ பண்டா, மற்றும் டிமோ பட்டாவுக்கு விசேட குத்தகை வசதி.

செண்ட்ரல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி


இல. 364, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பேசி 021 222 1608 / 021 222 1942

சுஜீவ் 0779 266382 ஹிமால் 0774 115601


# 60 இலட்ச ரூபாய்க்கு ஏலம் போன தொப்பி!

பிரிட்டிஷ் இளவரசர் வில்லியம்ஸூக்கு, சமீபத்தில், லண்டனில் கோலாகலமாகத் திருமணம் நடந்தது. இந்த திருமண விழாவில் கலந்து கொண்ட பெண் வி.ஐ.பி.,க்கள், பார்வையாளர்களின் கவனத்தை கவர்வதற்காகவும், தங்களின் அந்தஸ்தைக் காட்டும் வகையிலும், வித்தியாச மாக, வடிவமைக்கப்பட்ட தொப்பிகளை அணிந்து வந்த னர். இதில், இளவரசர் சார்ல்ஸின் தம்பி மகளான, இள வரசி பெட்ரைஸ் அணிந்து வந்த தொப்பி தான், படு கலக்கலாக இருந்தது. சுருள், சுருளாக, இளம் சிவப்பு நிறப் பட்டுத் துணியில் வடிவமைக்கப்பட்டிருந்த இந்தத் தொப்பி, டொய்லெட் சீட் (டொய்லெட் இருக்கை போல் தோற்றமளிக்கும்) தொப்பி, என அழைக்கப்பட்டது. திருமணத்துக்கு வந்த, அனைவரின் பார்வையும், இந்த தொப்பி மீது தான் பதிந்திருந்தது.

தான் பயன்படுத்திய தொப்பியை, ஏலம் விட்டு, அதில் இருந்து கிடைக்கும் நிதியை, ஏழைக் குழந்தைகளின் வளர்ச்சிக்காக கொடுப்பது என, பெட்ரைஸ் முடிவு செய்தார். சமீபத்தில், இந்தத் தொப்பி ஏலம் விடப்பட்டது. ஏலத்தில் பங்கேற்ற பலரும், போட்டி போட்டு ஏலம் கேட்டனர். இறுதியில், அறுபது லட்ச ரூபாய்க்கு, இளவரசியின் தொப்பி ஏலம் எடுக்கப் பட்டதும், அனைவரும் ஆச்சரியத்தில் ஆழ்ந்தனர். இளவரசியின் தொப்பியை ஏலம் எடுத்தவர் என்ன கூறினார் தெரியுமா? இளவரசி அணிந்திருந்த தொப்பியை, நம்மால் தொட்டுக் கூடப் பார்க்க முடியாது என, ஆரம்பத்தில் நினைத்திருந்தேன். தற்போது, அந்த தொப்பி, எனக்கே எனக்குச் சொந்தமாகி விட்டதை நினைத்து, மகிழ்ச்சியில் திளைக்கிறேன் என்றார். எப்படியோ, நல்ல காரியத்துக்காக, இந்தப் பணம் செலவிடப்படுவதில், அனைவருக்குமே மகிழ்ச்சி தான்.






VERGLEICHEN SIE UNS MIT DEUTSCHLAND

**STEVE**
Komplette Eckpolstergruppe
Textil-Leder weiss
Stoff anthrazit
In diversen Farbvarianten erhältlich
Mit Bettauszug
292(196)x85x94
Liegefläche: 130x240



€URO 1530.-
CHF 1690.-

Möbel Ferrari

HINWIL

Tel. 044 931 20 40
info@moebel-ferrari.ch
moebel-ferrari.ch

**Öffnungszeiten**
Montag-Freitag
9.00-20.00
Samstag
9.00-18.00

Möbel zum Schlafen, Essen und Wohnen. Benvenuti a Hinwil.

0.0% Direkt Finanzierung



இப்பத்திரிகை கொழும்பு - 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் எண்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2011, செப்ரெம்பர் 25 ஆம் திகதி வெளியிடப்பட்டது.